# சகுந்தலை விலாசம்

**இராமச் சந்திரகவிராயர்**

சென்னைப் பல்கலைக்கழ்கம்
சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக
அளிக்கப்பெறும் பதிப்பேடு.

பதிப்பு:
**வ. இளங்கோவன்**

நெறியாளர்:
முனைவர் **ய. மணிகண்டன்,**
விரிவுரையாளர்,
தமிழிலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,

**தமிழிலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக் கழகம்**
சென்னை - 600 005.
மே 2003 - 2004.

# சகுந்தலை விலாசம்

**இராமச் சந்திரகவிராயர்**

சென்னைப் பல்கலைக்கழகம்
சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயத்திற்காக
அளிக்கப்பெறும் பதிப்பேடு.

பதிப்பு:
**வ. இளங்கோவன்**

நெறியாளர்:
முனைவர் **ய. மணிகண்டன்,**
விரிவுரையாளர்,
தமிழிலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்

**தமிழிலக்கியத்துறை**
**சென்னைப் பல்கலைக் கழகம**
சென்னை - 600 005.
மே 2003 - 2004.

சுவடியியல்

மற்றும்

பதிப்பியல்

பட்டயத்திற்காக

அளிக்கப்பட்ட

பதிப்பு வரிசை எண்.

**வ. இளங்கோவன்,**
சுவடியியல் மற்றும் பதிப்பியல்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

# ஆய்வாளர் உறுதிமொழி

இராமச் சந்திர கவிராயர் அவர்களால் எழுதப் பெற்ற **'சகுந்தலை விலாசம்'** என்னும் இந்நூல் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப்பேற்றிற்காக எனது சொந்த முயற்சியால் ஒலைச்சுவடியிலிருந்து பதிப்பித்து உருவாக்கப்பட்டதாகும். இதற்கு முன் வேறு எந்த ஆய்வுப்பட்டத்திற்கும் இப்பதிப்பு நூல் அளிக்கப் படவில்லை என உறுதிகூறுகிறேன்.

சென்னை - 600 005. **(வ. இளங்கோவன்)**
நாள் :

**ய. மணிகண்டன்**
விரிவுரையாளர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

# மேற்பார்வையாளர் சான்றிதழ்

இராமச்சந்திர கவிராயர் அவர்களால் எழுதப்பெற்ற **'சகுந்தலை விலாசம்'** என்னும் ஓலைச்சுவடி நூலை மேற்படி சுவடியிலிருந்து பெயர்த்து எழுதி **வ. இளங்கோவன்** செய்துள்ள இப்பதிப்பு சென்னைப் பல்கலைக்கழகம் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப்பேற்றிற்காகப் பதிப்பிக்கப்பட்டது என்றும் இப்பதிப்பின் மீது வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப்படவில்லை என்றும் சான்று அளிக்கிறேன்.

சென்னை - 600 005
நாள் :

**(ய. மணிகண்டன்)**
மேற்பார்வையாளர்.

# பதிப்புரை

சுவடிகளில் எழுதப்பெற்ற எண்ணிறந்த இலக்கிய இலக்கணங்களை நூல்வடிவில் வெளிக்கொணர்வதே சுவடிப் பதிப்பாகும். தமிழ் இலக்கிய வளர்ச்சியை முதன்மை படுத்தி அச்சில் வராத, அச்சில் வந்தும் மறைந்து போன சுவடிகளைப் பதிப்பித்தலே சுவடிப்பதிப்பின் நோக்கமாகும். இந்நோக்கத்தோடு, 'சகுந்தலை விலாசம்' என்ற சுவடி நூல் சென்னைப் பல்கலைக்கழகம் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காகப் (2003 - 2004) பதிப்பிக்கப் படுகிறது.

இராமச் சந்திர கவிராயர் அவர்களால் இசை நாடக வடிவில் பாடப் பெற்ற சகுந்தலையின் கதையாகிய இந்நூலுள் இசை நாடக வடிவிற்குரிய இசைக் கூறுகளும் நாடகக் கூறுகளும் இடம்பெற்றுள்ளன.

இப்பதிப்பின் முதல் பகுதியில் ஆய்வு முன்னுரையாக விலாச நூல்கள் குறித்த ஒரு பார்வை, நூலாராய்ச்சி, சகுந்தலை விலாசத்தின் கதைச் சுருக்கம் ஆகியன இடம் பெற்றுள்ளன. இரண்டாம் பகுதியில், நூலில் இடம் பெற்றுள்ள நாடகமாந்தர்கள் பற்றிய குறிப்பும் சுவடியி லிருந்து பெயர்த்தெழுதப்பட்ட நூலின் மூலமும் இடம் பெற்றுள்ளன. ஆய்வுப் பகுதிக்கு ஒரே ஒரு சுவடியை எடுத்துக் கொண்டதால் பாடபேதங்களோ ஒப்புமை பகுதிகளையோ கூறமுடியவில்லை. மூன்றாம் பகுதியில்

பிற்சேர்க்கைகள், முதற்குறிப்பகராதி, துணை நூற் பட்டியல் ஆகியன இடம் பெற்றுள்ளன.

இந்நூலின் பதிப்புப்பணி முடிந்தவுடன், சகுந்தலை விலாசம் தொடர்பான சுவடிகள், நூல்கள் இருக்கின்றனவா என ஆராய்ந்த போது, 'சகுந்தலை மாலை (சகுந்தலை விலாசம்)' என்ற சுவடி கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த் திசைச் சுவடி நூலகத்தில் இருப்பது தெரிய வந்துள்ளது.

'சகுந்தலை விலாசம்' என்ற அச்சு நூலொன்று 1888 ஆம் ஆண்டு வெளிவந்ததாய்த் தெரிகிறது. இருப்பினும் இந்நூல் கிடைக்கப்பெறவில்லை.

மேற்குறித்த சுவடி நூலும் அச்சு நூலும் கிடைத்திருப்பின் **'சகுந்தலை விலாசம்'** என்னும் இப்பதிப்பு விரிவாய் அமைந்திருக்கும்.

# நன்றியுரை

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பில் சேர்ந்து இச்சுவடிப் பதிப்பைச் செய்ய வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் பேராசிரியர் வீ. அரசு அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது சுவடிப்பதிப்பிற்கு நெறியாளராக இருந்து சுவடிநெறிமுறைகளையும், ஆய்வுப் பதிப்பு முறைகளையும் எடுத்தியம்பி சுவடிப்பதிப்பை ஆய்வுப் பதிப்பாக உரு வெடுக்க வழிப்படுத்திய, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறை முனைவர் **ய.மணிகண்டன்** அவர்களுக்கும் எனது ஆசிரியப் பணிகளுக்கு இடையிலும் இப்பட்டய வகுப்பில் சேர்ந்து பயில வாய்ப்பளித்து தம் நூலகத்தின் வாயிலாக நூல்களை வழங்கிய ஸ்ரீஇராம் தயாள் கெம்கா விவேகானந்தா வித்யாலயா பள்ளிக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் படிப்பிற்கு ஊக்கமளித்து உதவிய எனது பெற்றோர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'சகுந்தலை விலாசம்' என்னும் ஓலைச்சுவடியையும், தாள் சுவடியையும் அளித்து உதவிய அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தார்க்கும், ஆய்விற்குரிய நூல்களைத் தந்துதவிய மறைமலையடிகள் நூலகத்தார்க்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச் சுவடிப்பதிப்பு நூலை அச்சிட்டுத் தந்த அன்றில் பதிப்பகத்தாருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

சுவடியியல் தொடர்பான செய்திகளை எடுத்துக்கூறி இச் சுவடியைப் பதிப்பிப்பதற்கு உதவிய எனது துணைவி நா. ரேணுகா அவர்களுக்கும், நூல் உருவாவதற்கு உதவிய தோழி ந.ஆனந்தி அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

# உள்ளடக்கம்


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| **முதல் பகுதி** | |
| ○ ஆய்வு முன்னுரை | 1 |
| ○ சகுந்தலை விலாசம்-நூலாராய்ச்சி | 4 |
| ○ நூலாசிரியர் | 10 |
| ○ சகுந்தலை விலாசம் - கதைச்சுருக்கம் | 12 |
| **இரண்டாம் பகுதி** | |
| ○ சகுந்தலை விலாசத்தில் இடம் பெற்றுள்ள கதை மாந்தர்கள் | 19 |
| ○ சகுந்தலை விலாசம்- நூல் மூலம் | 20 |
| **மூன்றாம் பகுதி** | |
| ○ காளிதாசரின் சகுந்தலை நூலின கதைச் சுருக்கம் | 91 |
| ○ வில்லிபாரதம் கூறும் சகுந்தலை -துஷ்யந்தன் குறித்த செய்தி | 93 |
| ○ வியாச பாரதம் கூறும் சகுந்தலை - துஷ்யந்தன் கதை | 94 |
| ○ காளிதாசரின் சகுந்தலைக்கும் சகுந்தலை விலாசத்திற்கும் உள்ள வேறுபாடுகள் | 108 |
| ○ சகுந்தலை கதை கூறும் நூல்களின் பட்டியல் | 111 |
| ○ நடிக்கப் பெற்ற சகுந்தலை நாடகங்கள் | 112 |
| ○ விலாச வகை நூல்களின் பட்டியல் | 112 |
| ○ செய்யுள் முதற் குறிப்பு அகராதி | 116 |
| ○ அருஞ்சொற் பொருள் அகராதி | 120 |
| ○ துணைநூற் பட்டியல் | 124 |

# முதல் பகுதி

- ஆய்வு முன்னுரை
- சகுந்தலை விலாசம்-நூலாராய்ச்சி
- நூலாசிரியர்
- சகுந்தலை விலாசம் - கதைச்சுருக்கம்

# ஆய்வு முன்னுரை

## விலாச நாடகங்கள் - ஒரு பார்வை

முத்தமிழில் ஒன்றாய் நாடகத்தமிழை வைத்து போற்றி வளர்த்த மரபு தமிழ்மொழிக்கு உண்டு. நீண்ட நெடிய வரலாற்றையுடைய நாடகத்தமிழின் தொன்மையையும் வளர்ச்சியையும் அறிவதற்குரிய முந்தைய காலத் தமிழ் நாடக நூல்கள் கிடைக்கப்பெறவில்லை. இருப்பினும் நாடக வழக்கு குறித்து,

> **"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
> **பாடல் சான்ற புலநெறி வழக்கம்**
> **கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்**
> **உரிய தாகும் என்மனர் புலவர்"**

(தொல். அகத். நூற். 56)

எனத் தொல்காப்பியம் பேசியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியம் காலந்தொட்டு வழங்கி வந்த நாடகங்களுள் தற்போது நமக்குக் கிடைத்துள்ள நாடக நூல்கள் யாவும் பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாக உள்ளன. பிற மொழிகளின் செல்வாக்காலும் தாக்கத் தாலும் தன் வடிவில் நெகிழ்ச்சியடைந்து பல புதிய நாடக வகைகள் தமிழில் புகுந்தன. இவ்வகையில் வடமொழி யாளரின் செல்வாக்கு ஓங்கியிருந்த காலத்தில் தமிழில் விலாச நாடகங்கள் தோன்றி வளர்ந்தன. பதினேழாம் நூற்றாண்டிலிருந்து 'விலாசம்' என்ற பெயர் தாங்கி பல நாடக நூல்கள் தோன்றின.

விலாச நாடகங்களில் சிற்றிலக்கியக் கூறுகளும் இசைக் கூறுகளும் காணப்படுகின்றன. பின்னாளில்

தோன்றிய விலாச நாடகங்கள் மேனாட்டு நாடக முறையில் அங்கம், களம் என்ற பிரிவுகளுடன் யாப்பு அமைந்த பாடல்களையும் பெற்று வந்தன. இவ்வாறு விலாச நாடகங்கள் காலத்திற்கேற்ப தம்மை வடிவமைத்துக் கொண்டன.

## விலாசம் என்பதன் பொருள்

விலாசம் என்ற சொல்லுக்கு அழகு, ஆடவர் மகளிர் விளையாட்டு, விநோதம், வேடிக்கை, குறியீடு, இலீலா அபிநயம், நாணக் குறிப்பு, பத்திரிகையின் புறவெழுத்து, பொழுது போக்கு, விளையாட்டு, வியாபாரக்குறி விலாசம், வாழை, ஓர் பிரபந்தம் மேல் விலாசம், நாடக நூல் எனப் பொருள் தருகிறது மதுரைத் தமிழ் பேரகராதி.

இப்பொருள்களுடன் இன்னும் சில பொருள்களையும் பிற அகராதிகள் தருகின்றன.

இப்பொருள் விளக்கங்களைக் கொண்டும் நாடகப் பொருண்மையைக் கொண்டும் ஆடவர் மகளிர் விளை யாட்டு, நாணக்குறிப்பு, வேடிக்கை, விநோதங்கள், நாடக நூல் என்பன போன்ற அமைப்பினை உடைய விலாசநூல்கள் உள்ளன என்பது தெளிவாகிறது.

## விலாச நூல்களின் வளர்நிலை

வடமொழியினூடாகத் தமிழுக்கு வந்த விலாச நாடகங்களின் தொடக்க காலம் எதுவென அறிய இயல வில்லை. இன்று நமக்குக் கிடைத்துள்ள விலாச நூல்களில் ''அண்டகோள விலாசம்' என்ற நூலே பழமையானது என்றும், அது 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்றும் இந்நூலைப் பதிப்பித்த அரசினர் கீழ்த்திசை நூலகப் பதிப்பு கூறுகிறது.

மெல்லமெல்லப் பரவிய இவ்விலாச நாடகங்கள் 17, 18 நூற்றாண்டுகளில் மிகுதியாக வளர்ந்தன. பல நூல்கள் விலாச நாடக அமைப்பில் இல்லாவிட்டாலும் 'விலாசம்' என்ற பெயர் தாங்கி வந்தன. இதற்கு விலாச நாடகங்களுக்கு இருந்த செல்வாக்கே காரணமாகும்.

விலாச நாடகங்கள் பலவகையான இசைப்பாடல் களையும் விருத்தங்களையும் கொண்டிருந்தன. இருப்பினும் மேனாட்டார் வருகைக்குப் பின் வெளிவந்த பலவிலாச நாடகங்கள் மேனாட்டு நாடகமுறைக்கேற்ப அங்கம், களம் என்ற பிரிவுகளுடன் அமைந்திருந்தன.

அங்கம், களம் அமைந்த நாடகங்களைக்காட்டிலும் முந்தைய வகை நாடகங்களே மிகுதி.

இசையமைப்பையும் யாப்பு வகைகளையும் கொண்ட விலாச நாடகங்களில் சிற்றிலக்கியக் கூறுகள் பல காணப்படுகின்றன. இதனால் இவற்றைச் சில இலக்கணப் பிரபந்த நூல்கள் சிற்றிலக்கியக் கூறுகளுக்குள் இணைக்க முனைந்துள்ளன. சில நூல்கள், விலாச நூல்கள் சிலவற்றின் பெயர்களை மட்டும் குறிப்பிட்டுள்ளன.

நாடகத் தமிழின் ஒரு கூறாக விளங்குகின்ற விலாச நாடகங்கள் வடமொழியிலிருந்து வந்ததாயிருப்பினும் தமிழ் மொழி மரபிற்கு ஏற்ப இலக்கிய நயம் சந்த நயம் பொருந்தி இயற்றப்பட்டன. இவ்விதமாக இராமச்சந்திர கவிராயர் அவர்களால் எழுதப்பெற்ற 'சகுந்தலை விலாசம்' என்னும் சுவடியைப் பதிப்பிப்பதன் மூலம் விலாச நூல் அமைப்பையும், கருத்தையும் ஆய்வு உலகிற்கு வெளிப்படுத்துவதே இச்சுவடிப் பதிப்பின் நோக்கமாகும்.

## 'சகுந்தலை விலாசம்-நூலாராய்ச்சி

மகாபாரதத்தில் ஆதி பருவத்தில் சிறு நிகழ்ச்சியாகக் குறிப்பிடும் துஷ்யந்தன்-சகுந்தலையின் கதையை மையமாகக் கொண்டு காளிதாசர் சகுந்தலை காவியத்தை இயற்றினார். தமிழில் சகுந்தலை குறித்த பதிவுகள், பிறவற்றைப் பார்க்குங்கால் குறைவே. இருப்பினும் சகுந்தலை குறித்த ஆய்வுகளும் நூல்களும் வெளி வந்திருந்தன. அதனுள் இராமச் சந்திர கவிராயர் எழுதிய இசை நாடக வடிவமான 'சகுந்தலை விலாசம்' என்னும் நூல் நடிப்பதற்கேற்ற முறையில் காவிய அமைப்புடன் சிறந்து விளங்குகிறது.

இசைக் கூறுகளையும் நாடகக் கூறுகளையும் பெற்றமைந்த நூலாய் இந்நாடகநூல் விளங்குகிறது. இந்நாடக நூலில் எண்வகைச் சுவையும் காணப்படுகிறது. இந்நூல் காளிதாசரின் சகுந்தலை கதையமைப்பிலும் பொருண்மையிலும் இருந்து வேறுபட்டு, மகாபாரத ஆதிபருவத்தில் வந்த துஷ்யந்தன்-சகுந்தலை கதை அமைப்பைக் கொண்டதாய் உள்ளது.

### சகுந்தலை விலாசம் - சுவடிகுறிப்பு

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் 'சகுந்தலை விலாசம்' என்ற ஓலைச் சுவடி ஆர்2584 என்ற எண்ணிடப் பெற்று அமைந்துள்ளது. இந் நூலகத்தில் இச்சுவடியிலிருந்து தாளில் படியெடுக்கப்பட்டுப் பாது காக்கப்பட்டுள்ள தாள் சுவடி ஒன்றும் உள்ளது. இத்தாள் சுவடி 1963ஆம் ஆண்டு வை.முரு. முத்துக்குமாரசாமி

என்பவரால் படியெடுக்கப்பட்டுள்ளது. இத்தாள் சுவடி ஆர் 7965 என்ற எண்ணிடப்பெற்று பாதுகாக்கப்படுகிறது.

இம் மூலச்சுவடி 1950-51 ஆம் ஆண்டு கே. சண்முகம் என்பவரிடமிருந்து அன்பளிப்பாகப் பெறப்பட்டு இந்நூலகப் பாதுகாப்பில் இருந்து வருகிறது.

'சகுந்தலை விலாசம்' என்னும் இச்சுவடி இந் நூலகத்தில் இருந்து இதுவரையில் வெளியிடப் பெற வில்லை. சுவடி நிலையில் இருக்கும் நூல்களைப் பதிப்பிக்கும் நோக்கத்தில், சென்னைப் பல்கலைக் கழகச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காக இந்நூல் பதிப்பிக்கப்படுகிறது. இதனூடாக ஒரு சுவடி பதிப்பு நிலையை அடைகிறது.

## புற அமைப்பு

ஏட்டின் முதலிலும் முடிவிலும் வெற்றேடு உள்ளது. ஏடுகள் தொடச்சியாய்த் தமிழ் முறையில் எண்ணிடப் பெற்றுள்ளன. இருப்பினும் இரு ஏடுகளுக்கு ஒரே எண்ணிடப்பெற்று பின்னர் ஒரு ஏட்டிற்கு எண் மாற்றப் பட்டுள்ளது (35 ஆம்ஏடு).

ஏடுகள் நல்ல நிலையிலும் எழுத்துகள் தெளிவான முறையிலும் உள்ளன. ஒன்றிரண்டு இடங்களில் சிதைவு ஏற்பட்டுள்ளது.

ஏட்டினுள் எழுதப்பட்டுள்ள அடிகள் அளவொத்துக் காணப்படவில்லை. அதே போன்று ஒன்றிரண்டு ஏடுகளில் ஒரு புறம் மட்டும் எழுதப்பட்டுள்ளது. (15 ஆம் ஏடு )

## அக அமைப்பு

ஏட்டின் அக அமைப்பு தொடக்கம், நூல் பகுதி, முடிவு என்று காணப்படுகிறது. 'சகுந்தலை விலாசம்' என்று நூலின் பெயரும் பின்னர் 'சகுந்தலை நாடகம்' என்றும் எழுதப் பட்டுள்ளது.

### (1) தொடக்கம்

சுவடியின் தொடக்கமாக முதல் ஏட்டின் இடது ஓரம் "ஹரி ஓம் நன்றாக. குரு வாழ்க. குருவே துணை. சாரதாம்பாள் துணை. சரவணபவன் துணை. தத்துவலிங்கம் துணை" என்ற தொடர்கள் அமைந்துள்ளன.

நூலாசிரியர், நூலில் 'இக்கதை வடநூலிருந்து விலாசமாகத் தமிழில் உரை செய்தேன்' என்றுரைத்துள்ளார்.

### (2) நூல்

கடவுள் வாழ்த்துடன் தொடக்கப் பெற்று பாடல்கள் அனைத்தும் முழுமையாக உள்ளது. பாடல்களுக்கு எண் இடப்படவில்லை.

பாடல்களும், வசனங்களும், உரையாடல்களும் இடம் பெற்றுள்ளன.

## யாப்பமைப்பு :

இந்நூலில் வெண்பா, விருத்தம், கொச்சகம், கொச்சகக் கலிப்பா, அகவல் முதலான யாப்பு வகைகள் பயின்று வந்துள்ளன. இவற்றுடன் இசை சார்ந்த நாடகக் கூறுகளான இராக, தாளப் பகுப்புடைய தரு, திபிதை எனப்படுவன அமைந்திருக்கின்றன. சிங்காரப் பத்தியம், ரூபகம், பத்தியம், தாலாட்டு போன்றவையும் உள்ளன.

உரைநடையில் 'வசனம்' என்ற பகுதி உள்ளது. இந்த வசனத்தைத் தொடர்ந்து பெரும்பாலும் தரு, திபிதை என்பன வருகிறது. இதில் தரு, திபிதைகளே மிகுதியாய் உள்ளன.

## எழுத்தமைப்பு :

ஓலைச் சுவடியில் பாடல், வசனம் என்பவை தனித்தனியே இல்லாமல் தொடர்ந்து இடம் பெற்றுள்ளன. இருப்பினும் பாடல் முடிவு பெற்ற பின் '-' என்ற குறியீடு தரப்பட்டுள்ளது. ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு எழுத்துகளிடையே வேறுபாடு தரப்பட்டாலும் எழுத்து வேறுபாட்டு மயக்கத்துடனே எழுதப்பட்டுள்ளது.

எகர, ஒகர, ஓகார உயிரெழுத்துக்களிடையேயும், ண, னகர,நகர எழுத்துக்களிடையே இவ்வேறுபாட்டு மயக்கம் தெரிகிறது. பெரும்பாலான இடங்களில் ளகரத்திற்குப் பதிலாக ழகரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சான்று : வேழ்வி - வேள்வி.

## சுவடியில் காணப்பெற்ற பிழைகளும் திருத்தங்களும் :

இச்சுவடியில் பிழையாக எழுதப்பட்ட எழுத்துக்களும் பாடல்களும் அடிக்கப் பெற்றும், அவ்விடங்களுக்கு நேராகவும் எழுதப் பெற்றுள்ளது.

ஒரே சொல் இருமுறை பயின்று வர, அவற்றுள் ஒன்று அடிக்கப்பட்டுள்ளது.

சான்று : பாவையே ~~பாவையே~~ நீ (பாடல் 49)

விடுபட்டுப்போன எழுத்துகள் அவ்விடங்களுக்கு நேர்க் கீழேயும் மேலேயும் எழுதப்பட்டுள்ளன.

சான்று : யிந்த வுலகை ; களான; ப சுடனே
சா

**சுவடிக் குறிப்பு :**

சுவடியின் வலப்பக்க ஓரத்தில் "பொன்னைய்யா கையெழுத்து" என்ற குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.(26 ஆம் பாடலின் ஏட்டில்)

**முடிவு :**

நூலின் முடிவில் மங்களத்துடன் பாடி முடிக்கிறார்.

நூலின் தொடக்க ஏட்டில், "பாரிதாபி ஹ்ஆடி மீ" சு கூ வளவனலலூரி" என்று குறிப்புள்ளது.

**பதிப்பு முறை :**

இச்சுவடியின் வேறு பிரதி சுவடிகளோ, வேறு சுவடிகளோ கிடைக்காத நிலையில் இந்நூலகத்திலுள்ள ஒரே சுவடியை ஆதாரமாகக் கொண்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. அதனால் பாட வேறுபாடுகளைக் காண இயலவில்லை.

பதிப்பில் செய்யத் தக்க சில மாற்றங்களைச் செய்துள்ளேன்.

1. பாடல்கள் அடிகளாகவும் சீர்களாகவும் பிரிக்கப் பெற்றுள்ளன.
2. சுவடியிலுள்ள மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியிடப் பெற்றுள்ளன.
3. ரகர உயிர்மெய்க்கும் 'ா' என்ற துணை எழுத்துக்கும் வரி வடிவில் வேறுபாடு அமைக்கப்பட்டுள்ளது.

4. சில இடங்களில் எழுதும் வேகத்தில் சில சொற்களை விட்டு விட்டு எழுதப்பட்டுள்ளது. அவ்விடத்திற்கு ஏற்ப பொருத்தமான சொல் கொடுக்கப்பட்டுள்ளது.

(எ.கா.) மாயிலே - மாமயிலே

**பேச்சு வழக்கு சொற்கள் :**

சுவடியில் சில பேச்சு வழக்குச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சில :

செய்குறது; பாத்து; அனிப்பி; ஓசனை; காத்தில்; மாசத்த; குடைத்தது; மிழிக்க; ரேத்தி; மகிட்சியாய்; குத்தமில்லை; குடு; வயத்தில்; அய்ந்து முதலான பல பேச்சு வழக்குச் சொற்கள் காணப்படுகின்றன.

பிற்சேர்க்கையாக காலிதாசரின் சகுந்தலை கதை, வில்லிபாரதம் கூறும் சகுந்தலை கதைச் சுருக்கம், வியாச பாரதம் கூறும் சகுந்தலை கதை, காளித்தாரின் சகுந்தலைக்கும் சகுந்தலை விலாசத்திற்கும் உள்ள வேறு பாடுகள், சகுந்தலை கதை கூறும் சில நூல்களின் பட்டியல், விலாச வகை நூல்களின் பட்டியல், அருஞ்சொற் அகராதி, முதலானவை அளிக்கப்பட்டுள்ளன. இறுதியில் இப்பதிப் பிற்கு துணை புரிந்த நூல்களின் பட்டியலும் கொடுக்கப் பட்டுள்ளன.

# நூலாசிரியர்

சகுந்தலை விலாசத்தை இயற்றியவர் குறித்த செய்தி நூலினுள்,

**"அதிர்கழல் வீரர் போற்று மணிபெறு மிராய நல்லூர்**
**கதிர்குலத் தரசன் துய்ய கவிராம சந்தி நன்றான்**
**முதிர்சுவை வடநூல்கற்றோர் மொழிந்திடுங் காதை தன்னைச்**
**சதிர்பெறு விலாச மாகத் தமிழினா லுரைசெய் தானே"**

என்ற பாடலின் மூலம் தெரியவருகிறது. நூலாசிரியர் மிராய நல்லூரைச் சேர்ந்த கவிராம சந்திரன் என்பதும் அறியப் படுகிறது.

இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழறிஞர். இவர் இராய நல்லூரில் பிறந்து சென்னையில் வாழ்ந்தவர். இவரது காலம் பற்றிய செய்திகளை அறிய இயல வில்லை.

இவர் சென்னைக் கல்விச் சங்கத்தின் தமிழ்ப் புலவராக இருந்தவர். இதனூடாகத் தமிழ்ப்பணியைச் செவ்வனே செய்துள்ளார்.

**பதிப்புப் பணி :**

சென்னைக் கல்விச் சங்கத்தின் மற்றொரு புலவரான தாண்டவராய முதலியாருடன் இணைந்து வீரமாமுனிவரின் சதுரகராதியை 1824இல் முதன் முதலாக அச்சிற் பதிப்பித்தார்.

## இயற்றிய நூல்கள் :

இவர் சகுந்தலை விலாசத்தைப் போன்றே தாருக விலாசம், இரங்கூன் சண்டை நாடகம், இரணிய வாசகப்பா, மகாபாரத விலாசம் என்னும் நாடக நூல்களை இயற்றி உள்ளார்.

'சகுந்தலை விலாசம்' என்ற நூலை ஜி. தேவரேஸ் (G. Deverze) என்பவர் 1886 - 87 இல் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த 'சகுந்தலை விலாசம்' நூலே இங்கு பதிப்பிக்கப்படுகிறது.

# சகுந்தலை விலாசம் - கதைச் சுருக்கம்

யயாதி மகாராசன் முதல் பதினைந்தாம் தலை முறைக்குப் பிற்பாடு பதினாறாந் தலைமுறையான துஷ்டி யந்த மகாராசன் யேகசக்கிரேஸ் பானாகராச்சிய பரிபாலனஞ் செய்து வருகிறார். அவ்வேளையில் விசுவாமித்திர மகாரிஷி பர்வதசாரலில் தவம் செய்வதற்காகச் சீடர்களை இடம் பார்க்கச் சொல்கிறார்.

சீடர்களில் ஒருவன் விசுவாமித்திரரிடம் சென்று தான் பார்த்துள்ள இடம் சோலைகள் சூழ்ந்திருக்கும் நல்ல இடம் என்றும் அது பெண்கள் வாசமான இடம் என்றும் கூறு கிறான். அது கேட்டு விசுவாமித்திரர் கோபப்பட்டு நான் பெண்களைக் கண்ணினாலும் பார்ப்பதுமில்லை; கருத்தில் நினைப்பதுமில்லை என்று கூறுகிறார்.

பின்பு அச்சோலையில் விசுவாமித்திரர் தவஞ் செய்கிறார். அத்தவத்தினால் ஏற்பட்ட சுவாலை தேவலோகத்தில் வீசுகிறது. அச்சுவாலைத் தாங்க மாட்டாது என்னவென்று இந்திராணி கேட்க, விசுவாமித்திரன் செய்கின்ற தவத்தினால் ஏற்பட்டது என்றும்; இதன் விளைவு என்னாகுமோ என்றும் விசனப்படுகின்றனர்.

இத்தவத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு சத்த மேகங்கள், தணலிடி, அத்திகள், அலைகடல், வடவைத்தீ, மலை, வெள்ளானை, தேவர்கள் முதலானவற்றை விட்டாலும் விசுவாமித்திரன் நடுங்க மாட்டான்; மாதராலே

முனிவரை வெல்ல வேண்டும் என்று முடிவு செய்து மேனகையை அனுப்பி வைக்கின்றனர்

மேனகை, விசுவாமித்திரர் தவஞ் செய்கின்ற இடத்திற்கு எதிரில் நிற்க, விசுவாமித்திரர் மோகங் கொள்கிறார். மேனகையின் அழகைக் காண ஒரு கோடி கண்கள் போதாது என்றும், அவள் திகழும் மாணிக்கமோ என்றும் பலவாறு புகழ்ந்து பேசுகிறார். மேனகையை நோக்கி நாம் ஒன்று கூடுவோம் என்கிறார்.

முதலில் மறுத்த மேனகை பின்னர் விசுவாமித்திரரின் சொல்லை ஏற்கிறாள். இவை அனைத்தும் தேவேந்திரனின் செயல் என உணர்ந்த விசுவாமித்திரர் மேனகையைத் திட்டி, தேவேந்திரனுக்குச் சாபங் கொடுக்க கமண்டலத்துடன் செல்கிறார்.

பின்னர் மேனகை தனக்குப் பிறந்த குழந்தையைப் போட்டு விட்டுத் தேவலோகம் சென்றுவிட்டாள். விசுவாமித்திரர் தவம் செய்ய சென்று விட்டார். ஆகாரமில்லாமல் அக்குழந்தை அழுது கொண்டிருக்க சகுந்தலைப் பட்சிகள், தம் சிறகுகளால் நிழல் கொடுத்து காத்துக் கொண்டிருந்தன.

அப்போது அவ்வனத்திற்கு வந்த கண்ணுவமகாரிஷி தனது ஞான திருஷ்டினால் அக்குழந்தை யாரென்பதை அறிந்து, தம் சீடான விவேக சிந்தாமணியிடம் அக் குழந்தை எடுத்து வருமாறு கூறி, ஆசிரமரத்துக்கு எடுத்துச் செல்கிறார்.

சகுந்தலை பட்சிகள் காத்து வந்தமையால் சகுந்தலை எனப் பெயரிட்டார். சகுந்தலையும் ஆசிரமத்திலே வளர்ந்து வந்தாள். அவ்வேளையில் சதானந்த ரிஷி ஆசிரமத்துக்கு

வந்து வேள்வி செய்வதற்காகத் தன்னுடைய ஆசிரமத்திற்கு, கண்ணுவ மகாரிஷியை அழைத்தார். கண்ணுவர் சென்ற பின் சகுந்தலை தோழிகளுடன் பூப்பறித்து விளையாடுகிறாள்.

அப்போது துஷ்டியந்த மகாராசன் ஆட்சி செய்யுங் காலத்தில் பயிர்களை எல்லாம் வனவிலங்குகள் நாசம் செய்கின்றன என்றும் அவற்றை வேட்டையாட வேண்டும் என்றும் குடிமக்கள் மன்னனிடம் முறையிட்டனர். அதனால் வனவிலங்குகளை வேட்டையாட துஷ்டியந்த மகாராசன் வேடர்களுடன் காட்டுக்கு வருகிறார்.

வேட்டைக்கு வந்த இடத்தில் மானை வேட்டையாட மானைத் துரத்திக் கொண்டு மகாராசன் செல்கிறார். அங்கே சகுந்தலையைக் கண்டு மயங்கி நிற்கிறார்.

ஆசிரமத்திற்கு வந்து சகுந்தலையைப் பார்த்து, நீ யார்? உன் தந்தை, தாய் யார்? என வினவ, சகுந்தலை தன்னுடைய வரலாற்றைக் கூறுகிறாள். வரலாற்றைக் கேட்ட ராசன் விசுவாமித்திரரின் மகள் என்பதால் உன்மேல் என் இச்சை மிகுந்து விட்டது. அதனால் என்னைச் சேருவாயாக என்கிறார்.

இச்சொல் கேட்ட சகுந்தலை என் தந்தையாகிய கண்ணுவர் இல்லாத வேளையில் வந்து தனித்திருக்கும் பெண்ணிடம் இவ்விதம் பேசுவது முறையல்ல. அவர் வரட்டும் என்கிறாள்.

அதற்கு மகாராசன் கண்ணுவரும் உன்னை யாருக்கேனும் மணம் முடித்து தான் தருவார். விவாகத்தில் எட்டு விதம்

உள்ளது. அதில் சிறந்த காந்தருவ விவாகத்தை நாம் செய்து கொள்வோம் என்று கூறுகிறார்.

இதைக் கேட்ட சகுந்தலை, உமக்குப் பட்டத்து தேவியில்லையா என்று வினவுகிறாள். அதற்கு துஷ்யந்தன் எனக்குப் பட்டத்துத் தேவியில்லை. உன்னையே பட்டத்துத் தேவியாக்குகிறேன்; உன் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கு யிந்த வுலகை ஆளும்படி முடிசூட்டுகிறேன் என்கிறார்.

இன்று இவ்வாறு பேசி பின்னர் நீ மறுத்தாயென்றால் நான் என்ன செய்வேன் என்று கூற, நான் சத்தியஞ் செய்கிறேன். இச்சத்தியத்திலிருந்து மீளுவேன் என்றால் தெய்வம், பூமி, ஆகாசம் பொறுக்காது என்று துஷ்யந்தன் உறுதியளித்து சகுந்தலையைக் காந்தருவ விவாகம் செய்து கொள்கிறார்.

தன் நாட்டிற்குச் செல்லும் போது, மந்திரி சேனைகளுடன் நாளை வந்து உன்னை அழைத்துச் செல்கிறேன் என்று கூறிச் செல்கிறார்.

கண்ணுவர் வந்த பின் நடந்ததைச் சகுந்தலை சொல்கிறாள். பத்து மாதங்கள் சென்றபின் சகுந்தலைக்கு ஆண் பிள்ளை பிறக்கிறது. அதற்குப் பரதன் எனப் பெயரிட்டு பல வித்தைகளைக் கற்றுத் தருகிறார் கண்ணுவமகாரிஷி.

பரதனுக்குப் பத்து வயதாகும் போது சகுந்தலை பரதனுடன் துஷ்யந்த மகாராசன் சபைக்குச் செல்கிறாள். அரண்மனை வாசலில் கட்டியக்காரனிடம் தான் ராசனின் மனைவி என்றும் இவன் ராசனின் மகன் என்றும் கூறுகிறாள்.

இதைக் கேட்ட துஷ்யந்த மகாராசன் சகுந்தலையின் சொல்லை அலட்சியப்படுத்திப் பொய்யெனச் சாதிக்கிறார். சகுந்தலை பலவாறு எடுத்துரைத்தும் வாதஞ் செய்தும் நம்ப மறுக்கிறார். காவல்காரனை விட்டு வெளியேற்ற சொல்லும் போது ஆகாஷ வாணி வந்து சகுந்தலை உன் மனைவி, பரதனே உன் மகன். இது உண்மை என்று கூறவும், துஷ்யந்தன் சகுந்தலையைப் பார்த்து எனக்கு முன்னமே தெரியும். இருப்பினும் இவ்வுலகம் இதனை முழுமையாய் ஏற்க வேண்டுமென்பதற்காகவே செய்தேன் என்றுரைத்து பரதனுக்கு முடிசூட்டவும் ஏற்பாடு செய்கிறார்.

மங்கள நிகழ்ச்சியுடன் இக் கதை நிறைவு பெறுகிறது.

# இரண்டாம் பகுதி

- சகுந்தலை விலாசத்தில் இடம் பெற்றுள்ள கதை மாந்தர்கள்
- சகுந்தலை விலாசம்- நூல் மூலம்

# சகுந்தலை விலாசத்தில் இடம் பெற்றுள்ள நாடக மாந்தர்கள்

| | |
|---|---|
| துஷ்யந்தன் | - அஸ்தினாபுரத்தின் மன்னன்; யயாதி, பூருவின் குலம் வழி வந்தவன். |
| சகுந்தலை | - துஷ்யந்தனின் மனைவி; விசுவாமித்திரன் - மேனகையின் மகள்; கண்ணுவரின் வளர்ப்பு மகள்; பரதனின் தாய். |
| பரதன் | - துஷ்யந்தன் - சகுந்தலையின் மகன். |
| விசுவாமித்திரர் | - சகுந்தலையின் தந்தை; மகாரிஷி. |
| கண்ணுவர் | - சகுந்தலையை எடுத்து வளர்த்த தந்தை; மகாரிஷி. |
| மேனகை | - சகுந்தலையின் தாய்; தேவலோக மங்கை. |
| காலாக்கினி, கால நேமியா | - விசுவாமித்திரரின் சீடர்கள். |
| விவேக சிந்தாமணி | - கண்ணுவரின் சீடர். |

இவர்களுடன் தேவேந்திரன், சதாநந்த ரிஷி, சகுந்தலையின் தோழி, மருத்துவச்சி, மந்திரி, கட்டியக்காரன், ஆகாசவாணி ஆகிய மாந்தர்களும் இடம் பெற்றுள்ளனர்.

# சகுந்தலை விலாசம் - நூல் மூலம்

ஹரிஓம் நன்றாக. குரு வாழ்க குருவே துணை
சாரதாம்பாள் துணை சரவணபவன் துணை
தத்துவலிங்கம் துணை.

## சகுந்தலை நாடகம்

### விநாயகர் காப்பு

### வெண்பா

### (இராகம் : சங்கராபரணம்)

சீரார் மயிலைவளர் சின்னதுவே ளீன்றமணித்
தாரார் புயவணிகத் தானப்பன் - பேரால்
விருதுச குந்தலைவி லாசமதைப் பாடுதற்கு
கருது கெசமுகன்தாள் காப்பு. (1)

## விநாயகர் விருத்தம்

### விருத்தம்

தார்குழல் வனிதை யென்னுஞ்
சகுந்தலை விலாசந் தன்னைப்
பார்புகழ் தமிழி னாலே
பரிவுடன் பாடு தற்குக்
கூர்பெறு மோர்ம ருப்பிற்
குலவட பொருப்பின் முன்னாள்
ஏர்பெறும் பார தத்தை
யெழுதினோன் காப்புத் தானே. (2)

## முருகர்

### வெண்பா

என்று மனத்தி லிருத்தி நினைத்தவர்பாற்
துன்றுமிடர் நீக்கித் துணையாகுங் - கொன்றையொடு
சுந்தரந்தி கழ்ந்தகங்கை தும்பையிற் தணிந்தநம்பர்
தந்தமைந்த ரெந்தைகந்தர் தாள். (3)

### விருத்தம்

நன்னாலும் வேதத் தாலும் நான்குசோட சநூல்கற் றோரும்
தன்னாலும் தேவ ராலுஞ் சாற்றரும் பொருள்அதாகிப்
பின்னாலும் அறிவை யன்றி பிறிதொன்றா லறிய வொண்ணா
முன்னாலுங் காத்தோன் எங்கள் முருகனைவ ணக்கஞ் செய்வாம்.
(4)

## சரஸ்வதி விருத்தம்

### விருத்தம்

பலகலைகளு முதவுவ ளெவளவள்
பனுவலின்மக ளெனுமவ ளெவளவள்
சலசையுண்மகிழ் மருமக ளெவளவள்
சதுர்மறைகளு முதவுவ ளெவளவள்
புலவர்களுள் நிறைபவ ளெவளவள்
புனி...று*பொருளரு ளபவளெவள்
மலரயன்மகிழ் மனைய வளெவளவள்
மலரடிக ளைமலர்கொடு தொழுதனம். (5)

---

* சிதைவு பெற்றுள்ளது.

# பரமேஸ்வரர் விருத்தம்

## விருத்தம்

நகுந்தலை மாலை கொன்றை நதிமதி நயந்த ணிந்த
தகுந்தலை யிடையீ றில்லாத் தனிப்பரஞ் சுடரைப் போற்றி
மிகுந்தலை கொழிக்குந் துய்ய விரிகடல் சூழ்ந்த பாரிற்
சகுந்தலை விலாசந் தன்னைத் தமிழினா லுரைசெய் தேனே.
(6)

# உமை விருத்தம்

முதிர்சுவை யின்சேர லிளங்கிளி கோசிக
முனிவழி வந்தச குந்தலை நீள்கதை
சதிர்வட மொழியில் ருந்ததை யோர்பெறுந்
தமிழில் விளங்கிய தின்செயல் கூறவே
கதிர்மதி கொன்றை யணிந்த சடாதரி
கவுணிய னுண்டு வளர்ந்த பயோதரி
அதிர்கழல் சம்புவி னின்ப மனோகரி
அரியபதங் கள்நி னைந்தினி வாழ்குவாம். (7)

## விருத்தம்

அமரிசந்தி ரகேசரி யன்பர்கள்
அனுதினந்தொ ழுமாமயி லஞ்சலி
நமரிதங்கை மனோன்மணி யம்பிகை
நல்லுறைந்தெ வர்பாலு றையும்பரை

குமரிகுண்ட லிகோமளி சங்கரி
குவலையந்த ருகோகில கந்தரி
சமரிமென்சி வகாம சவந்தரி
சரணபங்க யநாளுமி றைஞ்சுவாம். (8)

## விஷ்ணு விருத்தம்

பஞ்சவர் தூத நீண்ட பாரளந் திட்ட மாயன்
வஞ்சிபாஞ் சாலிக் கன்று மாளாத் துகில் கொடுத்தோன்
தஞ்சமென் றுரைத்த யானை தன்னிடர் தீர்த்த ளித்தோன்
மஞ்சடர் மேக வண்ணன் மலர்ப்பதம் போற்றி வாழ்வாம். (9)

## குருதோத்திர விருத்தம்

அகத்துள்இருளைப் போக்கி அருமறை முடிவைத் தூக்கி
சகத்துள் கவலை தாக்கிச் சங்கற் பவிகற்ப நீக்கி
மகத்துள் தன்போ லாக்கி வரம்பி லாநந்தந் தேக்கிச்
சுகத்துள் சுபாவ மாக்குந் தூயசற் குருதாள் போற்றி. (10)

அதிர்கழல் வீரர் போற்று மணிபெறு மிராய நல்லூர்
கதிர்குலத் தரசன் துய்ய கவிராம சந்தி ரன்றான்
முதிர்சுவை வடநூல் கற்றோர் மொழிந்திடுங் காதை தன்னைச்
சதிர்பெறு விலாச மாகத் தமிழினா லுரைசெய் தானே.
(11)

## விநாயகர் திபிதை

புகுந்தலை கொழிக்கு முன்னீர் புடைதிகழ் பூமி தன்னிற்
சகுந்தலை யென்னும் பெண்பாவைச் சரிதைக்கு முன்ன தாக
மிகுந்தலை நிகர்த்த கூந்தல் விமலியோர் பாக னான
தகுந்தலை மாலை பூண்டார் தனையர் முகவர் வந்தார். (12)

## விநாயகர் வருகிற தரு

கெணநாயகரும் வந்தார் - சிங்காரமாக
கெண நாயகரும் வந்தார்.

கெண நாயகரும் வந்தார் - காட்சி தந்தருள் செய்ய
மணமேவிய வில்வமாலை மார்பனான (கெண)

ஆகுவாகனன் மீதில் அம்புவியோர் மகிழ
தோகை வல்லபையுடன் தோன்றுங் கேளிவிலாசர்
(கெண)

அங்குச பாசமுமைந்து கரங்களுடன்
பங்கய வழகிய பாத மலரோனான (கெண)

தந்திமுகப் பிரகாசர் சாஸ்திரப் புராணவாசர்
தொந்திப் பிரியன்ற போசர் சூஸ்திர வேதவிலாசர்.
(கெண) (13)

## பொது வசனம்

அகோ தெப்படியென்றால் சந்திர வமிஷத்தில் யயாதி மகாராசன் முதல் பதினைந்தாம் தலைமுறைக்கும் பிற்பாடு பதினாறாந் தலைமுறையான துஷ்டியந்த மகாராசன் யேக

ரக்கிரேஸ் பானாகராச்சிய பரிபாலனஞ் செய்யுங் காலத்தில் விசுவாமித்திர மகாரிஷியானவர் யிமோர் பர்வத சாரலிலே தவஞ்செய்கிறதுக்காக வந்து சீஷர்களை அழைத்து இடம் பார்க்கிற - வசனம்.

## வசனம்

(சுவாமி) :ஆரடா சீஷா காலாக்கினி - சுவாமி - அடாகால நேமியா - அடாப் பயல்கள், சீஷர் சொல்வசனம் : அகோ வாரும் சுவாமி. உமக்கு கண்ணே தெரிந்தால் குடுமி தீய்ந்துப் போகாதா. கண்கெட்ட ஒழிமகனே. கபோதி ஒழிமகனே, (சுவாமி) : அடாசீஷா. காலாக்கினி கால நேமியா, (சீஷர்) : அய்யா. (சுவாமி) அடாயிது பரியந்தம் எவடம் போயிருந்தீர்கள். (சீஷர்), சுவாமி தேவரீர் காலின்கீழே கிடந்தோமையா. (சுவாமி) அடா. முன்னே தானே சொல்லலாகாதா. அடா சீஷர்களே. நாம் தவஞ் செய்ய வேண்டும். தவத்துக்கு யோக்கியமான இடம் பார்த்து வாருங்கோள் பிள்ளாய். (சீஷர்) : அப்படியே பார்த்து வருகிறோம் சுவாமி - அப்பன்மாரே. ஐயன்மாரே. எங்கள் சுவாமி தவஞ்செய்து கொட்டப்போறாராம். எங்கே யாகிலும் ஒரு அட்டைக்குழி அரணைக்குழி யிருக் யில்லையா. (காலநேமி சொல்பெசனம்) அப்படிச் சொல்லாதே அண்ணே. சபிக்கப் போறார்.

(காலாக்கினி சொல் வசனம்) அடா தம்பி. ஏதோ யென் புட்டையை நீர் வத்தும்படி சபிக்கச் சொல் பார்ப்போம். அப்படிக் சொன்னாலின்னம் பெருக்கும். பெருத்தால் மசிர் போச்சு போ. (சுவாமி) : அடாயின்னம் பார்த்து ஆகலியாய்.

உங்களை சபித்துப் போடுகிறேன். (சீஷர்) : அடா. அப்பா பொடி மகன் வெகுதலைகீழாய் விழுந்து தடுமாறிப் போகுறான். (சுவாமி) : அடா சீஷா காலாக்கினி நீயாகிலும் யிடம் பாரும் பிள்ளாய். (சீஷர்) : அகோ வாரும் சுவாமி. நான் பார்த்து வந்த யிடம் நல்ல சவுக்கியமாய் சோலைகள் சூழ்ந்த யிடம். அந்த இடத்தை யென் வாக்கினாலே சொல்ல மாட்டேன். (சுவாமி) : சும்மா சொல்லும் பிள்ளாய்.

(சீஷர்) : அவடத்திலே எங்கை பார்த்தாலும் பெண்டுகள் வாசமானயிடம். (சுவாமி) : அரகரா. சிவ சிவ. பெண்களாகப் பட்டவர்களைக் கண்ணினாலும் பார்க்கிற தில்லை; கருத்திலும் நினைக்கிறதில்லை; கனவிலும் காண்கிறதில்லை யென்றது லோகப் பிரசித்தமாச்சுதே. அது உனக்குத் தெரியாதா. (சீஷர்) : தெரியும் சுவாமி. மெய் தான் மெய் தான். யிந்தப் பிரகாரஞ் தவஞ் செய்கிறது.

தரு

நல்லயிடமிதுவே தவஞ்செய்ய எனக்கிது நல்லயிடமிதுவே
சொல்லிய வேள்கை வல்லியமாகவே (நல்ல)

தங்க மருவிகள் பொங்கி வருதலால்
துங்க முனிவர்க ளெங்கு மருவலால் (நல்ல)

சீரிலுயர்ந்தது பேரின் மிகுந்தது
பாரிலிமையநற் சாரலெனுந் தலம் (நல்ல) (14)

## வசனம்

இந்தப் பிரகாரம் விசுவாமித்திர மகாரிஷி அகோர வுக்கிரமான தவஞ்செய்கிற போது முப்பது முக்கோடி தேவர்கள் முனிவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் - சகல பேரும் புடை சூழ்ந்திருக்கிறயிடத்தில் யிந்த விசுவாமித்திரன் செய்கிற உக்கிரதபசு, அவாள் பேரில் வீசின மாத்திரத்தில் இந்திராணி யந்த சுவாலை யெவ்விடத்தி லுண்டாச்சுது. பொறுக்கப் போகவில்லை யென்று சொன்ன மாத்திரத்தில் தேவர்கள் சொல்லுகிறார்.

விசுவாமித்திரன் தவத்தினால் வருகிற அக்கினி சுவாலையென்றும் யின்னம் யென்ன விளையுமோ. நாம் யெந்த லோகம் போவவோமென்று விசனப்படுகிற விதங்காண்க.

## தரு

தப்பியெப்படி பிழைப்போம் - விசுவாமித்திரன்
    தவத்தை யெவ்வித மழிப்போம்
எப்படி சொல்வோ மிந்தயிடர் நமக்கினிமேலே
    எழில் விசுவாமித்திரன் தவத்தெழுந்த அக்கினியாலே
(தப்பி)

சத்த மேகங்களை விடுத்தாலுமோட்டுவான்
    தணலிடியை விட்டாலும் தலைகாட்டாமல் வாட்டுவான்
அத்திகளை விட்டாலும் அம்மானா ராட்டுவான்
    அலைகடலை விட்டாலும் அதற்கு சங்கைக் காட்டுவான்
(தப்பி)

வடவைத் தீயை விட்டாலும் வாரி அள்ளிக் குடிப்பான்
    மலைக்கண் மீதெறிந்தாலும் மணற்பொடியாய் பொடிப்பான்
திடமாய் வெள்ளானை விட்டாலும் சிறுபொடியாய் பொடிப்பான்
    தேவர்களை விட்டாலுஞ் சிதையும்படி அடிப்பான் (தப்பி)

சந்திராதித்தரைக் கொண்டு தடுத்தாலு மடங்கானே
சதுர்முகங்சேர் பிரமன் தன்னாலு மடங்கானே
விந்தை யண்டமிடிந்து விழுந்தாலு மொடுங்கானே
மேல்கீழ் கீழ்மேலானாலும் மென்மனம் நடுங்கானே.

(தப்பி)

## வசனம்

இந்தப் பிரகாரம் தேவர்கள் விசனப்பட்டுக் கொண்டு பலவிதமான யோசனை செய்யும் போது பிறதை பழி சொல்லுகிற விதங் காணக.

## திபிதை

அகன்படு குழியை வெட்டி ஆனையைப் பிடிக்க வேண்டும்
புகலுமோ ராட்டைக் காட்டி புலிதனைப் பிடிக்க வேண்டும்
முகிணகை மாத ராலே முனிவரை வெல்ல வேண்டும்
விகிதமிங் கிதுவே யல்லால் வேறொன்றால் வெல்ல
வொண்ணாதே (16)

## வசனம்

இந்தப் பிரகாரம் பிரகஸ்பதி யெவ்வர்ணமான மோகினியாலே அழிக்கலாமே யல்லாமல் வேறொரு விதத்திலும் அழிக்கக் கூடாது யென்று சொன்ன மாத்திரத் திலே தேவேந்திரன் மேனகை அனுப்பி விசுவாமித்திரன் தவத்தை அழிக்கும்படி திட்டஞ் செய்து அனுப்பினார் அவள் போய் தவஞ்செய்கிற இடத்தில் யெதிர் காற்றில் நின்ற மாத்திரத்திலே விசுவாமித்திரன் கண்டு மோகிக்கிற விதங் காண்க:

தரு

கண்கள் போதாதே - அரகர சிவசிவ-ஒருகோடி கண்கள்
போதாதே
பெண்கள் சிகாமணி பேரழகைப் பார்க்க (கண்கள்)

சுந்தரமாகி நிறைந்த சரற் கால
சந்திரனுக்கு ஒப்பான சுந்தரத்தைக் காண (கண்கள்)

கன்னலை வென்றசொன் மின்னிலையே சோதி
இன்னிலை நேரிவண்ண நிலையைக் காண (கண்கள்)

துங்கப் பிரகாசஞ்செய் தங்கப்பதுமைப் போலே
இங்கிதஞ் சேர அலங்கிருதத்தைக் காண (கண்கள்) (17)

## சிங்காரப் பத்தியம்
## (விசுவாமித்திரர் சொல்)

திகழு மாணிக்கமோ திவ்வியரச சக்கியமோ
மோடியா யெதிர்நின்ற மோகனாங்கி
மாசற்ற தங்கமோ மதன விதங்கமோ
வந்தெதிர் நிற்கின்ற வச்சி ராங்கி
நவரத்தின மாலையோ நயகுண வாலையோ
குறுகி வந்தெதிர் நின்ற கோமளாங்கி
மாதரச மேட்டியோ மாதா கிறாட்டியோ
தழுவ வந்தெதிர் நின்ற சாமளாங்கி
எனது மனவேதையறியாத தென்ன குறையோ
அடிமை முறியோலை யெழுதி வைத்ததுவு
மில்லையோ
சேர வந்தென்ன மருவாத செங்கை யென்மோ
காலில் வீழ்ந்தாகிலுங் கடைத் தேறுவேனே. (18)

## விசுவாமித்திரர் தரு

நான் செய்த பாக்கியம் - அரகர - நான் செய்த பாக்கியம்
மான் போலும் வேல்விழி மாது கிடைத்தது (நான்)
வாடும் பயிருக்கு மழைவந்தது போலும்
வண்டினைத் தேடி மலர்வந்தது போலும்
தேடும் பொருள் கையில் சிக்கினது போலும்
திருப்பெண்ணிக ரிந்ததுரைப் பெண் கிடைத்தது
(நான்) (19)

## விசுவாமித்திரன் கந்தார்த்தம்

காமாயுத விழியான மிகமா மோகா விகாரமீறி வாடவும்
வசமோ
தேமாந் தளிரியல்பெரு பூமாதே யினி யிவ்வேளை (20)

## தரு

போகிப்போம் வாடி சுகமாசை
யோகிப்போம் வாடி
வேகமாகசம் போகமாக அதி
தாகமாக வினியேகமாக நாம்
போகிப்போம் வாடி சுகமாசை
யோகிப்போம் வாடி (21)

## மேனகை கந்தர்த்தம்

## திபிதை

பஞ்சேந்திரிய மடக்கிக் கெஞ்சாமிர்தமென்னும் மாதர்
கேள்வியில்லாத
நெஞ்சா முனிவர் தங்கட் கஞ்சாமல் லீலை செய்ய.
(22)

## தரு

வாராது காணும் இன்பசுகந் தாராது காணும்
சேராதா னந்தங் கூராது சொற்றமை
பேராது திரேகமுஞ் சோராதுன் கையில்.
வாராது காணும் இன்பசுகந் தாராது காணும் (23)

## விசுவாமித்திரன் கந்தார்த்தம்

திங்கட் பிறையெனும் நகமுன்
கொங்கைக் குடமேருவிற் குறிகொள்
தங்க கனியிதழ் பருகிச்
செங்கைக்கு ளணைத்து மையல் (24)

## தரு

தீர்க்கிறேன் வாடி சமத்தைநான் பார்க்கிறேன் வாடி
பார்க்கிலிங் கேயிரு வோர்க்குந் தேர்ந்த முந்தன்
மூர்க்க மேனினிசன் மார்க்கமாக மையல்
தீர்க்கிறேன் வாடி சமத்தைநான் பார்க்கிறேன் வாடி (25)

## மேனகை சொல் கந்தார்த்தம்

துன்னுஞ் சடைமுடி பூண்டெழில்
மன்னும் பரிசாதி வாக்கு மனமுமிந்த
தன்னந் தனியுரைத் தேர்ந்தவர்

சின்னஞ்சிறுபெண்களாசை தீர்ப்பாரோ போம்போ

---------------------------------------- இதைப்

பெண்கள் யேற்பாரோ போம்போம்* (26)

## விசுவாமித்திரன் சொல் வசனம்

அடிப்பெண்ணே மேனகை! நீயா யெனக்கு விகாரங் கொடுத்து யென் தவத்தைக் கெடுத்தவள். அடி சண்டாளி. நல்லது. உன்னை வரவிட்டானே தேவேந்திரன் அவனை நானறிவேன். முன்னாலே கெவுதம ரிஷியென்பவர் அவன் சரீரமெல்லாம் ஆயிரம் யோனியாக வல்லவர் சபித்தார். அது சாபமல்ல. இப்போதவனை பசுப்பமாகச் சபித்துப் போடுகிறேன். ஆகட்டும் நீ போ.

அடா வாடா சீஷா. நம்முடைய தெண்டு கமண்டலம் யெடுத்துக் கொண்டு நடவும் பிள்ளாய்.

## கொச்சகக் கலிப்பா

மின்னுபுகழ் விசுவாமித் திரனும்மே னகையும்
தன்னமை யாலங்கே தழுவிய ணைந்தளவில்
நன்னயமா யோர்முகுர்த்த நாழிகையி லேயதிக
உன்னதம தாகவொரு பெண்பிறந் தனளே. (27)

---

* ஒரு வரி விடப்பட்டுள்ளது.

## வசனம்

அகோதெப்படி யென்றால் பிறந்த குழந்தையைப் போட்டு விட்டு மேனகை தேவலோகத்துக்குப் போனாள். விசுவாமித்திரன் தவசுக்குப் போனார். அவடத்தில் கிடக்கிற குழந்தைக்கு ஆகாரமில்லாமல் அழுது கொண்டிருக்க, அவ்வனத்திலுள்ள சகுந்தலைப் பட்சிகள் தமது சிறகுகளி னாலே நிழல் கொடுத்து காத்துக் கொண்டிருக்கும் போது, அந்த வனத்திலே யிருக்கப்பட்ட கண்ணுவ மகாரிஷியானவர் அவ்வழியே வருகிற விதங் காண்க :

## கண்ணுவர் வருகிற தரு

கண்ணுவர் வந்தார் மகாரிஷி கண்ணுவர் வந்தார்
நண்ணுமொரு சதுர் வேதப் பொருளணி
நாலுந்தெரிந்தமெய்ஞ் ஞானசிரோமணி (கண்ணு)

வருத்தும்பிறவிக் கிடஞ்செயிரண்டு
வல்வினைகெட மறைமொழிவிண்டு
கருத்திற்கிசைந்த இலங்கு நற்றண்டு
கமண்டலங் கரத்தினிற் கொண்டு

கருணைக்கடலெனு முத்தவர்
பெருமைக்கொருநில மொத்தவர் (கண்ணு)

நித்தியானத்தியப் பொருளைத்தேர்ந்து
நிருவிகற்பநன் நிலையைச்சார்ந்து
தத்துவாதீதப் பிரணவமோர்ந்து
சகச்சச்சிதா னந்தங்கூர்ந்து

தலைமைப்பெறு முலகத்தினில்
நளிநத்தவ நிலைபெற்றவர் (கண்ணு)

புனிதமாய்ச்சடை முடியைத்தரித்து
புசத்தினிற்கா ஷாயம்விரித்து
இனிதுடன்செப மாலைதரித்து
இலங்கும்பிர மந்திரமுச்சரித்து

இருளற்றிடு மொளிநற்பர
வெளியைத்தன துளம்வைத்தவர் (கண்ணு) (28)

## கண்ணுவர் தியதை

வடதிசை இமையச்சாரல் மனிதர்சஞ் சாரமின்றிக்
கடகரி வேங்கைசெந்நாய் கரடிகள் வாழுமிந்த
அடவியிற் சிறுகுழந்தை அழுகுர லோசையேது
திடமுடன் நாலுதிக்குஞ் சென்றுநீ யறிந்திடாயே. (29)

## வசனம்

அப்பா விவேகசிந்தாமணி - யேன் சுவாமி - மனிதர்கள் சஞ்சாரமில்லாத வடதிசைப் புறமான இமையச் சாரலிலே மதத்த யானைகளும் பருத்த புலிகளும் சிவத்த நாய் களுமாகிய பலவித மிருகங்கள் சஞ்சரிக்கப்பட்ட ஆரண்ணி யத்திலே ஏதோ ஒரு குழந்தை அழுகுரலோசை யேதுநாலு திக்கும் பார்த்து வாரும் பிள்ளையாய் - அப்படியே பார்த்து வருகிறேன்னையா சுவாமி.

## சீஷன் திபிதை

தன்னி கரில்லா ஞானத் தலைவனே கேளாய் தேவரீர்
சொன்ன சொற்படியே சென்று சோதித்து முழுதும் பார்த்தேன்
அன்னை தந்தையரும் மற்றோரு மங்கருகிற் காணோம்
பொன்னிறக் கழுக்கள் காக்கப் புலம்புதோர் குழந்தை
தானே.(30)

## வசனம்

சுவாமி தேவரீர் சொன்னபடியே சென்று வன முழுதுஞ் சோதித்துப் பார்த்தேன். அவடத்திலே தாய் தந்தை யாருமில்லாமல் பொன்னிறமாகிய சகுந்தலைப் பட்சிகள் தம் சிறகுகளால் நிழல் கொடுத்துக் காக்க அந்த நிழலில் ஒரு சிறுகுழந்தை அழுது கொண்டிருக்கின்றது சுவாமி. ஆனால், போய் பார்த்து வருவோம் சீடனே.

அரகரா சிவசிவா இப்படிப்பட்ட ஆரணியத்திலே குழந்தையைப் பெற்றுப் போட்ட கடின சித்தமுள தாய் தந்தை யாரோ. என் ஞான திருஷ்ட்டினால் பார்த்துச் சால்லுகிறேன்.

## திபிதை

மேதினிலே விசுவா மித்திரன் றவமழிக்க
மாதுமேனகை யையிந்திரன் வரவிட்டா னவளையந்தக்
காதிமைந்த னும்புணர்ந்த காரணம தனால்வந்த
ஏதில்பெண் பிள்ளைதன்னை யெறிந்துவிட்டவர் கள்போனார்
(31)

## வசனம்

அகோ வாரும் பிள்ளாய்சீஷா. விசுவாமித்திரனும் மேனகையும் பெற்று போட்டு விட்ட குழந்தையாகையால் நாம் எடுத்துப் போய் வளர்த்துக் கொள்வோம். எடுத்து வாரும் பிள்ளாய் - அப்படியே எடுத்து வந்தேன் சுவாமி. அப்பா விவேக சிந்தாமணி இந்த குழந்தையைச் சகுந்தலைப் பட்சி காத்துக் கொண்டிருந்தப்படியினாலே சகுந்தலை யென்றும் பேரிட்டேன். சகுந்தலை பசித்திராது பால், கனி வேளை தப்பாமல் கொடுத்து வளர்த்து வாரும் பிள்ளாய் - அப்படியே கொடுத்து வளர்த்து வருகிறேன் சுவாமி. இந்த சகுந்தலை கண்ணுவர் ஆசிரமத்திலே வளர்ந்து வருகிற நாளையிலே கண்ணுவரிடத்துக்கு சதானந்த ரிஷி வந்து தன்னுடைய ஆசிர்மத்துக்கு வேள்விக்காக வரவேணு மென்று கேட்டுக் கொண்டதின் பேரில் அப்படியே கண்ணுவ மகாரிஷி போகும் போது சகுந்தலையை அழைத்து இருவரும் ஆசீர்வாதஞ் செய்து நீ பதனமாக நான் வருகிற வரைக்கும் இரும்மாள் என்று சொல்லி விட்டு போனார்கள். மறுபடி சகுந்தலை தோழிகளைச் சேர்த்துக் கொண்டு சிங்கார வனத்திலே போய் பூப்பறித்து பந்தடித்துக் கொண்டு விளையாடுகிற விதங்சாண்க.

## தரு

பூப்பறிப்போம் - அம்மா நாம் பூப்பறிப்போம் அம்மா
ஆயப்பெருஞ்செழு நந்தவனத்தினில்
வாய்ப்பதங்கே திருந்துமனத்தொடு
(பூப்பறி)

ஆடுவோம் வாராய் பந்துவிளை யாடுவோம் வாராய்
நாடுவிந்த நற்சாலையிலேமண்ணீடுசந்தனச்
சோலையிலே விளை
யாடுவோம் வாராய் பந்துவிளை யாடுவோம் வாராய்

பொண்ணே நாம்கைதட்டி யாடுவோமந்தப்
புஷ்பம்பறித்து நாம் சூடுவோம்
முன்னேபோய்தொட்டு பணித்தவர் பாணியால்
மூன்றேயடிப்பட்டுக் கொள்வது வேணியால்
(ஆடுவோம்)

நின்றொருநாழிகை குறிப்போம் அந்த
நிறுக்கிலாயிரம் புஷ்பம் பறிப்போம்
இன்றதை முன்னே பறித்தவர் கைத் தொட்டு
எண்ணிப்போடுவதினி இருபத் தெட்டு சொட்டு
(ஆடுவோம்)

ஒருமையாய்நாமோடத் தொடுப்போமந்த
உதிர்ந்தமாங்கனியைப்போய் எடுப்போம்
கருவாகமுன்போய் எடுப்போம்
கைமேற்குட்டுவது கணக்காய் பன்னிரண்டு
(ஆடுவோம்) (32)

---

13ஏட்டின் பின்புறம்
"ஸ்ரீ ராமானுஜர் நயனதிருவடிகளே சரணம்"
பின் 14 ஆம் ஏட்டில் பாடல் தொடர்ந்து வருகிறது.

## பொது திபிதை

தவமுனி போனபின்பு தனித்தவர சிரமந்தன்னிற்
பவளவாய் சகுந்தலைப்பெண் பரிவுடனி ருக்கும் போதில்
அவனிமன் வந்தவாறும் அருமணம் புரிந்தவாறும்
தவறது நடந்தவாறும் தழைத்திடுவாறுக் சொல்வாம்
(33)

## வசனம்

அகோதெப்படி யென்றால் சகுந்தலை அம்மனை ஆசிரமத்தில் இருக்கச் சொல்லி கண்ணுவ மகாரிஷி சதானந்த ரிஷி பிறகே போன பின்பு யிந்த வுலகை யெல்லா ஒரு குடையிலாளப்பட்ட துஷ்ட்டியந்த மகாராசன் கொலு வுக்கு வருகிறதாக கட்டியக்காரன் முன்னதாய் வருகிற விதங்காண்க.

## கட்டியக்காரன் திபிதை

ஒட்டிய வுலகத் தீமை யோட்டியென்னலரை யெல்லாம்
வெட்டியம் புவியை யாளும் விக்கிரம சயவுத்தண்ட
துட்டியந்த ராச ரென்னுந் துரந்தானி லங்கு வாசல்
கட்டியக் காரன் வந்து களரியிற் தோன்றி னானே (34)

## கட்டியக்காரன்

கட்டியக்காரன் வந்தானே விதரணக் கட்டியக்காரன் வந்தானே
அற்புத விதரண குணசாலி சுமுக சயசாலி யுசித கெட்டி
(கட்டி)

துஷ்டியந்த மகா ராசேஸ்வர
சூரதீர வீர மாரனிசைதிகழ்
சுத்திய சமுகன் நித்திய சுமுகன் வாயிலிற் (கட்டி) (35)

## வசனம்

அகோ வாரும் சபையோரே ராசாதிராச மார்த்தாண்ட ராசகெம்பீர சந்திர வமிசத்தார் ஏகசக்கிரேஸ்பானாகிய துஷ்டியந்த மகாராசன் கொலுவுக்கு வருகிறார்.

## திபிதை

சங்கரனருள் பெற்றோங்கும் தார்வேய்ந்த துஷ்டியந்தன்
பொங்குள சுமுக மந்திரிப் புகழ்பெறு பிரதானி மாரோடு
எங்கணுங் கீர்த்திபெற்ற இயன்மிகு கொலு வினுக்கு
சங்கையில்லாமற் செங்கோல் தனைச் செலுத்திட
வந்தானே. (36)

## தரு

இராகம் : மத்தியாவதி | தாளம் : திரிபுடை

## ராசா வருகிற தரு

இராசராசர் பரவிய அழகிய துஷ்டியந்த மகாராசன் வந்தானே
தேசதேசாதி பரெவர்களுமிருபுறமும் வர
தியாக போக விந்திரனென்னகன்
யோகவாக சந்திர குலமாக (இராச ராசா)

சோதிதரு நவரத்தின மணிமுடி துலங்கியபிர காசமது
கோடிசூரியர் கடமைப்போனிறைந்தொளி சூழ்ந்தினிது வீச

காதலுட நனிபுச கிரிதியினுடன் கலந்தசையும் வாச மாலை
கமகமென மணிமார்ப்பிலணிகலன் மருவிய விலாச
சீதநிறைமதி போற் குடை பிடிக்க
செயவிருது கவிகடிகையர் படிக்க
நீதிமந்திரிகளி ருபுறமுஞ் சூழ
நெடுமுடியரசர டியின்மி சை வீழ
மாதர் சாமரை போட நவமன்மதனெனக் கொண்டாட
வச்சிரசிங்காசன மிருந்து
மெச்சிய செங்கோல்முறை தெரிந்து
மனுநெறி வழியே யுலகத்தில்
அரசியல் வழுவாமற் செலுத்த (இராசராசர்) (37)

## திபிதை

சதிர்பெருமறை விளங்கத் தர்மமென் மேலுமோங்க
மதிமனுநீதி செல்ல மாதமும்மாரி பெய்ய
வதிதருமுலகம் வாழ்க மன்னர் செங்கோற் றழைக்க
துதிதரு மாதிமூலந் துணைபதம் போற்றி போற்றி (38)

## வசனம்

அகோ வாருங்கோள் மந்திரிகளே. நம்மிடப் பட்டணத்தில் சகல காரியம் பூசைகளும் யாதொரு குறைவில்லாமல் நடந்து வருகிறதா மந்திரிகளே - அப்படியே நடந்து வருகுதையா சுவாமி.

## தேசத்து குடிகள் வருகிற திபிதை

என்னென்ன பாடுபட்டே யிட்டதோர் பயிரையெல்லாம்
வண்ண வண்ணங்களான வகைக்கொரு மிருகம்வந்து
சின்னபின்னங்கள் செய்து தினமான மழிக்கு தென்று
மன்னனோடு ரைப்பதற்கு வருகின்றார்குடிகள் தானே
(39)

### தரு

குடிகள் வந்தாரே பயிரிடுங் குடிகள் வந்தாரே
நெடுமுடிதுஷ்டியந்த மகிபன்முன்
நிறைமனதுள்ள குறை சொல்லிக் கொள்ள (குடிகள்)

காட்டின் மிருகங்கள் மிகுந்து செழுங்கதிர்ப் புலந்தனிற் புகுந்து
வாட்டமாய்ப் பலதேசஞ் செய்ய
மன்னவனுடன் சொல்லிக் கொண்டுய்ய (குடிகள்)

பறவைகள் மிகச் செழித்தே யிட்ட பயிர்களை
யெல்லாமழித்தே
குறைசெயுமிந்தச் சேதியை மெல்லக்
கொற்றவன் திருக்காதில் விழச் செல்ல (குடிகள்)

மன்னவர்க்கெல்லா மன்னன் நல்ல வளமை
பெருவிற்பன்னன்
இந்நில வேந்தனென்று சொல்லப்பட்ட
இறைவன் துஷ்டியந்த ராசராசன்கிட்ட (குடிகள்) (40)

## வசனம்

அகோவாரும் மந்திரிகளே பலவித மிருகங்களினாலே இடப்பட்ட பயிர்களெல்லாஞ் சேதமாய் போகுதென்று நமது தேசத்து குடிகள் வந்து சொல்லி கொண்டபடியினாலே நாம் வேட்டைக்குப் போக வேண்டும். வேட்டைக்கிசைந்த அதிவீரபராக்கிரம சேனைகளையெல்லாம் அழைப்பியுங் கோள் மந்திரிகளே - அப்படியே அழைத்து வருகிறோம் சுவாமி. வேடர் வருகிற விதங்காண்க.

## தரு

வேடர் நாங்களே ஐயேமலை வில்லியர் நாங்களே

காடுமலை கிடுகிடெள கட்டுவலை
கொண்டு பொட் டெனத் துடர்ந்து
வோடும் பெருமிக நிழலின் மறைந்து
ஒட்டுக் காலைத் தட்டிக் கட்டிப் போர்செய் கெட்டி
(வேடர்)

ஓங்கியெழும் பெரும் வேங்கைப் புலிகளை
ஓடிப்போய் தடுத்துஐயே
ஒவ்வப் பெருந்தொடைக் கெளவுஞ் செந்நாய்களை
உசிப்பிமேல் விடுத்து
ஆங்கதன் வீரியமடங்கிச் சுழிக்க
அசந்து போய் பசபசென்று விழிக்க
ஏங்கித் தியங்க யென்வாங்கு வல்லையத்தால்
ஈரல் பற்றிக்கொள்ள மார்பில் குத்தித் தள்ளும்
(வேடர்)

பொக்கென்று பாய்ந்து புறப்படும் பன்றி
புறங்காற் பிடித்தடிப்போம் ஐயே
போந்தக்கரடியைப் பாய்ந்ததைக் குத்தி
புகழ்ந் திரத்தங் குடிப்போம்
ஏந்து மருப்புள்ள யானையைத் தாக்குவோம்
ஆளிசிங்கத்தை இரண்டு துண்டாக்குவோம்
காய்ந்த மிருகங்கள் எல்லாம் படவலைக்
கட்டி பிணித்ததை வெட்டித் துணிக்கின்ற (வேடர்)

கன்னியர்க் கென்றா விருப்புங் கொடுத்துக்
கடன்வாங்கியுங் கொடுத்து ஐயே
கவிவாணரைக் கண்டால் நடுக்கமெடுத்து
கவிந்துமிகப் படுத்து
பின்னுமுன் னெண்ணாமல் வாணரைத் தூவுக்கும்
பேய்களுக்கொப்பான நாய்கடம் வாயிலே
அந்நிலை யேகவிராம சந்திரன்
ஆப்பை அடித்துப்பின் வாய்ப்பை பிடுங்கின்ற
(வேடர்)

இன்பமாய் தேடியேசெம்பொன் தனிலே
இச்சையது மிகத்து ஐயே
எல்லாந் தன்னிலே நல்லறஞ் செய்யாமல்
எல்லாம் புதைத்து வைத்து
மண்புவித் தன்னிலே யெத்தேச காலமும்
வாழ்ந்திடுகின்ற நற்கீர்த்தியை நாட்டாமற்
துன்புறுகின்ற இடும்பைக் கடம்பைகள்
தொக்கப் பிடித்தந்தச் சிங்கத்தடைக்கின்ற (வேடர்)

பாடும்புலவர்கள் தம்மைக் கண்டொதுங்கி
வாடுங்குலத்து குலாமரெனும் மட்டி
மாட்டைப் பிடித்திந்த கூட்டிலடைக்கின்ற* (வேடர்) (41)

### வசனம்

அகோ வாருங்கோள் வேடர்களே! காட்டுக்கு வேட்டைக்கு போவோம். வாருங்கோள் அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.

## காட்டிலே போய் வேட்டையாடுகிற விதங்காண்

### தரு

வாரும் வாரும் வீரரே விந்தை மிகுத்திடு மிந்தவனத்தினில்
நெருங்கியிருக்கு மிருகங்கள ளைத்தையும் பாடரும்பாரும் சூரரே
ஆனையுடனே மதயானை போர் செய்யுதகோ
அதனைக் கண்பொரு சிங்க மடுத்து வருகுதிதோ
ஆனைத்தலையுனாளித் தலையொடு
அம்பால் விஷவரி தெம்பாகவுமே (வாரும் - வாரும்)
வேங்கை யுக்ர வேங்கைப்போர் செய்யுதிதோ
வெகுண்டு செந்நாய் தனை வெல்ல வருகுதிதோ
வேங்கையுடனே செந்நாய் குடல்சரியவே
வேல்விடும் வீர்புவிமேல் விழவே நீர் (வாரும் - வாரும்)
(42)

### வசனம்

அகோ வாருங்கோள் வீரர்களே அதோ தனியே ஓடுகின்ற மானை எய்து வருகிறேன் பாருங்கோள் மந்திரிகளே. இந்தப் பிரகாரம் ராசாவு மந்திரிகளும் ஓடி மானை காணாமல் காடுகளெல்லாம் தண்ணீர் கிடைக்காமல் தாகத்துடனே கண்ணுவர் ஆசிரமத்திலே சோலையிலே போய் அந்தத்

தடாகத்திலே தாகந்தீர்த்து ஒரு குருக்கத்தி மர நிழலிலே சயனித்திருக்கும் போது அந்த சிங்கார வனத்திலே இருக்கிற அலங்காரங்களைச் சொல்லுகிறது.

அகோ வாருங்கோள் மந்திரிமார்களே இந்த தடாக மிருக்கின்ற வுன்னதமே உன்னிதம். யிந்த யிடத்தில் செந்தாமரை மலர்கள் மலர்ந்திருக்கிற நேர்த்தியே நேர்த்தி. பஞ்சவர்ண கிளிகள் கொஞ்சுகின்ற ஓசையே ஓசை... ஆ...ஆ யிந்த சிங்கார வனத்தினிலே சித்திரப்பதுமை போலே தோற்றுகின்றது. ஆ...ஆ

(கொச்சகம்)

அன்னப் பெடையோ அழகு பசுங்கிளியோ
வன்னக்குயிலோ மடமயிலோ வான்மதியோ
மின்னற் கொடியோ விளக்கோவின் மேனகையோ
யென்னுட் கலந்தவிவள் யாரென்றி கிலனே. (43)

### ராசா சொல்லுகின்ற சிங்காரப் பத்தியம்

சித்திரமா ஒளிவீசும் ரத்தினமோ தெரியாது
நேருடன் நின்றென் னெதிர் நின்ற மாயம்
மங்கையோ மதனிரதி தங்கையோ தெரியாது
எந்தனுக்கெதிர் நின்ற இந்த உருவம்
வாணியோ உசித இந்திராணியோ தெரியாது
வலிய வந்தெனை யாளவந்த வடிவம்
அன்னமோ புடமிட்டசொர்ணமோ தெரியாது
தமியன் முன்னிறைகாட்சி தந்த வடிவம்

என்னமுக விம்பசுக தம்பமென்ன னடம்பம்

என்ன நவலீலை மணிமாலை யென்னவாலை

என்னகண்சாடை யொயில் வாடை யென்னவாடை

என்னவதிசோபம் வெகுதாப மென்னரூபம். (44)

## வசனம்

அடிப்பெண்ணே சவுந்தரவல்லி. அகோ நமக்கு எதிராக வருகிறதாரடி தோழி. அகோ கேளுமம்மா யிந்த வுலகை யெல்லா ஒரு குடையிலாளப்பட்ட ஏக சக்கிரேஸ்பானாகிய துஷ்டியந்த மகாராசன் இவர்தானம்மா.

## சகுந்தலை கொச்சகம்

பொன்னின் முடிபூண்டு பூவலயந் தானணிந்து

கன்னநடுவின் மதன்போற் கைதனில் வில்லம்புகொண்டு

தன்னந் தனியே சவுந்தர்ய துஷ்டியந்த

மன்னவனிவ் வனத்தில் வருவதென்ன மாமயிலே (45)

## வசனம்

அடி சவுந்திரவல்லி வுலகத்தை யெல்லாம் ஆளப்பட்ட துஷ்டியந்த மகாராசனானால் நம்முடைய ஆசிரமந் தேடி வருவதென்னடியம்மா - வரட்டுங் கேட்போம் அம்மா.

## ராசா திபிதை

தெரியவர்க் கரசே யின்பந் திகழிளங் குயிலே கேளாய்

இருளகன் முனிவரானோ ரெவரிருப் பிடமோ வேண்டி

அருமையா யுன்னைப்பெற்ற அன்னையார் தந்தையார்சீர்

பெருகிய நீயாருந்தன் பேரெனக்குரை செய்வாயோ (46)

### வசனம்

அகோ வாரும் பெண்ணே. தேவரம்பையோ இந்திராணியோ உன்னை பார்த்தால் காமரசவிலாச திரிலோக சுந்தரியைப் போலுந் தோற்றுதே. யிந்த ரிஷி ஆசிரமத்தில் இருக்க வேண்டியதென்ன. உன்னுடைய தாய் தந்தை யார். நீ யார், உன் பேரென்ன எனக்கு தெரியச் சொல்லும் பெண்ணே.

### சகுந்தலை வசனம்

அகோ கேளும் மகாராசனே யென்னுடைய வரலாறு யெனக்கு தெரியமாட்டாது. ஒரு நாளிலிங்கே ஒரு ரிஷி வந்து என்னை யாரென்று என் தந்தையாகிய கண்ணுவ மகாரிஷியைக் கேட்க, அந்தரிஷிக்கு அவர் சொல்லும் போது நான் கேட்டிருந்த சங்கதியைச் சொல்லுகிறேன். கேளும் ராசனே.

### சகுந்தலை அகவல்

மகிபநான் பிறந்த வரலாறு கேளாய்
மிகுதவ விசுவா மித்திர னென்போன்
வண்மை சேரிமைய மலையினிற் கருகே
திண்மை யாய்த்தபசு செய்திடும் போதில்
இந்திர னந்த எழிற் தவமழிக்க
விந்தை மேனகையை விடுத்தன னவளை
சிந்தையுண் மகிழ்ந்து சேர்ந்த போதுதித்த
எந்தனை வனத்தில் எறிந்தவர் போனார்
அவ்வழி வந்த அரிய கண்ணுவர்கண்டு
இவ்விதமாக எடுத்தென்னை வளர்த்தார்

தையலார் தமக்குத் தந்தையர் மூவர்
எய்யநூன் முறைய தெப்படி யென்றால்
இன்பமாய் பெற்றோ ரிடர்தனைத் தீர்த்தோன்
அன்புடன் அன்னம் அளித்து ரஷ்சித்தோன்
இந்த மூவர்களும் யேந்திழை யாற்கு
தந்தையென் றுரைக்கும் சகல சாத்திரமும்
ஆதலா லென்னை அருமையா யெடுத்து
காதல் சேர்ந்த கண்ணுவ ரென்னை
மகளெனச் சொல்லி மகிழ்ச்சியாய் வளர்த்தார்
தகுமெனக் கவரே தகப்பனா ரென்றே. (47)

## ராசா திபிதை

வேந்தர்கள் வேந்தன் விசுவாமித்திரனாற் பிறந்ததாலென்
யேந்திழை யாளேவுன் மேலிச்சை வந்தவு மெய்யே
வாய்ந்த வென்றி தேகமெல்லாம் மன்மத பாணம்பட்டு
பாய்ந்து மெயுருகுதெந்தன் பரிதாபந் தீர்த்திடாயோ (48)

## வசனம்

அகோ கேளும் பெண்ணே சகுந்தலை. அந்த ராசரிஷி யாகிய விசுவாமித்திரருடைய புத்திரியாகினப்படியினாலே உன்பேரிலே யெனக்கு இச்சை வந்தது மெய்யே. என் விரக வேதை தீர்க்க கூடி மருவ வேண்டும் பெண்ணே.

## ராசா சொல் ரூபகம்

மயலாகினேன் மானே மயலாகினேன்
மயிலே யிளமாங்குயிலே மிகநான் (மயலாகி)

வண்டுவிழியிலே கண்டு மொழியிலே மனம்
மயங்கித் தமிழுயங்கிக் களைபுரிந்துச் சடம் வருந்தித் தினம்
அற்புறு பொற்புறு வெற்பினி லிப்பவு நான் (மயலாகி)

கும்ப முலையிலே யின்பநிலையிலே நிலை
குலைந்திப்படி கடம்பப் பயன் மதன் கைப்படவிடும்போற் கணை
குத்திட தைத்திட மெத்தவு நான் (மயலாகி)

சின்ன விடையிலே அன்னநடையிலே உளந்
திரும்பிச் சுகம்விரும்பிய வசம் பெற்றுனை
யணைந்திச்சையில்
சித்தமுமொத்திட முத்திடமெத்தவு நான் (மயலாகி)

(49)

## வசனம்

ஆ ஆ பெண்ணே சகுந்தலை யிப்ப யென் முகத்தைப் பார்த்து என் மையல்தீர இரகசியமாய் ஒரு வசனஞ் சொல்லும் பெண்ணே.

## ராசா தரு

சொக்கிப் போகுதே நெஞ்சம் சொக்கிப்போகுதே
மிக்கச் சிறந்த கண்ணாட்டி - முகச்சந்திர
விம்பத்திலே ஸ்தன கும்பத்திலே (சொக்கி)

குதலைமொழியிலே நெடு மதனவிழியிலே
விதனமேலிட செய்துமுடை
மெல்லுக்கிலே நடைகுலுக்கிலே கொஞ்சம் (சொக்கி)

முத்துநகையிலே யொருமித்த வகையிலே
முற்றுமொருவ ரொப்பில்லாத
வசத்திலே பரவசத்திலே நெஞ்சம் (சொக்கி) (50)

### ராசா பத்தியம்

கார்கொண்ட கங்கையே கரியமாற் தங்கையே
கலைமேவு மங்கையே கனகமானே
பார்கொண்ட கன்னியே பசுமைசேர் பொன்னியே
பாதாள மன்னியே பாவையே நீ
சீர்கொண்ட வன்னமே செழுமேனி வன்னமே
செய்யபூஞ் சொன்ன மேசித் திரமேமின்
வார்கொண்ட கொங்கையே மயல்தந்த நங்கையே
வசமாக விங்குதான் வாடி வாடி

வஞ்சகஞ் செய்ய வேளையோ தருணமடி
பஞ்ச பாதகி பழிநினை யாதடி
அஞ்சேலென் றழையடி யுன்மனங் கல்லடி
தஞ்சம் வேறில்லை யொருவார்த்தை சொல்லடி
தையல்வாடி. (51)

### தரு

விரகம் பொல்லாதே யெந்தன் விரகம் பொல்லாதே
விற்பனர் பெற்றிடுந் தனமே அற்புதபொற்கனியனமே
மருவளர்தேனே யெவ்வன மடமானே யெந்தன் (விரகம்)

விரைமலர் சூடி மிகவிளையாடி
அருமையாய் கூடி நாம் அணைகுவோம் வாடி யெந்தன்
(விரகம்)

காவு சொல்லாதே சும்மா கடிந்து கொல்லாதே
மருவியல்லாதே யெந்தன் மனது நில்லாதே யெந்தன்
(விரகம்)

எனையினி மேவி யிணங்கடி பாவி
உனைமனந்தாவி யையோ வுருகுதென்னாவி யெந்தன்
(விரகம்)

அருகினில் வாராயுந்த னருட் கண்ணால் பாராய்
விரும்பு தென்றாராய்க் காமவிடாய் தனைத்தீரா யெந்தன்
(விரகம்) (52)

## சகுந்தலை சொல் கொச்சகம்

எந்தையெனுங் கண்ணுவனா ரில்லாத வேளையிலே
வந்துமையல் கொண்டுமிக வாடுகிறே னென்றுசொன்னால்
உந்துநெறி மாமுனிவ ருள்ளமறி யாமலேநீ
இந்தவகைப் பேசலுனக் கேற்குமோ மன்னவனே (53)

## வசனம்

கேளும் மகாராசனே யெனது தந்தையாகிய கண்ணுவ மகாரிஷியானவர் யில்லாத வேளையில் தனித்து வந்து இப்படி பேசுகிறது சரியல்ல. கண்ணுவர் வரட்டும் மகாராசனே.

## ராசாசொல் கொச்சகம்

கற்றமுனி வருன்னை காதலுடனே வளர்த்து
மற்றொரு வர்க்கீயாமல் வைத்திருக்க ஞாயமுண்டோ
குற்றமில்லை யெந்தனைநீ கூடியணைந் தாலதற்கு
வெற்றிதரு மாமுனிவர் வேறொன்றுஞ் சொல்லாரே. (54)

## வசனம்

வாரும் பெண்ணே சகுந்தலை. உன்னைக் கண்ணுவ மகாரிஷி வளர்த்து யிளிமேல் யோக்கியானைப் பார்த்து பாணிக்கிரகணஞ் செய்து கொடுப்போரே யல்லாமல் சும்மா வைத்திருக்க ஞாயமில்லை. ஆன படியினாலே இப்போது என்னைக் கூடியணைந்தால் அந்தக் கண்ணுவ மகாரிஷி ஒன்றுஞ் சொல்ல மாட்டார் வாரும் பெண்ணே.

## சகுந்தலை - கொச்சகம்

சொல்லா ரெனவுரைத்த தோன்றலே நீதிநெறி
எல்லா மறிந்தவா ளிப்படியுஞ் சொல்வாரோ
வல்லார நியவிவாகஞ் செய்யா மன்மட
நல்லார் தமைமருவல் ஞாயமோ மன்னவனே (55)

## வசனம்

கேளும் மகாராசனே உம்மைப் பார்த்தால் எல்லா மறிந்தவர் போற்காணுது. என் தந்தையாகிய கண்ணுவ மகாரிஷியில்லாத வேளையில் வந்து விவாகமில்லாத பெண்களைக் கூடி மருவுதல் ஞாயமோ செல்லும் மகாராசனே.

## ராசர் கொச்சகம்

விண்ணின் அமுதேகேள் விவாகத்தில் யெட்டுவிதம்
பண்ணும்பி ரமபிரசா பத்தியமா ரிடந்தெய்வந்
தண்ணரசி ராட்சச பசாசுடனே காந்தருவம்
நண்ணுமதிற் காந்தருவ நல்ல விவாகமிதே. (56)

## வசனம்

கேளும் பெண்ணே சகுந்தலை. விவாகத்தினுடைய முறையை சொல்லுகிறேன். பிரம விவாகம், பிரசாபத்திய விவாகம், ஆரிடவிவாகம், தெய்வ விவாகம், ராச விவாகம், ராட்சத விவாகம் பைசாச விவாகம் காந்தருவ விவாகம். இப்படி எட்டுவித விவாகமுண்டு. அதில் காந்தருவ விவாகம் கொடுப்போரும் கேட்போருமில்லாமல் ஸ்ரீ புருஷாள் இருவரும் தாமே கூடுவது. நாமிருவரும் கூடுவோம் வாரும் பெண்ணே.

## சகுந்தலை கொச்சகம் விருத்தம்

கல்லெனத் திரண்ட தோளாய் காந்தருவ விவாகஞ் செய்து
மெல்லிய லாரைக் கூடல் விதியுள்ள தென்று சொன்னாய்
எல்லையி லுலகை யாளும் இறைவனே யுனக்கு தேவி
இல்லையோ வுண்டோ மெய்யா யெனக்கிதை யுரைசெய்
வாயே (57)

## வசனம்

கேளும் மகாராசனே. என்னைக் காந்தருவ விவாகஞ் செய்து கொள்ள வேணுமென்று சொல்லுகிறீரே. உமக்கு இதுவரையில் விவாகமில்லையா பட்டத்து தேவியான மனையாளில்லையா என்னுடனே உண்மையாகச் சொல்லும் மகாராசனே.

## ராசா - திபிதை

மன்னியவு லகையாண்டு வந்ததல்லா மல்வேறோர்
கன்னியையி துவரைக்கும் கலியாணஞ் செய்ததில்லை
இன்னிசைக்கு யிலேகேளாய் இணங்கியென்விர கந்தீர்த்தால்
பன்னுவதென் னநீயென் பட்டத்து தேவிகண்டாய். (58)

வசனம்

கேளும் சகுந்தலை. நானிது வரைக்கும் கலியாணஞ் செய்ததில்லை. எனக்குப் பட்டத்துத் தேவியுமில்லை. இப்பவும் என்னுடனே கூடி என் காம விடாயைத் தீர்பியே யானால் நீ யென் பட்டத்து தேவியென்பதற்கு சமுசிய மில்லை வாரும் பெண்ணே.

சகுந்தலை திபிதை

என்பெரு மனையாள் நீயே யென்றுநல் லிதவு சொல்லி
அன்புட னென்னைச் சேர்ந்துன் னைக்கரை தீர்ந்த பின்பு
மென்புவி யறிய வேறே விவாகம் நீசெய் துகொண்டால்
யின்புறு மரசர் கோவே இதற்குநா னென்ன செய்வேன்(59)

வசனம்

கேளும் மகாராசனே நீ எனக்குப் பெண்சாதி என்றும் நானே உனக்குப் புருஷனென்றும் இப்போது உதவு வார்த் தையைச் சொல்லி என்னைக் கூடியணைந்து உன்னைக் கரை தீர்ந்தபின்பு நீ போய் வேறே விவாகஞ் செய்து கொண்டால் பின்பு நானென்ன செய்குவேன் மகாராசனே.

ராசா திபிதை

கன்னியை தம்மை வேறே கனவிலும் நினைப்ப தில்லை
அன்னமெய் சொன்னேன் சொன்னே னனையநீ கொள்ள
வேண்டாம்
உன்னுட திருவயிற்றி லுதித்திடு மைந்தனுக்கு
மன்னிய வுலகையாள மணிமுடி சூட்டுவேனே. (60)

## ராசா வசனம்

அகோ கேளும் பெண்ணே சகுந்தலை. உன்னையன்றி நான் பரஸ்திரி முகத்தைப் பார்க்கிறதில்லை. நீ யொன்றுக்கும் சந்தேகப்பட வேண்டாம். நீயே யென் சுய பத்தினி. உன் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கு யிந்த வுலகமெல்லாம் ஆளும்படியாக முடிசூட்டுவேன் வாரும் பெண்ணே.

## சகுந்தலை விருத்தம்

எந்தைகண்ணு வனாரிங்கே யில்லாத வேளைதன்னில்
வந்துநீயென் னைக்கூடி மருவினாற்த குமோநாளை
உந்தனைநான் கண்டேனோ வுன்முக றிவனோவென்
றிந்தவாச கத்தைசொன்னா லிறைவனே நானென்ன
செய்வேன். (61)

## வசனம்

கேளும் மகாராசனே யெனது நந்தையாகிய கண்ணுவ மகாரிஷி இல்லாத வேளை பார்த்து வந்து யென் பேரிலே மோகித்து யென்பட்டத்துக் தேவி யென்றும் உன் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கு பட்டந்தரிக்கிறேனென்றும் யிச்சகம் பேசிக் கூடினால் தகுமோ. நாளையுன்னைக் கண்டவனார் வுன் முகத்தைப் பார்த்தவனாரென்று சொன்னால் அப்போது நானென்ன செய்வேன் மகாராசனே.

## திபிதை

அன்னமேகே ளாயுந்தன் அதிசயமெங் குங்காணேன்
மின்னனையா ரைச்சேர்ந்து விரகநோய் தீர்ந்ததன்பின்
உன்னையார்கண் டாருந்தன் முகத்தையார றிவாரென்று
சொன்னவரு லகிலுண்டோ தோகையேயு ரைசெய்வாயே.

(62)

## வசனம்

கேளும் பெண்ணே சகுந்தலை. நீ சொல்லுகிற அதிசயமான வார்த்தையை நானெங்குங் கேட்டதில்லை. ராசாக்கள் ஸ்திரிகளைக் கண்டு அவர்களைக் கூடி தங்கள் விரகந் தீர்ந்த பின்பு உன்னை யார் கண்டார். உன் முகத்தை யார் கண்டார் யென்று சொன்ன அரசர் உலகத்திலுண்டோ. இல்லை ஆகிலும் உனக்கு பிரமாணம் செய்து கொடுக்கிறேன். வாரும் பெண்ணே.

## ராசா தரு

நம்படிபெண்ணே என் வார்த்தையை நம்படியென்கண்ணே
வன்பெறுமாகாச வாணிபூமிதேவி
மனத்தே நித்தியமாக விதுவே சத்தியமாக (நம்படி)

கன்னியேநீ யென்பெண்சாதி நானுன்
கணவனிதேயுள்ள சேதி
தன்னமையா லுன்னை யல்லாமல் வேறேபெண்
தன்னைக் கொள்ளுவதில்லை யுன்னைத் தள்ளுவதில்லை
(நம்படி)

எந்தன் வார்த்தையை நீ தள்ளாதே நெஞ்சில்
எதுவுஞ் சந்தேகங் கொள்ளாதே
உந்தன் வயிற்றி லுதித்திடும் பிள்ளைக்கிவ்
உலகமது புரப்ப இலகுமுடி தரிப்பன் (நம்படி)

பட்டத்து தேவியும் நீயே எந்தன்
பாராளுவோ னுந்தன் சேபே
கட்டழகி யென்னை கைவசமாக்கிய
கண்ணே யுந்தநிமித்தியஞ் சொன்னேன் சந்த தஞ்சத்தியம்
(நம்படி) (63)

## ராசா திபிதை

மெய்யுநல்ல றமும்நீதி விளக்கமும ருளுங்கொண்டு
வையகமுழுதுங்காக்கும் மன்னமன்ன வனாய்கண்டாய்
தையலேயு னக்குச்செய்த சத்தியமறந் தோனானாற்
தெய்வந்தான் பொறுத்திட்டாலுஞ் செகதலம்
பொறுத்திடாதே (64)

## வசனம்

கேளும் பெண்ணே சகுந்தலை உண்மையையும் தர்மத்தையும் நீதியையும் பிரகாசத்தையும் கிருபையையும் ஒரு ஆபரணமாகப் பூண்டு இவ்வுலகத்திலுள்ள எவ்வகைப் பட்டவுயிர்களையும் தன்னுயிரெனப் பாதுகாக்கும் இராச ராசர்களுக்கெல்லாம் ராசனாகிய நான் உனக்குப் பொய் சொல்ல மாட்டேன். மேலும், உனக்கு செய்து கொடுத்த சத்தியத்தை மறப்பேனானால் தெய்வம் பொறுக்காது அல்லது தெய்வம் பொறுத்தாலும் யிந்த பூமி பொறுக்க மாட்டாது. இப்பவும் எனக்கு காம வேதனை பொறுத்திடக் கூடவில்லை. இனி மேலாகிலும் நாமிருவரும் காமக்கிரீடை செய்யலாம். வாரும் பெண்ணே.

## ராசா சொல்லுகிற கந்தார்த்தம்

கேளாயிள மயிலே மிக மீளாமயன் மீறியாக
மெலிவுறுமென்னைநீ
ஆளாவிடிலுயிர் போகுது தாளாதினிமே லென்னாசைத்
தையலே வாடி நான் சொன்னது பொய்யல்ல வாடி
வெய்யபாவி யினியையமே னென்னாவி
உய்யும்வாறு கிருபை செய்யடி வொய்யாரத்
தையலே வாடி நான் சொன்னது பொய்யல்ல வாடி (65)

அன்றே யுன்றிரு மனையவ ளென்றே பிரமனெதிய படியே
இன்றே இசை குவதென் நன்றே யெனது பிராண். (66)

## தரு

நாதனே வாரும் சகதலப் பிரக்கியநாதனே வாரும்.
கோதகன்று நின்ற நீதனென்று மிந்தப்
பூதலங்க ளெங்கும் மோதுகின்ற எந்தன்
நாதனே வாரும் சகதலப்பிரக்கியநாதனே வாரும். (67)

## ராசா சொல்

கானே மருவிய இளமடமானே யுனதாசை வெள்ளவாரியில்
வீழ்ந்தே
நானே யலைவது மிதமதறல் தேனே நாமொருமையாகச்
சேருவோம் வாடி சேர்ந்தானந்தங் கூருவம்வாடி
சாரும் நண்பகலில் யாவரும் வந்திராமுன்
நேருமிங்கே யிருவொரு மின்பமாகச்
சேருவோம் வாடி சேர்ந்தானந்தங் கூருவம் வாடி. (66)

## சகுந்தலை சொல்

ஆராலுமதி ரோகிணியுமென ஏருளரதிமதனுமென்ன இனி
துடனிழையுஞ்
சாரையும் நாகமுமெனவே சீருடனே நாமொருமையாய்ச்
சேருவோம் வாருஞ் சேர்ந்தானந்தங் கூருவோம் வாரும்
சாரும் நண்பகலில் யாரும் வந்திரா முன்
நேருமிங்கே யிருவோரு மின்பாகச் (சேருவோம்) (69)

## வசனம்

கேளாய் பெண்ணே சகுந்தலை உன்னுடைய பிதா வாகிய கண்ணுவ மகாரிஷி வேள்வி முதலாகிய நற்றவங்கள் செய்யப்பட்டயிடமிது. ஆதலால் நாமிருவரும் யிவடத்திற் காமக் கீரிடை செய்யலாகாது. அதோ அந்த குருக்கத்தி மரத்தின்கீழே பன்னக சாலையொன்றிருக்கிறது போற் றோன்றுகின்றது. அவடத்தில் நாமிருவரும் கூடி விளை யாடலாம். வாரும் பெண்ணே.

## ராசா கந்தார்த்தம்

மலர்வுற்றவர் கணைபாலுள் மெலிவுற்றிடு விரகதாபமே
விடுதையே
கலவிக்குதுத்தி மகிழ்வொடு குலவிப் பிரியமாக
கூடுவோம் வாடி கொஞ்சி விளையாடுவோம் வாடி
நாடி மிஞ்சியுற வாடி யின்பவகைத்
தோடியின்ப மலர்ச்சூடிப் பாடிநாம் (கூடுவோம்) (70)

## சகுந்தலை கந்தார்த்தம்

பாவிச்சிலை மதனவிடுகணை தாவிக்கரை கண்டிலர்
தமியை அடைந்தேன்
ஆவிக்கினி துறுபுட்குரல் கூவிப்பிரியாகக்
கூடுவோம் வாரும் கொஞ்சி விளையாடுவோம் வாரும்
நாடிமிஞ்சி யுறவாடி யின்பவகைத்
தேடியின்ப மலர்ச்சூடிப் பாடி நாம்
கூடுவோம் வாரும் கொஞ்சி விளையாடுவோம் வாரும்.
(71)

## ராசா திபிதை

ஆருக்குஞ் சத்தியமென்ப ததுவேகண் கண்டதெய்வம்
பாருக்கு ளுனக்கு சொன்ன பரவசம றப்பதில்லைச்
சீருக்கு ளுயர்ந்தமாதே செலவுதந்த னுப்பவேண்டும்
ஊருக்குச் சென்றுநாளை யுன்னைநான் வரச்செய்வேனே.
72

## வசனம்

வாரும் என்பிராண நாயகி. ஆருக்குஞ் சத்தியமே பிரத்தியட்சமான தெய்வம். ஆதலால் நான்வுனக்குச் செய்து கொடுத்த சத்தியந் தப்புகிறதில்லை. வந்து வெகு நேரமாச்சுது. யெனக்கு சிலவு கொடுத்து அனுப்பும் பெண்ணே.

## திபிதை

நற்றவர் முனிவர் வந்து நடந்தவா றிந்த பின்பு
மற்றெனை அனுப்பு விக்க மகிழ்ந்துநா மூர்க்குச் சென்றார்
குற்றமொன் றில்லை நமக்குங் கோதிலா கண்ணு வர்க்கும்
பற்றுமிங் கிதைக்கேட் போற்கும் பார்ப்போர்க்கு அழகு
மன்னா. (73)

## வசனம்

கேளும்என் பிராணநாதா. என் பிதாவாகிய கண்ணுவ மகாரிஷியானவர் இங்கே உமக்கு மெனக்கும் நடந்த விருத்தாந்தமெல்லாங் கேட்டு அவர் சந்தோஷமாய் என்னைக் கூட்டி அனுப்பும்படி நடப்பித்துக் கொண்டு

போவீரானால் நம்மிருவருக்கும் யாதொரு குற்றமுமில்லை. இதல்லாமல் கண்ணுவமகாரிஷிக்கும் இதை கேட்பவர்க்கும் பார்ப்பவர்க்கும் அழகாயிருக்கும் பிராணநாதா.

## ராசன் திபிதை

வேட்டையிற் தனித்தே னென்பின் விறலுடன் வந்த வீரர்
காட்டகந் தன்னி லென்னைக் காணாமல் தேடு வார்கள்
கூட்டமாய் வரைக் கூடி குலவுநன்ன கர்க்குச் சென்று
நாட்டுமந் திரியா லுன்னை நாளைநான் வரச்செய் வேனே
(74)

## வசனம்

அகோ கேளும் பெண்ணே பிராணானகிய நான் வேட்டைக்கு வந்தயிடத்தில் ஒருமானைத் துரத்திக் கொண்டு நான் தனித்து வந்து விட்டேன். பின்னாலே வந்த சேனைகள் தேடுவார்கள். நான் சீக்கிரமாய் நாளைய தினம் மந்திரி அனுப்பி உன்னை அழைப்பித்துக் கொள்ளுகிறேன் பிராண நாயகி.

## சகுந்தலை வசனம்

அகோ வாரும் பிராண நாதனே. உமக்கு காரியமிருந்த தானால் அப்படியே போய் வாரும். என்னை நாளையத் தினம் அழைப்பிக்கிறேனென்ற பேச்சை ஆகாஷவாணி பூமிதேவி யறியத் தக்கதாக செய்து கொடுத்த சத்தியத்தையும் மறந்திடவேண்டாம். போய் வாரும். பிராண நாதனே.

## சகுந்தலை கொச்சகம்

மங்கை சகுந்தலையு மன்னவனுஞ் சேர்ந்தணைந்து
தங்குமுடி துஷ்டியந்தன் தன்னகர்க்குப் போனபின்பு
பொங்குமிகு மாமுனிபின் போயிருந்த கண்ணுவனார்
தங்குமெழி லாசிரமந் தன்னிவர் வந்தாரே. (75)

## வசனம்

அகோ கேளும் சகுந்தலை சுகமாயிருக்கிறாயா - கேளும் எனது பிதாவாகிய மகாரிஷியே. தேவரீர் அனுமதி யில்லாமல் நான் ஒரு குற்றம் செய்துவிட்டேன். அது பொறுக்க வேண்டும் - கேளும்மா சகுந்தலை யிந்தவுலக மெல்லாம் ஒரு குடையிலாளப்பட்டவனாகிய ஒரு பிள்ளை உன் கர்ப்பத்திலிருக்கிற படினாலே சந்திரவமிஷத்து துஷ்டியந்த மகாராசன் தேவியானதினாலும் எனக்கு மிகவும் சந்தோஷமாச்சுது. சுகமாயிரும் பெண்ணே. இப்படி இருக்கற நாளையிலே மாசம் பத்தும் நிறைந்து கர்ப்ப வேதனைப் படுகிற விதங்காண்க.

## சகுந்தலை சொல்

அடிதோழி சவுந்தர வல்லி இன்றைய தினம் வயிற்றி லுளைக்குது யிரண்டு பக்கமும் நோகுது. உடம்பு ஒரு வகையாயிருக்குது என்று புலம்புகிற தரு.

## தரு

என்ன காரணம் அடி அம்மா சவுந்தரா ஏது காரணம்
அன்னமே யடி சொர்ணமே நானின்னஞ்
சின்னவளவள் பிள்ளையொன்றும் பெறாதவள்

என்ன மாயமோ என்ன உபாயமோ
என்னோ யென்னடி வயிறு நோகுதே (என்ன)

இப்படி வருமென் றறிந்தேனானால்
அப்போதே யவ்வரசனைக் கூடேன்
தப்பி போச்சிதற் கெப்படி சொல்லடி
அப்பியே யென்னிடை மிகவும் நோகுதே (என்ன)

கள்ளமொன்று மறியாதிருந்தேனே
வள்ளல் பேர் சொல்ல எந்தன் வயிற்றினில்
பிள்ளை வந்தது போதும் போதுமடி
உள்ளுள்ளே என்னைத் துள்ளி உதைக்குதே (என்ன)

சர்க்கரைக் கஞ்சி வார்த்தென்னைத் தேற்றிய
துஷ்டியந்த மக ராசனைக் காணேனே
இக்கதையை யொருவருடன் சொன்னால்
வெட்கம் போகுதே பக்கமும் நோகுதே (என்ன) (76)

இப்படி பிரசவ வேதனைப் படுகிற சமாச்சாரம் கண்ணுவ மகாரிஷி கேள்விபட்டு மருத்துவச்சியை அழைப்பிக்க மருத்து வச்சி வருகிறவிதம் காண்க.

தரு

என்னைப் போல் நல்ல மருத்துவ சமர்த்தி
இவ்வுலகினி லில்லை மெய்யா
ஈதென்ன பொய்யா
எனது கையா
சஞ்சீவி அய்யா (77)

## மருத்துவச்சி வசனம்

ஆரடி அம்மா. இந்த வளவிலே- இப்படி வாடி - பாட்டி அடி பாட்டி-என்னடி பேத்தி -என்ன செய்யவேண்டி பாட்டி- எனக்கு இடை விட்டு போகுதே. பக்கமெல்லாம் நோகுதே. வேர்க்குது தாகமெடுக்கு. இருந்திருந்து வயற்றிலே முட்டுது. மிகவும் பயமாயிருக்குதடி பாட்டி. மறுபடியும் சகுந்தலை புலம்பல்.

### தரு

என்ன செய்குவேன் அம்மா அம்மா நான் யேது செய்குவேன்
அன்னியர் போலென்னை யெண்ணாதே எண்ணாதே
ஆதாரம் நீ பெற்ற மாதாவும் நீயடி (என்ன)

அன்னமே யீதறிவேனோ முன்னமே
பொன்னே யென்னாற் பொறுக்க முடியாது
போதுமிது போதும் நான் (என்ன)

அம்மா நீ வாடி அய்யோ அய்யோ அ ஆ நீ அந்தபக்கம் போடி
சும்மா யென்னை பிடித்தே யலட்டாதை
சோக முடுக்குது தாக மெடுக்குது.
தோகையே யடி சித்திர ரேகையே
அம்மா யீதென்னாற் சகித்திடலாமா யினி ஆமா (என்ன)

எங்கும் நோவுதே யிடையிற்றுப் போகுதே
உங்களாலே பாதியுடம்பு முறியுதே
ஒத்தியிரு சற்றே ஒத்தியிரு ஆஅ
உளைக்குது திரேகங் களைக்குது

சங்கடம் ஐய்யையோ பெண்ணாய்ப் பிறக்கவும் (என்ன) 78
அடி பாட்டி - யேண்டா பேராண்டி - என்ன பிள்ளை பிறந்தது

## மருத்துவச்சி கவி

ஒருவரொப்பிலா பிள்ளை வுலகமே ஆளும் பிள்ளை
வரமெல்லாம் படைத்த பிள்ளை வலிமையிற் சிறந்த பிள்ளை
தருமதேவதைநேர் பிள்ளை சகுந்தலை யெனும் பெண்பிள்ளை
அருமையாய் பெற்ற பிள்ளை ஆண்பிள்ளை அறிந்தி டாயோ (79)

## வசனம்

இந்தப்படி குழந்தை பிறந்த மாத்திரத்தில் கண்ணுவ மகாரிஷி பரதனென்னும் பேரிட்டு வாழ்த்தினார். சகுந்தலை யம்மாள் தாலாட்டுகிறது.

## தாலாட்டு

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
பொன்னே நவமணியே பூலோக சுந்தரமே
தன்னே ரொருவரில்லாச் சந்ததியே கண்வளரீர் (ஆரா)

கண்ணே யென்மணியே கற்கண்டே சர்க்கரையே
தண்ணே யெனது தவப்பயனே கண்வளராய் (ஆரா)

செந்தாமரை மலரே செகத் தலத்தை யாளவந்த
சிந்தாமணியே யென் செல்வமே கண்வளரீர் (ஆரா)

சீராரும் நல்லமுதே தித்திக்குஞ் செந்தேனே
பாராளுஞ் சந்திரகுல பாக்கியனே கண்வளராய் (ஆரா)

பிள்ளை கலிதீர்த்து பேருலகை யாளவந்த
வள்ளலென சிறந்த வாழ்வேநீ கண்வளராய் (ஆரா)

உற்றவுல கேழும் ஒருகுடையி லாளவந்த
கொற்றவனே யெங்கள் குலக்கொழுந்தே கண்வ்வளராய்
(ஆரா)

பார்புகழும் கண்ணுவரைப் பாட்டனெனவே படைத்தார்
சீர்தழைக்கு மன்னர் சிகாமணியே கண்வளரீர் (ஆரா)
(80)

## வசனம்

அப்பா விவேகசிந்தாமணி நம்முடைய சகுந்தலையை அழைத்து வாருமய்யா - அப்படியே அழைத்து வந்தேனைய்யா சுவாமி.

## சகுந்தலை சொல்

நாதனே கலஞ்சேர் வேதனே விமலா
நீதனே நெறியாய் போதனே போற்றி (81)

## கண்ணுவர் வாழ்த்து

பொன்னே வாழி பூவையே வாழி
அன்னே வாழி அருளே வாழி
மின்னே வாழி மெல்லியே வாழி
தன்னே ரில்லா சகுந்தலை வாழி (82)

## வசனம்

அம்மா சகுந்தலை பரதனுக்கு வயது ஐந்து ஆச்சுது. அவனுக்கு வித்தை சொல்ல வேணும். அனுப்பும்மா. (சகுந்தலை) அப்பா பரதா நம்முடைய அய்யாயிடத்தில் வாசியும்பிள்ளாய் - அப்படியே நல்லதம்மாள் (கண்ணுவர்) அப்பா பரதா யிப்படி உட்காரு. ஹரிநமோத்து சிந் நம் நமா குரு வாழ்க. குருவே துணை - படிப்பு வந்தது. அடா விவேக சிந்தாமணி பரதனுக்கு வில்வித்தை கற்றுக்கொடும் பிள்ளாய்.- அதுவும் வந்தாச்சு. அகோ வாரும்மாள் சகுந்தலை. பரதனுக்குச் சகல வித்தையும் ஆச்சுது. நீ பரதனை அழைத்துக்கொண்டு அஸ்தினாபுரம் போய் துஷ்டேந்திர மகாராசவிடத்தில் போய் சேரும்மாள். - அப்படியே போகிறேன் சுவாமி - அட விவேகசிந்தாமணி இவாளை இட்டுக்கொண்டுபோய் அஸ்தினாபுரம் சேர்த்து விட்டு வாரும் பிள்ளாய்.

## சகுந்தலை தரு

ஐயா வுன்னை யெப்படி பிரிவேன்
ஐயா எடுத்தே அருமையுடன் வளர்த்த (ஐயா)

கண்ணுக்கு இமை போலும் கன்றுக்குப் பசுபோலும்
கனிவா யிதுவரைக்கு மளித்தாயே

பெண்ணுக்கு ளெல்லாமொரு பெண்ணரசா யென்னை
பிரியமுடன் வளர்த்து களித்தாயே

என்று மென்னாலே நீ என்ன பலனைப் பெற்றாய்
எந்தையே வுன்னாலேநான் எல்லா பலனுங் கண்டேன்.
(ஐயா) (83)

## கண்ணுவர் வசனம்

கேளும்மா சகுந்தலை நீ விசனப்பட வேண்டாம். எந்தெந்த காலத்தில் எவ்விடமிருக்க வேணுமோ அவ்விடத்திற் இருக்க வேணும். சுகந் துக்கமிரண்டு மனுபவிக்க வேணும். உனக்கு ஒரு குறையும் வரமாட்டாது. உன் புருஷனைச் சேர்ந்து சுகமாயிரும்மா- அப்படி யே . சரணம் சரணம் போய் வாரேன் சாமி - (போறது) - அப்பா விவேகசிந்தாமணி அறியாத குழந்தையை யிட்டுக்கொண்டு இந்தக் காடு மலை கடந்து வனாந்தரத்தில் நடக்கும்படி பிரம்மன் செய்தானல்லவா?

## பொது வசனம்

இந்தப்பிரகாரம் குழந்தை நாளுக்கு நாள் வளர்ந்து ஐந்து வயதான மாத்திரத்திலே அந்தப் பிள்ளைக்கு கண்ணுவ மகாரிஷி. ஆறு வேத சாத்திர முதலாகியதும் சொல்லி வைத்து ஆனையேற்றம், குதிரையேற்றம் வில் வித்தை முதலாகியதும் கற்பித்து கொடுத்து வயது ஏழானமாத்திரத்திலே சகுந்தலையும் பிள்ளையும் கூட்டி தன்னுடைய சீஷனை யும் துணை கூட்டி துஷ்டேந்திர ராசாவண்டக்கு அனுப்பினார். வழியிலே போகும்போது சகுந்தலை தரு.

## தரு

நம்பி மோசம் போனேன் - யினி
நானென்ன செய்வேனே

அம்புவி யறியாத ஐயோ இதென்ன தொல்லை
அமைச்சரா லுனைவர வழைக்கிறே னென்ற சொல்லை
(நம்பி)

கன்னியே சமயத்திற் கலக்கம்நீ பண்ணாதே
கலியாணம் வேறே நான் செய்வேனென் றெண்ணாதே
இன்னமுதே யென்னை யாரென்று நீ பார்த்தாய்
மின்னே யுனை மறவேனென்று சொன்ன வார்த்தையை (நம்பி)

உண்மையா யென்சொல்லை யுலகத்தில் நாட்டுவன்
உன் மகனுக்கே ஒளிர்முடி சூட்டுவேன்
வண்மையாகச் சொன்னேன் எனக்கே னிந்தப்பழி
மறவேன் மறவேன் என்று மன்னவன் சொன்ன மொழி
(நம்பி)

பூமிதேவி யாகாசவாணி சாட்சி
பொன்னே எனக்கிது போதும் வேறென்ன
சாட்சிதாமசமேனினி தழுவிலிது நித்தியஞ்
சதிசெய்யே னென்றவர் தலைதொட்டு சொன்ன சத்தியம்.
(நம்பி)(84)

## வசனம்

சகுந்தலையும் பிள்ளையும் பாதி வழியில் போகும் போது பிள்ளையாகிய பரதன் சாதங்கேட்கும்போது சகுந்தலை புலம்புகிறது.

## தரு

என்ன செய்வேன் ஏது செய்வேன் என்மகனே கண்மணியே
என்னமாய் பசிக்குதோதான் இலஞ்சியமே என் மகனே
என்ன பாவஞ் செய்தேனோ நான் இப்படி

உனைவதைக்க இருதயந் துணிந்துதோ என் மகனே
நீர் நிமித்தியங் கானகத்தில் யென்னை அமுது கேட்டால்
நினைத்தபோதே வருமோ யென்மகனே
மன்னன் துஷ்டியந்தராசன் வாழ்புரஞ் சேர்ந்தால்
அன்னமளிப்பேன் வாராய் யென் மகனே. (85)

இந்தப் பிரகாரம் பட்டணம் போய்ச் சேர்ந்து கொலுவுக்கு வந்திருக்கிற ராசாவிடத்தில் சமீபத்தில் வந்த மாத்திரத்தில் கட்டியக்காரன் நீங்கள் ஆரென்றும் உள்ளே போகக் கூடாதென்றும் சொன்னவளவில் சகுந்தலை கட்டியக்காரனுடனே ஆனால் உங்கள் ராசாவுக்கு நாங்கள் வந்த சமாசாரம் சொல்லுங்கோள் - என்ன சொல்லுகிறது - உங்கள் ராசாவினிடத்திற்குப்போய் உமது பெண்சாதியும் பிள்ளையும் வந்திருக்கிறாரென்று சொல்லும்பிள்ளாய்.

### கட்டியக்காரன்

திருமகள் போலு மோர்தாய் சித்தரசன் போலோர் பிள்ளை
இருவரும் வந்தார் நீங்க ளாரென வடியேன் கேட்க

மருவுநா னரசன் தேவி மைந்தனோ வரசன் மைந்தன்
அருமையாய் வந்தோ மென்றே அறிவிக்கச்
சொன்னாரையா (86)

### வசனம்

அகோ கேளும் ராசபரமேஸ்பரா ஆசார வாசலில் திருமகளைப் போலொரு தாயும் மன்மதனைப்போல ஒரு பிள்ளையும் ஒரு பால சந்நாசியும் வந்தார்கள். அவர்களை ஆரென்று கேட்டேன். தேவரீருடைய பத்தினியும்

பிள்ளையும் வந்திருக்கிறோமென்று தெரிவிக்கச் சொன்னார் சுவாமி.

### வசனம் ராசா சொல்

ஆ ஆ ஆ இதென்ன ஆச்சரியம். ஓய் மந்திரிகளே ஓ ஓ ராசாக்களே. இதென்ன காரணம் கேட்டீர்களோ நம்முடைய ஆசார வாசலிலே யென் பெண் சாதியென்றும் பிள்ளை யென்றும் இருவர் வந்திருக்கிறார்களாம். மிகவும் நன்றா யிருக்கிறது. இராத்திரி எவளாகிலுங் கனவு கண்டு வந்தாளோ அல்லது ஆராகிலுஞ் தந்திரஞ் சொல்லி அனுப்பினார்களோ தெரியாது. ஆகிலும் அவர்களை வரச் சொல்லும் பார்ப்போம்.

### சகுந்தலை

மன்னனே சரணம் மகிபனே சரணம்
மின்னிய நெடுமால் வேந்தனே சரணம்
என்னை யாளுடைய யிறைவனே சரணம்
நன்னய பிராண நாதனே சரணம் (87)

### பரதன்

சந்திர குலத்தில் வந்தவ தரித்த
எந்தனை அளித்த தந்தையே சரணம் (88)

### ராசா திபிதை

ஆரடி பெண்ணே நீதா னெங்கிருப பதுவோ வுந்தன்
பேரென்ன வூர்தா னென்ன பிறந்தி _ மெவிடங் கண்டாய்
தார்குழ லுனக்கு ராசா சபைதனில் வேலை யென்ன
சீர்தரு கொலுவில் வந்த சேதியை சொல்வாய் பெண்ணே.
(89)

## வசனம்

ஆஆஆ மந்திரி இவளார் நீங்கள் அறிவீர்களா - நாங்களறியோமையா - ஆரடி பெண்ணே நீ யெங்கே இருப்பது. உன்னூர் பேரென்ன. பிறந்த இடமெங்கே. உனக்கு யிந்த சபையிலே வேண்டிய காரியமென்ன தெரியச் சொல்வாய் பெண்ணே.

## சகுந்தலை பதில் விருத்தம்

சொல்லுமென்றெ னக்குரைத்தசுடர்முடிமன் னாகேளாய்
வல்லிநானுன் றன்தேவி மைந்தனுன்மைந் தன்கண்டாய்

வல்லகண்ணு வர்வளர்த்த மகள்சகுகந்த லைநானிந்த
எல்லையிற்சி றுவன்தன்பே ரெழில்மிகும்ப ரதன்றானே
(90)

## வசனம்

அகோ கேளும் ராசனே நானுன் பெண்சாதி. இந்தப் பிள்ளையுன் பிள்ளை மேலும் அடியாள் கண்ணுவ மகாரிஷி யினுடைய புத்திரி யென் பேர் சகுந்தலை. பிள்ளையின் பேர் பரதன். இதுதான் வரலாறு மகாராசனே.

## ராசா கவி

இவள்மனை யாளா மிங்கே யெதிர்நிற் குமெவ னோபையல்
அவனியை யாளப் பெற்ற அருமையென் மகனா மிந்த
உவமையி லுலகின் மன்னா ருயர்ந்தவ ருற்றார் பெற்றார்
எவர்களு மறிய வந்த என்மனை யாளைப் பாரீர் (91)

### வசனம்

ஆ ஆ ஆ ராசாக்களே இது என்ன ஆச்சரியம். இவளென் மனையாட்டியாம். அதோ நிற்கிறானே ஆரோ ஒரு பயல் அவனென் அரசை ஆளவந்த புத்திரனாம். அந்த பூலோகத்திலுள்ள அன்பத்தாறு தேசத்து ராசாக்களும் வேத வேதியரும் உற்றார் பெற்றார் உறவின் முறையால் மற்றுமுண்டான பேர்களுமறியும்படியாய் நேற்று நான் மணையில் உட்கார்ந்து மங்கிலியத் தறித்தேனே. அந்த மனையாள மிந்த மனையாள். இவளை யெல்லோரும் பாருங்கோள் ராசாக்களே மந்திரிகளே.

### சகுந்தலை

மனைவியென் றதுவு மெய்யே மகனைநீ பெற்றா யானால்
இனிதுல காளச் செய்வேன் யென்றுசொன் னதுவு மெய்யே
அனைவரு மறிய இந்த அவையினிற் பங்கஞ் செய்து
நனிநகை செய்வா யென்று நானறி வேனோ மன்னா (92)

### வசனம்

அகோ கேளும் மகாராசனே. நீயே யென் பெண்சாதி என்று சொன்னதுவு மெய்யே. நீ ஆண்பிள்ளையைப் பெறுவாயானால் அந்த பிள்ளைக்கு இந்த வுலகத்தை யெல்லாம் ஆளும்படி பட்டாபிஷேகஞ் செய்கிறேனென்று சொன்னதுவு மெய்யே. இப்போது இந்த சபையிலே நீ என்னை பங்கப்படுத்தி நகை செய்வாயென்று அறியாமற் போனேன் மகாராசனே.

## மந்திரி

தொடுமு முப்பூச ணிக்காய் சோற்றோ டேமறைத்த வார்த்தை
படிமிசை கேட்டதுண்டு பார்த்தவ ரில்லை யையா

உடனிவ ளதுவுஞ் செய்வாள் உலகையு மறைப்பா ளிந்த
அடரும் வில்லங்க காரி ஆரென்றும் அறிகி லேனே. (93)

## வசனம்

கேளும் மகாராசனே. முழுப்பூசணிக்காயைச் சோற்றோடே மறைத்த(தை) உலகத்தார் சொல்ல கேட்டதுண்டு. கண்ணாரக் கண்டதில்லை. இதோ நிற்கிறாளே இவள் பருத்த முழுப் பூசணிக்காயைப் பிடி சோற்றினுள்ளே மறைத்துப் போடுவாள். இந்த பூலோகத்தை மறைப்பாள். மகா வில்லங்காரி ஆரென்று தெரிகிலேன் மகாராசனே.

## ராசா திபிதை

அடியென்னை யறிவையாநா னறிவேனோ வுந்தனைதான்
குடியிருந்தோர் நாள்கூடி குலாவிநான் வாழ்ந்ததெப்போ
முடிபுனைமன் னர்மன்னர் முன்னென்று முழுவில்லங்கத்
தொடுவழக்கி டவேகற்ற தோகைநீயெ வளோகண்டாய்.
(94)

## வசனம்

அடியென்னை நீ அறி(வை)யா. உன்னை நானறி வேனோ. ஒரு நாளாகிலும் நாமிருவருங் கூடி கொஞ்சி குலாவி எப்போது வாழ்ந்தோம். நன்றாயிருந்தது. பெண்ணாய் பிறந்தவள் இந்த ராச சபையிலே நின்று தொடு வழக்குப் பேச எங்கே கற்றுக் கொண்டு வந்தாய். போ போ பயித்திய காரி.

## சகுந்தலை புலம்பல்

### தரு

கண்ணுவ ரிருப்பிட யெண்ணமுட நன்றுவந்தீர்
மன்னவனே - என்னை
கண்டவுடனே விரகங்கொண்டு பிரமையாகி
நின்றீர்மன்னவனே

கண்ணுவர றியாதென்னை கலியாணஞ் செய்தபின்பு
மன்னவனே-யிப்போ
காதலுடனே யணைந்தால் நீதியதே யென்று
சொன்னீர் மன்னவனே

கண்ணுவர் வருமளவும் என்னுயிர் தரியாதென்றீர்
மன்னவனே- நாம்
காந்தருவ மணமாக விந்தையாய்க் கூடுவ
மென்றீர் மன்னவனே
பெண்ணரசாள கலியாணப் பெண்ணினல்லா
ளுண்டோவென்றால் மன்னவனே - கேளாய்
பெண்ணையுன்னை யல்லால்வேறு பெண்ணைக்
கொள்வதில்லை யென்றீர் மன்னவனே

பண்ணுமெனை யல்லால்வேறு பெண்ணைத்
தேடுவீரென்றால் மன்னவனே - பெண்ணே

பண்ணுவதென்னடி நீயென் பட்டத்துத்
தேவியென்றீர் மன்னவனே
உனையணைந்தா லென்மகனுக் கென்னவழியென்று
கேட்தற்கு மன்னவனே - அடி

உன்மகனுக்கே யெனது பொன்முடி சூட்டுவே
பொன்றீர் மன்னவனே
மையல் தலைக்கேறிமிக மயக்கங் கொண்ட வேளையில்
மன்னவனே - நான்
வசப்பட வேண்டுமென்று பசப்பு வார்த்தை யியன்றீர்
மன்னவனே
வையகத்தை யாளும் சந்திரவமிஷபதி நானென்றீர்
மன்னவனே - வேத
வாய்மை தப்பினாலு மெந்தன் வாக்கு தப்பாதென்று
சொன்னீர் மன்னவனே
செப்பமுடனே சத்தியஞ் செய்யுமென்று சொன்னளவில்
மன்னனவே - பூமி
தேவியாகாயத்தைக் கூவியே சாட்சி யிட்டீர் மன்னவனே
தப்பிதம் வாராதுன்றனைச் சதிசெய்யே னென்று சொன்னீ
மன்னவனே - அன்று
சட்டமுட னென்தலையைத் தொட்டுச் சத்தியஞ் செய்தீர்
மன்னவனே. (95)

### ராசா சொல்

அகோ வாரும் பெண்ணே சவுந்தர வல்லி. இந்த கட்டுகதை யெங்கை கற்றாய். போ போ பயித்தியக்காரி போ.

### ராசா தரு

போ போ பயித்தியக்காரி - வாய்ப்
பூசவந்தாய் ராசன் சபையேறி
ஆரடிநீபடு நீலி - யுன்னை
யார்தொட்டுக்கட்டினார் தாலி - சற்றும்

அஞ்சாமற் செய்கிறாய் கேலி - நான்
அறிகிலனே இந்த சோலி. (96)

## சகுந்தலை

மண்ணின் மேனின்றுபெண் ணோரஞ் - சொல்லி
வாழ்ந்தவ ருண்டோவிஸ் தாரம் - மன்னர்
மறந்தா லுண்டோபரி காரம்
சொன்ன மெல்லாமில்லை யென்றிப்போது
சொல்லுகிறீர் வாயால் வெல்லுகிறீர் போம் போம்
ஐயையோ யீதநியாயம் யெனக்கார் சொல்லுவார்
மக்கார் சொல்லுவார் ஞாயம். (97)

## ராசன் சொல்

வீணாரவீணிநீ போடி - புவி
வேந்தர்மேல் வில்லங்கந் தேடி - தலை
வெட்ட வந்தாய்வாயை மூடி - உன்சொல்
வெல்லாதடிகுடி கேடி
ஆணான பேர் முன்னே பெண்ணாடகங்கட்டி
ஆடுகிறாய் பழிபோடுகிறாய் சீசீ (போ போ) (98)

## சகுந்தலை சொல்

பொய்வந்து மெய்யை வெல்லாது - மன்னர்
பொய் சொன்னால் செங்கோல் செல்லாது - அவர்
பூமியும் வாழ்வும் நில்லாது - விட்டுப்
போமோ பெண்பாவம் பொல்லாது
செய்ய வனத்திலென்னுடனீர் சொன்ன
சேதியெங்கே மனுநீதியெங்கே போம் (ஐயை) (99)

## ராசன் சொல்

எங்கே கற்றாயிந்த வித்தை - ஓஓ
என்சொல்வே னுந்தன் சமத்தை - பெண்கள்
ஆர் சொன்னார் முன்பின் நிசத்தை - நீ
யெடுத்து கவிழ்ப்பாய் சகத்தை
பங்கே வருமென்று சற்றாகிலும் எண்ணிப் -
பாராமல் வீசுறாயத் தேறாமல் பேசுறாய் (போ போ) (100)

## சகுந்தலை

வனத்திற் தனித்துநீ வந்தாய் - யென்மேல்
மையல்கொண்டுசிந்தை நொந்தாய் - நல்ல
வாய்மைப் பரவசந் தந்தாய் - இன்று
வல்லாண்மை காட்டத் துணிந்தாய்
கனத்தவுன் வார்த்தையை நம்பினேநட்டாற்றிற்
கையை விட்டீர் சொன்ன மெய்யை விட்டீர் போம்போம்
(ஐயை) (101)

## ராசா சொல்

வனவேட்டை தான் வந்த போது - உன்னை
வழியிலே நான்கண்ட தேது - மா
தரைநம்ப வொண்ணாது - உந்தன்
வார்த்தை யெல்லாம் வெறுஞ் சூது
கனமான உன்னுட த்ராணி யெல்லாமிங்கே
காட்டுகிறாய் சும்மா நீட்டுகிறாய் சீ சீ. (போ போ) (102)

### சகுந்தலை சொல்

சதிபுருஷர்க்கிந்த வாதா - இந்த
தரணியெல்லாம்பழிக் காதா - மனஞ்
சற்றாகிலு மிரங் காதா - யிது
தர்மமோ யென்பிராணா நாதா
புதுமோகந் தன்னிலே போதித்த தெல்லாம் போய்ப்
போர்செய்கிறீர் யென்னை தூர்செய்கிறீர் போம்போம்.
(ஐயா) (103)

### ராசா சொல்

ஆனாலுநீயே சமர்த்தி - உனக்
கார்சொன்னதோ விந்த புத்தி - உற
வாடவந்தாயெல்லாம் யேற்றி - பெண்க
ளானவர்க்கே வரும் வெற்றி
தானாகவே வந்திங்கில்லாதும் பொல்லாதும்
சண்டிக்கிறாய் மெய்போற் கண்டிக்கிறாய் சீசீ (போ போ)
(104)

### சகுந்தலை சொல்

வலியவென் மேலாசைப் பட்டாய் - நீயென்
மனையாளென் றேதலை தொட்டாய் - பூமி
வானத்தையும் சாட்சி யிட்டாய் - அந்த
வார்த்தை யெங்கேவிட்டு விட்டாய்
மெலியோர்க் கிரங்காம லுன்சபையோர்க் கெல்லாம்
மெய்க்கச் சொன்னீர் தூரநிற்கச் சொன்னீர் போம்போம்
(ஐயை) (105)

### ராசன் சொல்

அபுரூபமான பெண் டாடி - வுன்னை
யல்லாமற் கிடையாதோ நாட்டில் - முன்பின்
அறிந்தாய் போவொருசொல்லை காட்டி - போடி
யளக்கிறாயே கையை நீட்டி
விவகாரமேது வழக்கேது நீது யேது
வெற்றிகொண்டாய் சண்டைப் பற்றிக் கொண்டாய் சீசீ
(போ போ) (105)

### சகுந்தலை

ஏறவிட்டேணியைத் தாழ்த்தி - மெல்ல
இறக்கி விட்டாய் முன்சொல் மாற்றி - யிப்போ
தேளிதஞ் செய்வதே நேர்த்தி - ஈ
தேற்குமோ மன்னற்கு கீர்த்தி
நிறையாக உன்சொல்லை நம்பினேன்னானத் தெருவில்
நிற்க விட்டீ ருந்தன் வெட்கங் கெட்டீர் போம் போம்
(ஐயை) (105 )

### ராசா சொல்

எப்போது என்னைநீ கண்டாய் - சும்மா
ஏராசை யேனடிநீ கொண்டாய் - மான
ஈனமெல்லாம்விட்டு விண்டாய் - வெட்டி
எறிகுவேன் பாரிரு துண்டாய்
தப்பான காரியமென் றெண்ணி பாராமல்
சாதிக்கிறாய் மெய்போல் வாதிக்கிறாய் சீசீ (போ போ)
(108)

ராசா வசனம்

ஆ ஆ சபாசடி பெண்ணே. நிந்தை வார்த்தைகளை யெல்லாம் எழுதி கற்றுக்கொண்டு வந்தாய். என் பிள்ளையென்று மாயவேடம் பூண்டு அழைத்து வந்தாய். அந்த பிள்ளையை இட்டுக் கொண்டு சபையைவிட்டு அப்புறம் போடி பயித்தியக்காரி.

ராசா திபீதை

என்னதான் கற்றா ளிந்த விந்திர சால நீலி
இன்னமும் பொறுத் திருந்தா லிதைவிட வனத்தஞ் சொல்வாள்
பன்னிய வீர ரேயிப் பயலையு மிவளை யுந்தான்
மென்னியைப் பிடித்தி ழுத்து வெளியிலே தள்ளு வீரே.

(109)

வசனம்

ஆ ஆ இந்த நீலி இந்திரசாலம் என்னதான் கற்றாள் காணும். இன்னமிவள் வாயைப் பார்த்துக் கொண்டே இருந்தால் இவள் திராணியை எல்லாமிங்கே செலுத்துவாள். ஆரடா அடா போர்வீரரே இந்த பையனையும் இவளையும் கழுத்தைப் பிடித்து சீக்கிரமாய் வெளியிலே தள்ளிவிடுங் கோள்.

(வீரன்)

ஆரம்மா. ஏனப்பா எங்கள் ராசா உங்களைக் கழுத்தைப் பிடித்து தள்ளிவிடச் சொன்னார் - அப்பா எங்களைத் தள்ள வேண்டாம் நாங்கள் போய் விடுகிறோம்.

சகுந்தலை தரு

அவனித் தனிலொருவ ரக்கிரமஞ் செய்தாரானால்
அரசர் தண்டிப்பதுண்டு தெய்வமே
அரசர்களே யிப்படி அநியாயஞ் செய்வாரானால்
ஆருடன் சொல்லுவேன் - தெய்வமே
மிதித்த கொம்பும் முறிந்து பிடித்த கொம்பு மொடிந்து
விழுந்தவர் போலானேன் - தெய்வமே
வேந்தன் சொன்ன வார்த்தையை நம்பினே னெனக்கிந்த
விதிவருமென்ற றிந்தேன் - தெய்வமே
விளைந்த பயிரின் மாடு விடுபட்டு மேய்ந்தானால்
வேலியிடு வாருண்டு - தெய்வமே
வேலிதானே யிட்ட பயிரை மேய்ந்த தேயானால்
வேறென்ன செய்வது - தெய்வமே
ஆனை நிழலைப் பார்த்தே ஆங்காரங் கொண்டாப் போல
அகமகிழ்ந் திருந்தேனே - தெய்வமே
ஆனைநிழலுமொரு அணுவாகப் போகுமே யென்று
அறியாமற் போனேனே - தெய்வமே
மரத்திலிருந்த கொடி மலைமேற் படர்ந்ததென்று
மகிழ்ச்சி யாயிருந்தேனே - தெய்வமே
மரமுங் காணாம லந்த மலையுங் காணாமல்
மண்ணின் வாடுங்கொடி போலானேன் - தெய்வமே
நீதியில்லையோ நல்ல நிலைமை யில்லையோ பாரின்
நிசமுமில்லையோ ஐயோ தெய்வமே
நீதிநிலைமை வார்த்தை நிசமாய்ப் பேசினவெல்லாம்
நீயறியாயோ ஐயோ தெய்வமே
அண்ட நிழலில்லாமல் பரத வித்திடுதலன்
றயனார் விதிப்படியோ - தெய்வமே
ஆதியிற் சாட்சியாக விருந்த வாகாசாவாணி
அபயம் அபயமையோ - தெய்வமே. (110)

## பொது வசனம்

அகோ தெப்படியென்றால் ஆதியிலே துஷ்ட்டியந்த மகா ராசானுக்கும் சகுந்தலை அம்மனுக்கும் நடந்த விருத்தாங் களுக்கெல்லாம் சாட்சியாயிருந்த ஆகாசவாணி வந்து சொல்லுகிற விதங் காண்க.

## ஆகாசவாணி திபிதை

மன்னனே கேளா யன்று வனத்தினிற் சகுந்த லைக்காய்
என்னை நீசாட்சி வைத்தே யியம்பிய வாய்மைக் கெல்லாம்
இன்னில மாது சாட்சி இமையவர் சாட்சி யந்த
நன்னிலை தவிர்த்துப் பேச ஞாயமோ மன்னர் மன்னா.

(111)

## வசனம்

அகோ கேளும் துஷ்டியந்த மகாராசனே ஆதியிலே நீ வனவேட்டையாட வந்தபோது கண்ணுவ மகாரிஷியி னுடைய ஆசிரமத்துக்குத் தனித்து வந்து யிந்தச் சகுந்த லையைக் கண்டு மோகங்கொண்டு நீயே என் பட்டத்துத் தேவியென்றும் உன் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கு முடித் தரிக்கிறேன் என்றும் பூமிதேவியையும் என்னையும் தேவர் களையும் சாட்சி வைத்து இந்தப் பெண்ணைக் காந்தருவ விவாகஞ் செய்து நாளை மந்திரிகளாலே வரவழைத்துக் கொள்ளுகிறேன் என்று சொல்லி அஸ்தினாபுரத்துக்கு வந்து விட்டாய். அது முதல் ஏழு வருஷ காலமாயிருந்து இப்போது உன் இடத்திற்கு உனது குமாரன் பரத மகாராசனை அழைத்துக் கொண்டு வந்த மகாபதிவிரதையை இந்த ராச சபையிலே பங்கப்படுத்துகிறது தர்மமல்ல. நான் திருவுளமறியச்

சொல்லுகிறேன். இவளே உன் மனையாள். இந்தப் பிள்ளையே உனது குலசிரேஷ்டனாகிய புத்திரன். இவர்களுடன் கூடி வாழ்ந்திருப்பாயே யாகில் ஆச்சந்திரார்க்கமாய் எல்லா நன்மைகளையும் பெற்று சுகமாயிருப்பாய் துஷ்டியந்த மகாராசனே.

## திபிதை

வந்தவா காஷ வாணி வழுத்திடக் கேட்ட போதே
மந்தரப் புயத்து வேந்தர் மனமகிழ் கூரத் தேவர்
துந்துமி முழங்க வானிற் தொடுகடல் வைய மெங்கும்
அந்தரத் திமையோ ரெல்லா மலர்மழை சொரிந்திட் டாரே.
(112)

## ராசா

அப்பனே வாரா யென்றன் அழகு கண்மணியே வாராய்
இப்பெரும் புவியை யாளும் என்குலக் கொழுந்தே வாராய்
ஒப்பில்லாப் பரத னென்னும் ஒளிர்மணிக் குன்றே வாராய்
செப்புமென் மகனே வாராய் செல்வனே யருகில் வாராய்
எந்தன் ஆருயிரே மின்னே என்னிரு கண்ணே பொன்னே
உந்தனுக் குரைத்த தெல்லா முண்மையே மேலு மிந்த
மைந்தனிவ் வுலகை யாள மனதினி லெண்ணி லோக
நிந்தை யில்லாமற் செய்தேன் நீபொறுத் தருளு வாயே.
(113)

## வசனம்

கேளும் என் ஆயிருரே என் கண்மணி. எனது காமரசமே. நான் உனக்குச் சொன்ன வார்த்தைகளெல்லாம் மெய்தான். ஆகிலும் நீ வந்த மாத்திரத்திலே என் பிள்ளைதான்

பெண்சாதி தானென்று ஒப்புக் கொள்வேனே யானால் உலகத்தில் ஒருவரும் நம்பார்கள். இந்தப் பிள்ளைக்கு நாளைமுடி சூட்டடச்செல்லாது. ஆதலால் நிந்தையில்லாது இருக்கச் செய்தேனேயல்லாமல் வேறொன்றுமில்லை. நீ பொறுத்துக் கொள்ள வேணும் பெண்ணே!

### ராசா சொல்

அனைவருங் கேளிர் முன்னே அடவியிற் தனித்தே யிந்த
வனிதையைச் சேர்ந்த துண்டு மற்றவ ரறியா ரெந்தன்
மனைவிதான் மகன்றா னிந்த வழுத்துமைந் தனுக்கு
நாளை
புனைமணி மகுடஞ் சூட்டிப் புனிதமோ புகலுவீரே. (114)

### வசனம்

கேளுங்கோள் இந்தச சபையிலுள்ளவர்களே ஆதியிலே வனவேட்டைக்குச் சென்றபோது நான் மாத்திரந்தனித்து கண்ணுவ மகாரிஷியினுடைய ஆசிர மத்துக்குப் போய் யிந்தப் பெண்ணைக் கண்டு மோகித்துக் காந்தர்வ விவாகஞ் செய்து கொண்டது மெய்தான் - அப்போது பூமிதேவியும் ஆகாச வாணியுஞ் சாட்சி வைத்ததுண்டு. அவர்கள் வந்து யாவருமறியச் சொல்ல வேண்டுமென்று நானறிய மாட்டேனென்று வாதித்தேனே யல்லாது வேறே யாதொரு சந்தேகமில்லை. இப்பவும் நாளையத்தினம்யெனது புத்திரனாகிய பரத மகாராசனுக்கு மகுடாபிஷேகம் செய்ய நினைத்திருக்கிறேன். செய்யலாமோ சொல்லுங்கள் சபையிலுள்ளவர்களே!

## சபையார் விருத்தம்

மகுடபதி துஷ்டி யந்த மகாராசே கேளீர் நாளை
அகமகிழ்ந்தி னிதாய்ப் பெற்ற அருமை நின்மைந் தனுக்கு
வகையுடன் மகுடஞ் சூட்டி மண்ட லத்தரசு செய்ய
விகிதமோ சமுசி யமில்லை வினவின படிசெய் வீரே. (115)

## வசனம்

கேளும் ராசபரமேஸ்வரா யிந்தப் பிள்ளையும் அது பிள்ளைதான். இந்த அம்மாள் உமது மனைவி தானென்று மெய்த் தெய்வமாகிய ஆகாஷவாணி வந்து யாவருமறியச் சொன்னபின்பு உமது மனதிற் சந்தோஷமானது போல் நாங்களும் சந்தோஷத்தை யடைந்தோம். தேவரீர் எண்ணப் படியே நாளையத்தினம் மகுடாபிஷேகம் செய்யலாம் மகாராசனே.

## மந்திரி சொல்

இத்தை நாமறியோ மையா யிவளவ ளென்றே சொல்லி
யுத்தமி பெற்ற தாயே யுந்தனை யிகழ்ந்தோ மம்மா
எத்தனை பிழைசெய் தாலும் எங்கண்மேற் கிருபை கூர்ந்து
சித்தம் வைத்தருள வேண்டும் திருவடி போற்றி போற்றி.
(116)

## வசனம்

சரணம் சரணமம்மா ராச பரமேஸ்வரி உமக்கு மகாராசனுக்கு முண்டான விருத்தாந்தங்களை எல்லாம் நாங்கள் அறியாமல் புல்லறிவினாலே அவமரியாதை பண்ணினோம். அடியேங்கள் செய்த பிழைகளைப் பொறுத்து எங்களைக் காப்பாற்றி காக்க வேண்டுமம்மா தாயே.

இன்னவை நிகழுங் காலை யெழுநில வேந்தர் சூழ
பன்னிய மறையோர் வாழ்த்த பாவலர் புகழ்ந்து போற்ற
துன்னுய பல்லிய முழங்கத் துஷ்டியந்த ராச னீன்ற
மன்னிய பரதனுக்கு மணிமுடி சூட்டி னாரே. (117)

தேவர்கள் வாழி வாழி திகழஸ்தினா புரந்தான் வாழி
மூவர்கள் வாழி வாழி முடிதுஷ்ட்டி யந்தன் வாழி
காவலர் வாழி வாழி கனசகுந் தலைமின் வாழி
பாவலர் வாழி வாழி பரதனும் வாழி வாழி (118)

## சரவண பவன் துணை

## மங்களம்

ஆனைமுக தேவருக்கு மங்களம்
அழகான சத்திவல்லபைக்கு மங்களம்
ஆறுமுக தேவருக்கு மங்களம்
தெய்வயானை வள்ளி நாயகிக்கு மங்களம்
கரையேற விட்டவர்க்கு மங்களம்
கல்யாண நாயகிக்கு மங்களம்
கலிவரத ராசருக்கு மங்களம்
செங்கமல மலர் மேலவர்க்கு மங்களம்
சதுர்முகப் பிரமனுக்கு மங்களம்
வெண் சலசமுறு நாயகிக்கு மங்களம்
அம்புவி வாய் அம்மனுக்கு மங்களம்
நறையம்மை யெனுந் துர்க்கையற்கு மங்களம்
அரிஅர புத்திரர்க்கு மங்களம்
அழகாம்பரனபுடக கலைக்கு மங்களம்
பஞ்ச பாண்டவர்க்கு மங்களம்
செயபாஞ்சாலி துரோபதைக்கு மங்களம்.
கண்ணுவ மகாரிஷிக்கு மங்களம்

செய கன்னியாள் சகுந்தலைக்கும் மங்களம்
துஷ்டேந்திர ராசனுக்கு மங்களம்
செய சுதன் பரத ராசனுக்கு மங்களம்
ஆகாஸ வாணியர்க்கு மங்களம்
செய அன்பு பூமிதேவியர்க்கு மங்களம்
பூவுலகிற் பல்லுயிர்க்கு மங்களம்
புகழ்வள வனகர் புண்ணியர்க்கு மங்களம்
பள்ளுகுடத்தில் வளர் மங்களம்
அங்கிதைப் படிக்குமவர் பிள்ளைகட்கு மங்களம்
செயமங்களம் நித்திய சுப மங்களம். (119)

# மூன்றாம் பகுதி

- காளிதாசரின் சகுந்தலை நூலின் கதைச் சுருக்கம்
- வில்லிபாரதம் கூறும் சகுந்தலை-துஷ்யந்தன் குறித்த செய்தி
- வியாச பாரதம் கூறும் சகுந்தலை- துஷ்யந்தன் கதை
- காளிதாசரின் சகுந்தலைக்கும் சகுந்தலை விலாசத்திற்கும் உள்ள வேறுபாடுகள்
- சகுந்தலை கதை கூறும் நூல்களின் பட்டியல்
- நடிக்கப் பெற்ற சகுந்தலை நாடகங்கள்
- விலாச வகை நூல்களின் பட்டியல்
- செய்யுள் முதற் குறிப்பு அகராதி
- அருஞ்சொற் பொருள் அகராதி
- துணைநூற் பட்டியல்

# காளிதாசரின் சகுந்தலை நூலின் கதைச் சுருக்கம்

துஷ்யந்த மன்னன் மானை வேட்டையாடிக் கொண்டு காட்டிற்குள் வெகுதூரம் சென்று விடுகிறார். அங்கிருந்த கண்ணுவ மகாரிஷியின் ஆசிரமத்துச் சென்றபோது சகுந்தலையைக் கண்டு காதல் கொள்கிறார். சகுந்தலையையும் துஷ்யந்தனைக் கண்டு காதல் கொள்கிறாள். இருவரும் காந்தருவ மணம் புரிந்துக் கொள்கிறார்கள். துஷ்யந்தன் போகும்போது மோதிரத்தைச் சகுந்தலைக்கு அளிக்கிறார். துர்வாசர் வந்ததையும் அறியாமல் சகுந்தலை துஷ்யந்தனை நினைத்துக் கொண்டிருக்க, கோபங்கொண்ட துர்வாசர் 'யாரை நினைத்துக் கொண்டிருந்தாயோ. அவன் உன்னை மறந்து விடுவான்' எனச் சாபமிடுகிறார். நடந்த செய்கைக்கு வருத்தம் தெரிவித்த பின்பு 'அடையாளமாய் கொடுத்த ஆபரணத்தைக் கண்டால் உன் சாபம் நீங்கும்' என்று கூறி மறைகிறார். சகுந்தலையின் மனமறிந்த கண்ணுவர் சகுந்தலையை அலங்கரித்து துஷ்யந்தன் இருக்குமிடத்திற்கு அனுப்பி வைக்கிறார். ஆனால், சகுந்தலையைக் கண்டபின்பும் துஷ்யந்தனுக்கு நினைவில்லை. காந்தர்வ மணம்புரிந்ததும் மறந்து விட்டது. சகுந்தலை தன் நிலையை நினைத்து அழுதபோது தேவலோக மங்கை அவளைத் தூக்கிக் கொண்டு மறைகிறாள்.

பின்னர் மீனவர்கள் துஷ்யந்தன் சகுந்தலைக்குப் போட்ட மோதிரத்தை மீனின் வயிற்றிலிருந்ததாய் கூறி அதனைத் தர, துஷ்யந்தனுக்கு அனைத்தும் நினைவுக்கு வருகிறது. மீண்டும் சகுந்தலையின் நினைவாய் இருக்கிறார்.

துஷ்யந்தன் விண்ணுலகம் சென்றபோது ஒரு சிறுவன் சிங்கத்தின் மீதேறி விளையாடுகிறான்.

அவனின் தாய் சகுந்தலை என்னும் பெயருடையவள் என்று தெரிந்தவுடன் அவளைக் காணச் செல்கிறார். அங்கு தன் அன்பு மனைவி சகுந்தலையே இருப்பது கண்டு மகிழ்கிறார். தன்னுடைய தவறுக்குக் காரணம் தன்னுடைய மறதியென்றும், மோதிரத்தைக் கண்டவுடன்தான் நினைவுக்கு வந்ததென்றும் கூறி சகுந்தலையின் காலில் விழுந்து மன்னிப்புக் கோரினார். பின்னர் இருவரும் ஒன்றுகூடி பூலோகம் வருகிறார்கள்.

# வில்லிபாரதம் கூறும் சகுந்தலை - துஷ்யந்தன் குறித்த செய்தி

வில்லிபாரதத்தின் ஆதி பருவத்தில் குருகுலச் சருக்கம் என்ற பகுதியில் பூருவின் குல வழி வந்தவன் பரதன் எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது. அக்குறிப்பை விளக்கும் போது சகுந்தலை - துஷ்யந்தன் பற்றிய செய்தி காணப்படுகிறது. அப்பகுதியை ஈண்டு காண்போம்.

## பூருவின் குலம் வந்த பரதன்

**விரத மிஞ்சிய வேள்வியாற் கேள்வியான் மிக்கான்**
**சுரத மங்கையர் முலைக்குவ டணைவரைத் தோளான்**
**பரத னென்றொரு பார்த்திபன் பரதமு மியையும்**
**சரத மின்புற வக்குலந் தனிலவ தரித்தான்.**

விளக்கம் : பூருவின் குலத்தில் வந்த துஷ்யந்தனுக்கும் மேனகையின் மகளான சகுந்தலைக்கும் மகனாய்த் தோன்றிய பரதன் இவன். வேள்வியாலும் கேள்வியாலும் மிக்கானாகிய இச் செம்மல், சங்கீத நாட்டியக் கலைகளிலும் மிக்கனாகிய இருந்தான்.

---

* இது 'வில்லி பாரதத்தை' ஆதாரமாகக் கொண்டது. (பக்.42)
பதிப்பு : கலா நிலயம், கே. ராஜகோபாலாச்சாரியர், ஸ்டார் பிரசுரம், சென்னை - 600 005, இரண்டாம் பதிப்பு : டிசம்பர் 1985.

# வியாச பாரதம் கூறும் சகுந்தலை - துஷ்யந்தன் கதை

பூருவானவன் அஸ்தினாப்புரத்தை நன்முறையில் நாட்டை ஆண்டு வந்தான். அவன் வழி வந்த இலிலன் என்பவன் மகனாகத் துஷ்யந்தன் பிறந்தான்.

துஷ்யந்தன் நன்முறையில் நாட்டை ஆண்டு வந்தான். அவன் ஒருநாள் தன்னுடைய சதுரங்க சேனையானது சூழ்ந்து வர, காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். தன்னுடைய வீரர்களுடன் சேர்ந்து பல மிருகங்களைக் கொன்று குவித்தான்.

பின்னர், அந்த அரசன் ஒரு மானைத் தொடர்ந்து துரத்திக் கொண்டு சென்றான். இப்படியே சென்று வேறு ஒரு காட்டைத் தனியானாக அடைந்தான். அப்போது அவனுக்குப் பசியும் தாகமும் ஏற்பட்டது. எனவே, ஒரு பாழான இடத்தை அடைந்தான். பின்னர் அந்த இடத்தைத் தாண்டி ஆசிர மங்கள் நிறைந்த ஓர் இடத்தை அடைந்தான்.

அழகு நிறைந்த அந்த வனத்தைச் சுற்றிப் பார்த்தான். அங்கு ஆசிரமம் இருந்தது. மிக்க அழகுடன் அது காட்சி யளித்தது. அதன் அருகே அழகிய நதியொன்று ஓடிக் கொண்டிருந்தது. அங்குள்ள ரிஷிகள் மூலம் அது கணுவ மகரிஷி என்பவரின் ஆசிரமம் என்பதைத் தெரிந்து கொண்டான். அந்தக் கண்ணுவ மகரிஷியைக் காண வேண்டும் என்ற எண்ணத்தில் பசி, தாகங்களை விட்டான். தான்

அணிந்த ராஜஸ்ரீ சின்னங்களை நீக்கிவிட்டுக் கண்ணுவ மகரிஷியின் பர்ணசாலையினுள் நுழைந்தான்.

அங்கே அந்த் மகரிஷியைக் காணவில்லை. எனவே "இங்கே யார் இருக்கிறார்கள்?" என உரக்க சப்தமிட்டான். அவனுடைய குரலைக் கேட்டு, ரிஷி கோலம் பூண்ட இளம் பெண்ணொருத்தி வெளிப்பட்டாள். ஒரு புதிய மனிதன் விருந்தினனாக வந்திருப்பதைக் கண்ட அப் பெண், மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள். அவள் அவனிடம் "தங்களுடைய வரவு நல்வரவாகட்டும்," எனறு இனிமையுடன் வரவேற்புக் கூறினாள். அவனுக்கு ஆசனம் கொடுத்து அமரச் செய்து தக்க மரியாதைகள் செய்தாள்.

பின்னர், "தாங்கள் யார்?" இங்கு வரக் காரணம் என்ன?" எனறு கேட்டாள். இதைக் கேட்டதும், "தாமரை மலர் போன்ற அழகிய கண்களையுடையவளே! நான் இலிலன் என்னும் பேரரசனின் மகன்; துஷ்யந்தன் என்பது என்னுடைய பெயர்; கண்ணுவ மகரிஷியை வணங்கும் பொருட்டு இங்கு வந்தேன்," எனறு கூறினான்.

அதற்கு அவள், "என பெயர் சகுந்தலை;" என் தந்தையான மகரிஷி பழங்கள் கொண்டு வரும் பொருட்டுப் போய் இருக்கிறார். சற்று நேரம் இங்கேயே இருங்கள்; வந்தவுடன் பார்க்கலாம்," என்று கூறினாள்.

இதைக் கேட்டவுடன், "பெண்ணே நீ யார்?" அழகு மிக்க நீ எப்படி இங்கு வந்தாய்? உன்னைக் கண்டது முதல் என மனம் உன்பால் சென்றுவிட்டது. ராஜரிஷியின் மகனான நான் உன்னை மனத்தில் வரித்து விட்டேன். என் மனம் இதுவரை எவரிடமும் சென்றதில்லை; என்னை நீயும் விரும்புவாயாக; என்னை மணந்து ராஜ்யத்தை அடை,'' என்று கூறினான்.

அவன் பேச்சைக் கேட்ட அப்பெண், "அரசே! கண்ணுவ மகரிஷி என்னைப் பெண்ணாக எண்ணுகிறார். கண்ணுவரே எனக்கு எஜமானராகவும், தந்தையாகவும் விளங்குகிறார்; உம்முடைய எண்ணத்தை அவரிடம் கூறு," என்று பதில் கூறினாள்.

உடனே துஷ்யந்தன் அவளைப் பார்த்துப் பேசத் தொடங்கினான்; "தர்ம தேவதையே ஒழுக்கத்தை விட்டு விலகினாலும் விலகும். ஆனால் அந்தக் கண்ணுவர் விலகார்; ஆனால் அந்த கண்ணுவர் விலகார்; பெண்ணரசியாகிய நீ அவரின் பெண் என்றது எவ்வாறு? இதில் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது; இதனை நீ கூற வேண்டும்," என்று சென்னாள்.

சகுந்தலை துஷ்யந்தனைப் பார்த்து பதில் கூறத் தொடங்கினாள்: "அரசே! அந்த விபரத்தை எனக்குத் தெரிந்தவரைக்கும் கூறுகின்றேன்; ஒரு மகரிஷி என் தந்தையான கண்ணுவரிடம் வந்து, 'நீரோ பெரும் தவசியாக இருக்கிறீர்; இந்தப் பெண் சகுந்தலை உனக்குப் பெண் எனறு சொல்வது எவ்வாறு? இவள் எவ்வாறு பிறந்தாள்?' என்று கேட்டார். அதற்குக் கண்ணுவர் கூறியவற்றை நான் தங்களிடம் கூறுகிறேன், கேளுங்கள்" என்று கூறினாள். பின்னர் தன்னுடைய வரலாற்றைக் கூறத் தொடங்கினாள்.

முற்காலத்தில் 'விஸ்வாமித்திரர்' என்ற பெயரை யுடைய முனிவர் ஒருவர் இருந்தார். அவர் கடும் தவம் செய்தார். அவர் தவத்தின் மூலம் தன்னுடைய பதவி போய்விடுமோ என்று இந்திரன் அச்சம் கொண்டான்; எனவே அவருடைய தவத்தைக் கெடுத்துவிட வேண்டும் என்று எண்ணினான். அதை நிறைவேற்றப் பல்வேறு விதமான

ஆலோசனைகளைச் செய்தான். முடிவில் மேனகை என்பவளை அழைத்து அவள் அழகின் மூலம் விஸ்வாமித்திரரை மயக்கி, அவர் தவத்தைக் கெடுக்க ஏற்பாடு செய்தான். மேனகை விஸ்வாமித்திரரின் தவவலிமையக் கண்டு பெரிதும் அஞ்சி நடுங்கினாள். பின்னர் மன்மதனையும், வாயுவையும் துணைக்கு அழைத்துக் கொண்டு விஸ்வாமித்திரர் தவம் இயற்றும் இடத்தை அடைந்தாள்.

தவ நிலையில் ஆசிரமத்தில் அமர்ந்துள்ள விஸ்வாமித்திரரைக் கண்டாள். அவரை வணங்கினாள். பின்னர் அவர் முன்னர் பலவாறு ஆடிப் பாடத் தொடங்கினாள். அவர் முன்னே விளையாடினாள். அப்போது வாயு அவளுடைய ஆடையைத் தன் சக்தியால் நீக்கினான். மேனகை, விஸ்வாமித்திரர் தன்னைப் பார்ப்பதைக் கண்டு வெட்கம் அடைந்து, காற்றை நிந்தித்து அந்த ஆடையைச் சரி செய்யப் பெரிதும் முயன்றாள். இளமையும், அழகும் மிக்க மேனகையைத் தவசியான விஸ்வாமித்திரர் ஆடைகள் விலகிய நிலையில் கண்டார். மன்மதனின் தாக்குதலுக்கு ஆளான அவர் அவள்மேல் ஆசைகொண்டார்; அவளைத் தன் அருகில் அழைத்தார். அவளும் இணங்கி அவரை நெருங்கினாள்.

இருவரும் ஒன்று சேர்ந்து கூடிக்கலந்தனர். நீண்ட காலம் இவ்வாறு அவர்கள் மகிழ்வுடன் கலந்து வாழ்ந்தனர். காமத்தை அடக்காதவராகிய விஸ்வாமித்திரர் நீண்ட நாள்கள் கடந்ததைக் கவனியாமல் அவளின் மேல் கொண்ட பெருவிருப்பத்தின் காரணமாய் காம சுகத்தை மாறி மாறி அனுபவித்தார். எனவே அவருடைய தவ வலிமையானது குறையத் தொடங்கியது. இதை அறிந்த முனிவர் ருது

காலத்தில் அவளைச் சேர்ந்து விட்டு கௌசிக நதிக்கு தவம் இயற்றச் சென்று விட்டார்.

மாலினி நதியின் சமீபத்தில் அழகிய இமயமலையின் சாரலின் இடத்தில் அழகிய பெண் குழந்தையை மேனகை பெற்றெடுத்தாள். அப்போது மேனகை, "பெண்ணே! நீ மகரிஷியின் மகளாய்ப் பிறந்துள்ளாய்; மானிடப் பெண்ணைச் சொர்கத்திற்கு எடுத்துச் செல்லுதல் கூடாது; தேவகாரியத்தின் பொருட்டு வந்த நான் சொர்கம் செல் கிறேன் என்று கூறிவிட்டுத் தான் மட்டும் இந்திரலோகம் சென்றாள். கொடிய மிருகங்கள் நிறைந்த அந்தக் காட்டில் அக் குழந்தையைக் காப்பாற்றும் பொருட்டுப் பறவைகள் சூழ்ந்து நின்றன. குளிக்கும் பொருட்டு அவ்வழியில் சென்ற நான் (கண்ணுவ மகரிஷி) அக் குழந்தையைக் கண்டேன்.

அப்பேது அப் பறவைகள் யாவும் என் காலில் வந்து விழுந்தன. "சுவாமி! இவள் விஸ்வாமித்தரரின் பெண்; தாங்கள் அடைக்கலமாகக் கொள்ள வேண்டும் இப் பெண்ணைத் தாங்களே வளர்க்க வேண்டும்; இவளுக்குத் தந்தையான விஸ்வாமித்தரர் தவம் இயற்றும் பொருட்டுக் கௌசிய நதிக்குச் சென்று விட்டார்; தாய் இந்திர உலகம் சென்று விட்டாள்" என்று கூறி அப் பறவைகள் என்னை வணங்கின. நான் இப்பெண்ணை எடுத்து வந்து வளர்க் கின்றேன். பறவைகளால் சூழப்பட்டவள் என்பதால் 'சகுந்தலை' என்று பெயரிட்டேன். இப்பெண்ணும் என்னையே தந்தை என்று எண்ணி வளருகின்றாள்.

இவ்வாறு கண்ணுவர் சகுந்தலையின் வரலாற்றை மகரிஷியிடம் கூறினார். அதனைச் சகுந்தலை துஷ்யந்த மன்னனிடம் கூறி முடித்தாள். பின்னர், "பெற்ற தாய்

தந்தையர்களைக் காணாத நான் இக் கண்ஹவ மகரிஷி யையே தந்தையாக எண்ணுகின்றேன்," என்று கூறினாள்.

உடனே துஷ்யந்தன் பேசத் தொடங்கினான், "பெண்ணே! நீ சொல்வதைப் பார்த்தால் அரச குலத்தைச் சேர்ந்தவள் என்று தெரிகிறது; பொன் மாலை, அழகிய ஆடைகள், குண்டலங்கள், முத்துக்கள், இரத்தினங்கள், பொற்காசுகள் போன்றவற்றை உனக்குத் தருகிறேன். என்னுடைய நாடே இனிமேல் உன்னுடையது; நாம் இரு வரும் காந்தர்வமுறையில் திருமணம் செய்து கொள்ளலாம்," என்று கூறினான்.

அதைக் கேட்ட சகுந்தலை, "அரசே! என் தந்தை பழங்ள் கொண்டு வரும் பொருட்டு வெளியில் சென்றுள் ளார்; சற்று நேரம் பொறுங்கள்; அவர் என்னைத் தங்க ளுக்குத் திருமணம் செய்து தருவார்; அவரே எனக்கு எல்லாம்; இளமையில் ஒரு பெண்ணைத் தந்தை காப்பாற்று கின்றார். வாலிபத்தில் கணவன் காப்பாற்றுகின்றான்; பெண் சுதந்திரமாய் செயல்படத் தக்கவள் அல்லள்; எனவே என் தந்தையை மதிக்காமல், அதர்மமாக நான் கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல் தகாது," என்றாள்.

உடனே துஷ்யந்தன் பேசத் தொடங்கினான்: "பெண்ணே! தவம் பேருருக் கொண்டதுபோல் காட்சி யளிக்கும் கண்ணுவ மகரிஷியைப் பற்றி இவ்வாறு எண்ணுவது தகாது; அவர் சாந்தமானவர்" என்று கூறினான்.

சகுந்தலை அவனைப் பார்த்துக் கூறினாள் : அரசே! அந்தணர்களுக்குக் கோபமே ஆயுதம்; அவர்கள் கையால் ஆயுதம் பிடிப்பவர்களல்லர்; ஆனால் கோபத்தால் எதிரி களைக் கொல்வர்; அக்னி ஜ்வாலைகளினால் தகிக்கிறது; சூரியன் கிரணங்களினால் தகிக்கிறான்; அரசன் தண்டனை

யால் தகிக்கிறான்; பிராமணன் கோபத்தினால் தகிக்கிறான்," என்றாள்.

பிரியமானவளே! கண்ணுவ மகரிஷியை நான் அறிவேன்; அவருக்குக் கோபம் கிடையாது; நீ என்னை அடைவதை நான் விரும்புகின்றேன்; உனக்காகவே நான் இங்கு இருக்கிறேன்; என் மனம் உன்னிடம் இருக்கிறது; திருமணம் எட்டு வகைப்படும் என்று சாஸ்திரம் சொல்கிறது; அவற்றில் காந்தர்வம் அரசர்களுக்கு உரியவை; நாம் காந்தர்வ முறைப்படி திருமணம் செய்வது தர்மாமனது" என்று துஷ்யந்தன் சகுந்தலையிடம் கூறினான்.

உடனே தக்க பதில் ஒன்றைச் சகுந்தலை கூறினாள்; "அரசே! உம்முடைய எண்ணப்படி நடக்க வேண்டு மென்றால் ஒரு நிபந்தனை உள்ளது; எனக்குப் பிறக்கிற பிள்ளைக்கு நாடாளும் உரிமையைத் தர நீ சம்மதிப் பாயானால் உன் எண்ணத்திற்கு நான் உடன்படுகின்றேன்," என்றாள்.

அரசன் "அப்படியே ஆகட்டும்," என்று கூறி ஒப்புக் கொண்டான். பின்னர் தொடர்ந்து பேசத் தொடங்கினான்: "பெண்ணே! உன்னை நான் தகுதிக்கு ஏற்றபடி என் நகரத்திற்கு அழைத்துப் போவேன்," என்று கூறினான்.

அதைக் கேட்டதும் அவள் மிகவும் மகிழ்ச்சி அடைந் தாள். அப்பொழுது அவன் அவளைத் தழுவிக் கொண்டான். இருவரும் மனம் ஒத்து ஒருவரையொருவர் மாறி மாறித் தழுவினர். இன்பம் கண்டனர். மகிழ்வுடன் கணவன் மனைவிக்குரிய தகுதி வாய்க்கப் பெற்றவர்களாக நடந்து கொண்டனர்.

பின்னர் துஷ்யந்தன் சகுந்தலையிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்படத் தயாரானான். போகும் பொழுது, "பெண்ணே! மூன்று வேதங்களை அறிந்த பெரியோர் களோடும், வேலையாட்களோடும், பல்லக்குகளோடும் என் உறவினர் வருவார்கள். என் சேனையானது துந்துபி வாத்தியங்களின் முழக்கங்களோடு இங்கு வரும்; அப்பொழுது எல்லாவிதமான மங்கள ஆசாரங்களுடன். உன்னை அவர்கள் என் அரண்மனைக்கு அழைத்து வருவார்கள்" என்று கூறினான். அவள் சம்மதித்தாள். அதன் பின்னர் துஷ்யந்தன் அங்கிருந்து புறப்பட்டுத் தன் அரண்மனைக்குச் சென்றான்.

## பரதன் பிறந்தான்

அவன் சென்ற சிறிது நேரத்திற்குப் பின்னர் கண்ணுவ மகரிஷி அங்கு வந்தார். துஷ்யந்தனுடன் கூடிக் கலந்ததால் ஏற்பட்ட நாணத்தின் காரணமாய் அம் முனிவரை அவள் நேராகப் பார்க்காமல் வெட்கம் கொண்டு நின்றாள். மாறான அவளின் செயலால் என்ன நடந்தது என்பதை மகரிஷி தன் ஞானக் கண் மூலம் உணர்ந்து கொண்டார்.

அவளைத் தேற்றி ஆறுதல் கூற விரும்பினார். எனவே, "பெண்ணே! துஷ்யந்தன் மிகவும் நல்லவன்; தர்மம் தெரிந்தவன்; உத்தமன்; உனக்குக் கணவனாகத் தக்க தகுதியுள்ளவன்; உனக்குப் பெரும் புகழ் தரத்தக்க புதல்வன் பிறக்கப் போகிறான்; அவன் இக் கடல் சூழ்ந்த உலகம் முழுமையையும் ஆள்வான். நீ பெண்ணாகப் பிறந்ததற்குரிய உண்மையான பயனை அடைந்தாய்," என்று கூறினார்.

அதைக் கேட்ட சகுந்தலை, "சிறப்புமிக்க துஷ்யந்தன் என்னைத் தேவர்கள் முன்னிலையில் மணந்து கொண்டி

ருக்கிறார். அவரை மனத்தால் ஆசிர்வாதம் செய்யுங்கள்," என்று வேண்டினாள். அவரும் "அவ்வாறே ஆகட்டும்" என்று கூறி வாழ்த்தினார்.

நாள்கள் நகர்ந்து கொண்டிருந்தன. துஷ்யந்தனுடன் ஒருநாள் கூடியதன் காரணமாகக் கர்ப்பம் தாங்கினாள், சகுந்தலை. அந்தக் கர்ப்பம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருந்தது. சகுந்தலை ஒவ்வொரு நாளும், அரசனின் சதுரங்கசேனை தன்னை அழைத்துச் செல்ல வரும் என்று எதிர்பார்த்து, எதிர்பார்த்துக் காத்திருந்தாள். ஆனால் வரவில்லை; மாதங்கள் ஓடின. அழகிய ஆண் குழந்தை ஒன்றைச் சகுந்தலை பெற்றெடுத்தாள். அக் குழந்தை பிறந்தபோது ஆகாயத்தில் இருந்து பூமழை பொழிந்தது.

உடனே இந்திரன் பூமிக்கு வந்து, "சகுந்தலையே! உன் மகன் சக்கரவர்த்தியாகப் போகிறான்; இவனுடைய வலிமையும், அழகும், வீரமும் பூமியில் யாருக்கும் இல்லை; இவன் பல யாகங்களைச் செய்து மிக்க புகழ் பெறுவான்," என்றான். அவனுடைய சொல்லைக் கேட்டு, கண்ணுவ மகரிஷி அந்தணர்களையும் ரிஷிகளையும் அழைத்துச் சிறப்புச் செய்தார். அரச தர்மத்திற்கு ஏற்ப எல்லாச் சடங்குகளையும் செய்தார்.

துஷ்யந்தனுக்கு ஆரம்பத்தில் சகுந்தலை பற்றிய நினைவிருந்த போதிலும், கண்ணுவ மகரிஷியை எண்ணி மனத்தில் பயம் கொண்டவனாய் இருந்தான். நாள்கள் செல்லச் செல்ல அவளை மறந்து போய்விட்டான். இவ்வாறு ஏழு ஆண்டுகள் கடந்தது.

சகுந்தலையின் மகன் நன்முறையில் வளர்ந்தான். இளம் பருவத்திலேயே மிக்க பராக்கிமம் உடையவனாய்

இருந்தான். கொடிய மிருகங்களான புலி, சிங்கம் போன்ற வற்றைத் தம் ஆறாவது வயதிலேயே கால்களினால் எட்டி உதைத்தான், அவசியம் ஏற்பட்டபோது அவற்றைக் கொன்றான். அக்காட்டையே கலக்கினான். கொடிய அரக்கன் ஒருவனைக் கைகளாலேயே கசக்கிக் கொன்றான். எனவே அச்சிறுவன் இருக்கும் காட்டிற்குக் கொடிய சிங்கம், புலி போன்றவையும் அசுரர் போன்றவர்களும் வருவதேயில்லை.

அச் சிறுவனுக்குப் பின்னிரெண்டு வயதாகியது. அப்போது விற்பயிற்சி போன்றவைகளும், வேதப்பயிற்சியும் கற்பிக்கப்பட்டன.

சில காலம் சென்றபின், அச்சிறுவன் யுவராஜா ஆவதற்குத் தகுதியுடையவன் என்று கண்ணுவ மகரிஷி கருதினார். எனவே சகுந்தலையைப் பார்த்துப் பேசத் தொடங்கினார்: "பெண்ணே! நான் முன்னரே உன்னுடைய காந்தர்வ மணத்தை ஒப்புக் கொண்டுள்ளேன்; பெண்கள் கணவனிடத்தில் வாழ்வதே சிறப்புடையது என்பது எல்லாரும் அறிந்தது. எனவே நீ உன் புதல்வனுடன் சென்று துஷ்யந்தனைச் சந்தி; அவனுடன் சேர்ந்து வாழ்," என்று கூறினார்.

பின்னர் கண்ணுவ மகரிஷி தன் பேரனை அருகில் அழைத்தார். அவனை இரண்டு கைகளாலும் தழுவி உச்சிமோந்தார். "சந்திர குலத்தைச் சேர்ந்த துஷ்யந்தன் என்ற மன்னன் இந் நாட்டை ஆள்கின்றான். அவனே உன் தந்தை; உன் தாய் அவனுடைய மனைவி; அங்கு சென்று அந்த அரசனை வணங்கு; அவனுடைய மகனாய்ப் பணிவுடன் நடந்துகொள்; அந்த நாட்டை ஆள்," என்று கூறினார்.

உடனே அச்சிறுவன் மகரிஷி அச்சிறுவனைத் தூக்கி எடுத்தார். பின் "குற்றமற்றவனே! உன் தாய், தன் கணவனைக் காண வேண்டும் என்று விரும்புகின்றாள்; எனவே நீ இவளை அழைத்துக் கொண்டு சென்று உன் தந்தையைக் காண்" என்று கூறினார். பிறகு, மற்ற ரிஷி களைப் பார்த்து, "அன்புடைவர்களே! இந்தச் சகுந்தலையை அழைத்துக் கொண்டுபோய் அவள் கணவனிடம் சேருங்கள்; பெண்கள் தம் உறவினர் வீட்டில் நீண்ட நாள்கள் தங்குவது அவளுடைய புகழையும், ஒழுக்கத்தையும், தர்மத்தையும் கெடுத்து விடும்," என்று கூறினார்.

இதைக் கேட்ட அந்த ரிஷிகள் சகுந்தலையையும், அச்சிறுவனையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டனர். அவ்விருவரும் கண்ணுவ மகரிஷியிடம் விடைபெற்றனர். நகரத்தை அடைந்தனர். அந்நகர மக்களெல்லாம் அச்சிறு வனை மிகவும் ஆச்சரியத்துடன் பார்த்தனர். பின்னர் சகுந்தலையையும் அச் சிறுவனையையும் அரண் மனைக்குள் அனுப்பிவிட்டுஅவர்கள் திரும்பிச் சென்றனர்.

பிறகு அரண்மனையின் உள்ளே சென்ற சகுந்தலை துஷ்யந்த மன்னனைக் கண்டாள். தன் மகனைப் பார்த்து, "மகனே! உன் தந்தைக்கு வணக்கம் சொல்," என்று துஷ்யந்தன் கேட்கும்படிக் கூறினாள். பின்னர் வெட்கத் தினால் தலைகுனிந்து நின்றாள். அப்பொது சகுந்தலையின் புதல்வன் துஷ்யந்தனைப் பார்த்து வணங்கி நின்றான்.

அப்போது துஷ்யந்தன், "பெண்ணே! நீ யார்இங்கு வந்த விஷயம் என்ன?" என்று கேட்டான். நீண்ட காலமாகிவிட்டமையாலும், வேறு பெண்களின் இன்பத்தால் ஈடுபாடுகொண்டு வாழ்பவனாய் இருந்ததாலும் அவள் யார் என்பதே மறந்துபோய் இவ்வாறு கேட்டான்.

உடனே சகுந்தலை பதில் கூறத் தொடங்கினாள்: "அரசே! இவன் என்னிடம் உமக்குப் பிறந்த பிள்ளை; எனவே உம்முடைய மகனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட வேண்டு கின்றேன்" என்று கூறினாள். தொடர்ந்து, "வீரரே! கண்ணுவ மகரிஷியின் ஆசிரமத்தில் நீர் என்னிடம் கூறியபடி நடந்துகொள்; அப்பொழுது எனக்குக் கொடுத்த உறுதியை எண்ணிப் பார்," என்று கூறினாள்.

அதைக் கேட்ட துஷ்யந்தன், "பெண்ணே! உன்னுடன் சேர்ந்தது பற்றி நினைவில்லை; அறம், பொருள், இன்பம் இம் மூன்றிலும் எனக்கு உன்னுடன் சம்பந்தம் இருப்பதாக எனக்கு நினைவில்லை; எனவே நீ செல்லலாம்," என்று கூறினான்.

இதைக் கேட்டதும் சகுந்தலை பெரிதும் துன்பம் அடைந்தாள். அவளுக்கு நினைவு தப்பியது; மயக்க நிலையை அடைந்தாள். அருகில் இருந்த தூண் ஒன்றைப் பற்றிக் கொண்டு அசைவற்று நின்றாள். படபடப்பினாலும் கோபத்தினாலும் கண்கள் சிவந்தன. உதடுகள் துடி துடித்தன.

பின்னர் சற்றுக் கோபத்தை அடக்கிக் கொண்டு தன் கணவனைப் பார்த்துப் பேசத் தொடங்கினாள்:அரசே ! நீ பொய் சொல்கிறாய் என்பது உன் மனத்திற்கே தெரியும்; என்னுடன் சேர்ந்திருந்தும் அறியாதவர் போல் பேசுகின்றீர்; ஏன் அஞ்சாமல் பொய் பேசுகின்றீர்; என் குலத்தையும், ஒழுக்கத்தையும், தர்மத்தையும் எண்ணி இப்போது நான் உம்மைச் சரண் அடைகின்றேன்; முன் ஜென்மத்தில் நான் என்ன பாபம் செய்தேனோ! பிறந்தவுடன் பெற்றோரால் கைவிடப்பட்டேன்; இப்போது உம்மால் கைவிடப்பட்டேன்;

இனி நான் ஆசிரமத்துக்குப் போக மாட்டேன்; உம் மகனாகிய இக் குழந்தையை மட்டும் விட்டு விடாதீர்" என்றாள்.

துஷ்யந்தன் பதில் கூறத் தொடங்கினான்: "பெண்ணே! உன்னிடம் எனக்கு மகன் பிறந்துள்ளதைப் பற்றி எனக்குத் தெரியவில்லை; உன் சொல்லை நம்ப மாட்டேன்; எனவே உனக்கு பொன், ரத்தினம், முத்து, ஆடை, ஆபரணங்கள் போன்ற எவற்றை விரும்புகின்றாயோ அவற்றைத் தருகிறேன்; வாங்கிக் கொள்; நான் உன்னைப் பார்க்கவே விரும்பவில்லை; நீ போகலாம்," என்று கூறினான்.

சகுந்தலை, "அரசே! நான் மேனகையின் புதல்வி! என் மகன் இவ்வுலகை ஆளப்போவதை நீர் பார்க்கப் போகிறீர்; ஒரு முறை தேவேந்திரன் என் மகனைப் பார்த்து, 'நீ சக்கரவர்த்தியாகப் போகிறாய்' என்று கூறியுள்ளான்; அது வீணாகாது; நம் சேர்க்கைக்குத் தேவதூதர்கள் போன்ற அநேகர் சாட்சியாய் இருக்கிறார்கள்; நான் வந்த வழியே செல்கிறேன்,'" என்று கோபத்துடன் கூறினாள்.

தனக்கு ஏற்பட்ட கோபத்தை மறைத்துக் கொண்டு தன் புதல்வனுடன் புறப்பட்டாள். காட்டிற்குச் செல்லத் தொடங்கினாள்.

அப்பொழுது வானத்தில் ஓர் அசரீரி தோன்றியது: "சகுந்தலை உண்மையைப் பேசுகின்றாள்; உன்னுடைய மகனே அவன்; உத்தமியான சகுந்தலையை நீ பூஜிக்க வேண்டும்; உன்னுடைய மகனை ஏற்றுக்கொள்; இவனுக்குப் பரதன் என்று பெயரிடு" என்ற சொல் நான்குபுறங்களில் சூழ்ந்து நின்ற தேவர்களால் ஆகாயத்தில் இருந்து சொல்லப்பட்டது. அப்பொழுது தேவலோகத்தில் இருந்து பூமழை பொழிந்தது.

தேவர்களின் இச் சொல்லைக் கேட்டவுடன் ஆசனத்தில் இருந்து துஷ்யந்தன் எழுந்தான். தேவர்களை வணங்கினான். பின்னர் விரைந்து சென்று தன் மனைவியையும் மகனையும் அழைத்து வந்தான். தன் மகனைக் கட்டித் தழுவிக் கொண்டான். குல வழக்கப்படி அவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தான்.

பின்னர் சகுந்தலையிடம், "அன்புடையவளே! என் மீது கொண்டிருந்த கோபத்தை விட்டுவிடுவாயாக! என் பிழையைப் பொறுத்துக்கொள்," என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். பின்னர் முறைப்படி அவள் அந்தப்புரத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டாள். அங்கு அவள் ஆடை ஆபரணங்கள் போன்றவற்றால் அலங்காரம் செய்யப் பட்டாள். பின்னர் அவள் பட்டத்து அரசியாகப் பட்டாபிஷேகம் செய்து வைக்கப்பட்டாள்.

அவளுடைய மகனுக்குப் 'பரதன்' என்று பெயர் சூட்டினான். தன் மனைவியுடனும் மகனுடனும் நீண்ட நாள்கள் நன்முறையில் நாட்டை ஆண்டான். பின்னர் தன் மகன் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்து விட்டுத் தன் மனைவியுடன் காட்டை அடைந்து தவம் இயற்றினான். சொர்க்கம் அடைந்தான்.

## காளிதாசர் சகுந்தலைக்கும் சகுந்தலை விலாசத்திற்கும் உள்ள வேற்றுமைகள்

*** காளிதாசர் சகுந்தலை**

துஷ்யந்தன் காட்டிற்கு வேட்டையாடச் செல்லும் காட்சியுடன் நூல் தொடங்கிறது.

**சகுந்தலை விலாசம்**

விசுவாமித்திரன் தவம் செய்ய இடம் தேடுதல் - மேனகை வருதல் என்பவற்றிலிருந்து தொடங்குகிறது.

*** காளிதாசர் சகுந்தலை**

கண்ணுவ ரிஷிக்கு இரு மனைவியர் உள்ளனர் என்று கூறுகிறது. துஷ்யந்தனுக்கும் பல மனைவியர் அந்த புரத்திலிருப்பதாக காட்டுகிறது.

**சகுந்தலை விலாசம்**

கண்ணுவர் ரிஷியை ஒழுக்கமுடைய பிரம்மரிஷியாக காட்டுகிறது. துஷ்யந்தனும் சகுந்தலையைத் தவிர வேறுயாரையும் மணந்ததாக காட்டவில்லை.

*** காளிதாசர் சகுந்தலை**

துர்வாசர் சாபம், முத்திரை மோதிரம், தேவலோக நிகழ்ச்சிகள் ஆகியவை கதையின் போக்கை மாற்றி

யமைப்பதுடன் கதையின் திருப்பதத்திற்கும் காரணமாய் அமைகிறது.

**சகுந்தலை விலாசம்**

இதில் மேற்குறித்த நிகழ்ச்சி எதுவும் சுட்டப்பட வில்லை. ஆகாஷவாணியே முக்கியஇடம் பெறுகிறது.

*** காளிதாசர் சகுந்தலை**

பரதன் பிறக்கும் முன்பே சகுந்தலை துஷ்யந்தனைக் காண அஸ்தினாபுரம் செல்கிறாள்.

**சகுந்தலை விலாசம்**

பரதன் பிறந்து ஏழு ஆண்டுகள் கழிந்தபின்பே சகுந்தலை துஷ்யந்தனைக் காண பரதனுடன் அஸ்தினாபுரம் செல்கிறாள்.

***காளிதாசர் சகுந்தலை**

துஷ்யந்தன் சகுந்தலை சொல்லை நம்பாமல் விரட்டிய போது சகுந்தலை விண்ணைநோக்கி அழ, விண்ணிலிருந்து தேவலோக மங்கை வந்து அழைத்துச் செல்கிறாள்.

**சகுந்தலைவிலாசம்**

துஷ்யந்தன் சகுந்தலையை விரட்டும் படி கூறும் போது சகுந்தலை ஆகாஷவாணியிடம் முறையிட, ஆகாஷாவாணி உண்மையைத் துஷ்யந்தனுக்கு எடுத்துரைக் கிறது.

* காளிதாசர் சகுந்தலை

துஷ்யந்தன் தன் தவறை உணர்ந்து சகுந்தலையின் அடியில் விழுந்து மன்னிப்பு கேட்கிறார்.

**சகுந்தலை விலாசம்**

துஷ்யந்தன் தனக்கு முன்னமே சகுந்தலையை அறிவேன் என்றும், ஊரார் ஏற்கவேண்டும் என்பதற்காகவே அவ்விதம் வாதாடியதாகவும் கூறுகிறார்.

# சகுந்தலை கதை கூறும் நூல்களின் பட்டியல்

| | |
|---|---|
| அபிஞ்ஞான சாகுந்தலம் | : ரா. ராகவையங்கார் ; 1938 |
| சகுந்தலா | : சுந்தர ராஜ சர்மா ; வேதாந்த போதினிபிரஸ்; ஏப்ரல் 1908 |
| சகுந்தலை | : கருப்பக்கிளர் சு.அ. இராமசாமிப் புலவர்; கழக வெளியீடு ; நவம்பர் 1965 |
| சகுந்தலை (அ) காணாமற் போன கணையாழி | : ராவ் சாகிப் பாவாநந்தம் பிள்ளை; வைஜெயந்திபிரஸ் |
| சகுந்தலை விலாசம் | : இராமச் சந்திரக் கவிராயர்; வித்தியா தரங்கினி அச்சுக் கூடம்; 1888 |
| சகுந்தல நாடகம் | : ஜி. சுப்பிரமணிய ஐயர் (என். சுவாமிநாத சாஸ்த்திரி - தமிழாக்கியவர்); சுதேசமித்திரன் அச்சுக் கூடம்; ஆகஸ்ட் 1902. |
| சாகுந்தலை நாடகம் | : மறைமலையடிகள்; கழக வெளியீடு; மே 1907. |
| சாகுந்தலம் | : வைஜெயந்தி பிரஸ், 1915 |
| சாகுந்தலம் | க. சந்தானம் (தமிழாக்கியவர்); புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்; 1953 |

## நடிக்க பெற்ற சகுந்தலை நாடகங்கள்

| | | |
|---|---|---|
| சகுந்தலா சரித்திரம் | - | ச.சு. சங்கரலிங்கக் கவிராயர் |
| சகுந்தலை | - | பம்மல் சம்பந்த முதலியார் |

## விலாச வகை நூல்களின் பட்டியல்

| | | |
|---|---|---|
| அண்டகோள விலாசம் | - | வேம்பத்துர் முத்து-வேங்கட சுப்பையன்; 1954 |
| அரிச்சந்திர விலாகம் | - | அரங்கப் பிள்ளை கவிராயர்; 1875 |
| அரிச்சந்திர விலாசம் | - | பழவேற்காடு அரங்கப் பிள்ளை கவிராயர்; 1875 |
| அரிச்சந்திர விலாசம் | - | பி. வெங்கட்ராம உபாத்தியாயர்; 1873 |
| அரிச்சந்திர விலாசம் | - | வேலாயுத முதலியார்; 1888 |
| ஆதாம் ஏவாள் விலாசம் | - | யாக்கோபு சாமு |
| ஆதார விலாசம் | - | வேலாயுத முதலியார்; 1882 |
| உபமன்னியு பக்த விலாசம் | - | இரா. நாகசாமி (வடமொழி நூல்) |
| காஞ்சிபுரம் ஸ்ரீ கருக்கினில் அமர்ந்தவள் திருவருள் விலாசம் | - | இராமநுச முதலியார்;1886 |
| கானோபாத்திரி விலாசம் | - | டி. காத்தமுத்து தாஸர்; 1909 |
| கிருஷ்ணகோபிகா விலாசம் | - | ஸ்ரீ நிவாச ஐயங்கார்; 1897 |
| கீசக விலாசம் | - | வேலூர்க் கண்ணையா நாயுடு;1897 |
| குசேல விலாசம் | - | சேஷகிரி ஐயங்கார்; 1876 |

| | | |
|---|---|---|
| சகுந்தலை விலாசம் | - | இராமச்சந்திரக் கவிராயர்; 1876; 1888 |
| சகுந்தலை விலாசம் | - | லஷ்மி அம்மாள்; 1887 |
| சத்திய பாஷா அரிச்சந்திர விலாசம் | - | அப்பாவுப் பிள்ளை; 1883 |
| சந்திர விலாசம் | - | மாம்பழக் கவி சிங்க நாவலர்; 1888 |
| சந்திரிகா உஹாணஸ விலாசம் | | |
| சமுத்திர விலாசம் | - | கடிகை முத்துப் புலவர் |
| சித்திராங்கிவிலாசம் | - | அப்பாவுப் பிள்ளை; 1878; 1883 |
| சித்திராங்கதை விலாசம் | - | பரசுராம கவி; 1874 |
| சிதம்பர விலாசம் | - | மு. பசுபதி;1980 |
| சிறுதொண்ட நாயனார் விலாசம் | - | பரசுராம கவி; 1881 |
| சுந்தரர் விலாசம் | - | அண்ணிய பூபன்; 1931 |
| சுமதி விலாசம் | - | ஆள்வாரப் பிள்ளை; 1868 |
| சோழ விலாசம் | - | அப்பாவுப் பிள்ளை; 1886; 1898 |
| தாருக விலாசம் | - | இராமச்சந்திர கவிராயர் |
| திருநீலகண்ட நாயனார் விலாசம் | - | வேங்கடாசலம் பிள்ளை; 1875 |
| தேசிங்கு ராஜ விலாசம் | - | மதுரை முத்துக் கவி; 1869 |
| நளச் சக்கரவர்த்தி விலாசம் | - | யாழ்பாணம் இராமலிங்கம் பிள்ளை |
| நள விலாசம் | - | தாமோதர முதலியார்; 1872; 1887 |
| நாலு மந்திரி விலாசம் | - | தாமோதர முதலியார்; 1872 |

| | | |
|---|---|---|
| பாண்டிய கேளீ விலாச நாடகம் | | |
| பாரத விலாசம் | | அப்துல் கரீம் சாயபு; 1874 |
| பாரத விலாசம் | - | கிருஷ்ணசாமிப் பிள்ளை; 1876 |
| பாரத விலாசம் | - | முகம்மது இப்ராஹிம்; 1879 |
| பாரத விலாசம் | - | வேலாயுதப் புலவர்; 1880 |
| பாவலராக தாள சிங்காராதி அபிநய தர்ப்பண விலாசம் | - | 1955 பிரகலாத விலாசம் |
| | - | அரங்கநாத கவி; 1876 |
| பிரதாப சந்திர விலாசம் | - | உ.ப.வ. இராமசாமி; 1915 |
| பூதத்தம்பி விலாசம் | - | தாவீது கொஸ்தீன்; 1888 |
| பூதர விலாசம் | - | வ.ரா. கல்யாணசுந்தரம்; 1948 |
| பூலோக தேவேந்திர விலாசம் | - | வ. வேணுகோபாலன்; 1948 |
| மங்களவல்லி விலாசம் | - | நாராயணசாமிப் பிள்ளை; 1882; 1893 |
| மகாபாரத விலாசம் | - | இராமச்சந்திர கவிராயர் |
| மத்த விலாசம் | - | தமிழாக்கியவர் மயிலை.சீனி. வேங்கடசாமி |
| மதன சுந்தரபிரசாத சந்தான விலாசம் | - | அருணாசலக் கவி |
| மன்மத விலாசம் | - | தாண்டவராய முதலியார்; 1880,1882 |
| மாணிக்க வாசகர் விலாசம் | - | யாழ்ப்பாணம் இராமலிங்கப் பிள்ளை |

| | | |
|---|---|---|
| மாணிக்க வாசக சுவாமி விலாசம் | - | குப்புசாமி கிராமணி; 1869 |
| மார்க்கண்டேயர் விலாசம் | - | சுப்ப ராமய்யர்;1875 |
| மார்க்கண்டேயர் விலாசம் | - | சுப்பிரமணிய ஐயர்; 1879 |
| மார்க்கண்டேயர் விலாசம் | - | வெங்கட்ராம உபாத்தியாயர்; 1868 |
| முத்தையன் (எ) வள்ளியம்மை விலாசம் | - | அருணாசல முதலியார் |
| மோகனாங்கி விலாசம் | - | திருச்செந்தூர் ஒளிமுத்து சுப்பிரமணிய பண்டிதர்; 1899 |
| யயாதி விலாசம் | - | பையனூர் வரதராஜ பிள்ளை; 1995 |
| ருக்குமாங்கத விலாசம் | - | இராமச்சந்திர கவி;1882 |
| வல்லாள மகாராசன் விலாசம் | - | 1888 |
| விஷ்ணு சாகராஜ விலாசம் | - | வ. வேணுகோபாலன்; 1980 |
| ஸ்ரீ மகா பாரத விலாசம் | - | இராமாநுச சுவாமிகள்; 1882 |

# செய்யுள் முதற் குறிப்பு அகராதி


| | |
|---|---|
| அகத்துள் இருளை | 10 |
| அகன்படு குழியை | 16 |
| அடியென்னை | 94 |
| அதிர்கழல் வீரர் | 11 |
| அப்பனே வாராய் | 113 |
| அபுரூபமான | 106 |
| அமரிசந்திர கேசரி | 8 |
| அவனித் தனிலொரு | 110 |
| அன்றே யுன்றிரு | 66 |
| அன்னப் பெடையோ | 43 |
| அன்னமே கேளாய் | 62 |
| அனைவரும் கேளிர் | 114 |
| ஆரடி பெண்ணே | 89 |
| ஆரலுமதி ரோகிணியும் | 69 |
| ஆராரோ ஆராரோ | 80 |
| ஆருக்குஞ் சத்தியம் | 72 |
| ஆனாலு நீயே | 104 |
| ஆனைமுகத் தேவருக்கு | 119 |
| இத்தை நாமறியோ | 116 |
| இராசராசர் பரவிய | 37 |
| இவள் மனையாளாம் | 91 |
| இன்னவை நிகழுங் | 117 |
| எங்கே கற்றாயிந்த | 100 |
| எந்தை கண்ணுவனார் | 61 |
| எந்தையெனும் | 53 |
| எப்போது என்னை | 108 |
| என்பெரு மனையாள் | 59 |

| | |
|---|---|
| என்று மனத்தில் | 3 |
| என்ன காரணம் அடி | 76 |
| என்ன செய்குவேன் | 78 |
| என்ன செய்வேன் ஏது | 85 |
| என்ன தான் கற்றாள் | 109 |
| என்னென்ன பாடுபட்டே | 39 |
| என்னைப் போல் | 77 |
| ஏற விட்டேணியை | 107 |
| ஐயா வுன்னை | 83 |
| ஒட்டிய வுலகத்தீமை | 34 |
| ஒருவரொப்பிலா பிள்ளை | 79 |
| கட்டியக்காரன் வந்தானே | 35 |
| கண்கள் போதாதே | 17 |
| கண்ணுவர் வந்தார் | 28 |
| கண்ணுவ ரிருப்பிட | 95 |
| கல்லெனத் திரண்ட | 57 |
| கற்றமுனி வருன்னை | 54 |
| கன்னியை தம்மை | 60 |
| காமாயுத விழி | 20 |
| கார் கொண்ட | 51 |
| கானே மருவிய | 68 |
| குடிகள் வந்தாரே | 40 |
| கெண நாயகரும் | 13 |
| கேளா யிளமயிலே | 65 |
| சங்கரனருள் | 36 |
| சதிபுருஷர்க் | 103 |
| சதிர் பெருமறை | 38 |
| சந்திர குலத்தில் | 88 |
| சித்திரமா ஒளிவீசும் | 44 |
| சீரார் மயிலைவளர் | 1 |
| சொக்கிப் போகுதே | 50 |

| | |
|---|---|
| சொல்லா ரெனஉரைத்த | 55 |
| சொல்லுமென்று | 90 |
| தப்பியெப்படி பிழைப்போம் | 15 |
| தவமுனி போன | 33 |
| தன்னிகரில்லா | 30 |
| தார்குழல் வனிதை | 2 |
| திகழு மாணிக்கமோ | 18 |
| திங்கட் பிறையெனும் | 24 |
| திருமகள் போலும் | 86 |
| தீர்க்கிறேன் வாடி | 25 |
| துன்னுஞ் சடைமுடி | 26 |
| தெரியவர்க் கரசே | 46 |
| தேவர்கள் வாழி | 118 |
| தொடு முழுப்பூசணி | 93 |
| நகுந்தலை மாலை | 6 |
| நம்படி பெண்ணே | 63 |
| நம்பி மோசம் | 84 |
| நல்லயிடமிதுவே | 14 |
| நன்னாலும் வேதத் | 4 |
| நற்றவர் முனிவர் | 73 |
| நாதனே கலஞ்சேர் | 81 |
| நாதனே வாரும் | 67 |
| நான் செய்த | 19 |
| பஞ்சவர் தூத | 9 |
| பஞ்சேந்திரிய மடக்கிக் | 22 |
| பல கலைகளும் | 5 |
| பாவிச் சிலை | 71 |
| புகுந்தலை கொழிக்கு | 12 |
| பூப்பறிப்போம் அம்மா | 32 |
| பொய் வந்து | 99 |
| பொன்னின் முடிபூண்டு | 45 |

பொன்னே வாழி 82
போகிப்போம் வாடி 21
போ போ 96
மகிபநான் 47
மகுடபதி துஷ்டியந்த 115
மங்கை சகுந்தலையு 75
மண்ணின் மேனின்று 97
மயலாகினேன் மானே 49
மலர்வுற்றவர் 70
மன்னனே கேளாய் 111
மன்னனே சரணம் 87
மன்னிய வுலகை 58
மனைவி யென்றதுவே 92
மின்னு புகழ் 27
முதிர் சுவையின் 7
மெய்யு நல்லறமும் 64
மேதினிலே விசுவாமித்திரன் 31
வடதிசை இமையச் 29
வந்த வாகாஷவாணி 112
வலிய வென் 105
வனத்திற் தனித்து 101
வனவேட்டை தான் 102
வாராது காணும் 23
வாரும் வாரும் 42
விண்ணின் அமுதே 56
விரகம் பொல்லாதே 52
வீணார வீணி 98
வேட்டையிற் தனித்தே 74
வேடர் நாங்களே 41
வேந்தர்கள் வேந்தன் 48

# அருஞ்சொற் பொருள் அகராதி

| | |
|---|---|
| அங்குசம் | - யானையை அடக்கும் கருவி |
| அடவியர் | - சதுரக்கள்ளி |
| அதிசோபம் | - மிகுந்த அழகு |
| அதிர் கழல் | - ஒலிக்கின்ற கழல் |
| அந்தரம் | - வானம் |
| அப்பியே | - தமக்கையே |
| அபுரூபம் | - மிக்க அழகுள்ள |
| அம்புவி | - அழகு நிறைந்த பூமி |
| அலங்கிருதம் | - சிங்காரம் |
| அவனி | - உலகம் |
| அன்னியன் | - பிறன் |
| ஆகு | - பெருச்சாளி |
| ஆரணியம் | - காடு |
| ஆளி | - ஆளுதல் |
| இங்கிதம் | - இனிய மனவுணர்ச்சி |
| இச்சை | - விருப்பம் |
| இந்திர சாலம் | - மாய வித்தை |
| இற்றுப்போதல் | - முரிந்து போதல் |
| உசிதம் | - உயர்ந்தது: மேன்மை |
| கலஞ்சேர் | - ஆயுதம் |
| கலந்தை | - பெருமை |
| கள்ளம் | - திருட்டுத்தனம் |
| களரி | - காடு |
| களித்தல் | - மகிழ்தல் |
| கன்னல் | - கற்கண்டு |

காதி - விசுவாமித்திரரின் தந்தை
காதை - உட்பிரிவு
கிருபை - அருட்பார்வை
கீர்த்தி - புகழ்
குதலைமொழி - இனியமொழி
குலவு - வளைவு
குலாமலர் - உலோபிகள்
கொலு - அரசசபை
கொற்றவன் - அரசன்
கோதிலா - குற்றமில்லாத
சகத்துள் - உலகத்திலுள்ள
சங்கற்பம் - நியமம்
சஞ்சாரம் - நடமாட்டம்
சஞ்சீவி - உயிர் காக்கும் மூலிகை
சடம் - உடல்
சதிர் - நாட்டியம்
சதுர் மறை - நான்கு வேதம்
சந்திராதித்தரை - சந்திர சூரியர்
சமுசயமில்லை - ஐயமில்லை
சரற்காலம் - கார்காலம்
சரிதை - வரலாறு
சலசை - திருமகள்
சாமரை - கவரி
சித்தசன் - மன்மதன்
சித்திரம் - அழகு
சிந்தை - மனம்
சூது - பொய்
செலவு - பயணம்
தமி - தனிமை
தமியன் - தனித்தவன்

| | |
|---|---|
| தரணி | - உலகம் |
| துந்துமி | - பேரிகை |
| துன்னும் | - செறிந்திடும் |
| தேகம் | - உடல் |
| தையல் | - பெண் |
| நற்றவர் | - நல்லறிவுடையோர் |
| நிருவிகற்ப | - விகற்ப நிலையற்ற |
| பக்கம் | - விலாப்புறம் |
| பங்கயம் | - தாமரை |
| பஞ்சேந்திரியம் | - ஐம்புலன்கள் |
| பரிபாலனம் | - ஆளுதல் |
| பரிவு | - நலனில் அக்கறை |
| பனுவல் | - கல்வி |
| பிரதானி | - அமைச்சர் |
| புடமிட்ட | - தூய்மை படுத்திய |
| புரப்ப | - பாதுகாக்க |
| பூதலம் | - பூமி |
| மகத்துள் | - பெருமை |
| மகிபன் | - அரசன் |
| மட்டி | - ஒழுங்கின்மை |
| மயல் | - ஆசை,காமவிருப்பு |
| மருப்பு | - யானைத் தந்தம் |
| மருவி | - கலந்திருந்தல் |
| மருவு | - மணம் |
| மருவுதல் | - தியானித்தல் |
| மலரயன் | - பிரமன் |
| முகிழ்நகை | - புன்சிரிப்பு |
| முயங்கி | - புணர்ந்து |
| முந்நீர் (முன்னீர்) | - கடல் |

| | | |
|---|---|---|
| மெய் | - | உயிர் |
| வண்ணம் | - | வகை,இனம் |
| வல்லாண்மை | - | பேராற்றல் |
| வல்லியம் | - | புலி |
| விகிதம் | - | தகுதி,செயல் |
| விசனப்படுதல் | - | வருத்தப்படுதல் |
| விதரண | - | சொல்வன்மையன் |
| விதனம் | - | துன்பம்,மனத்துயர் |
| விம்பம் | - | ஒளி |
| விமலி | - | பார்வதி தேவி |
| விரகம் | - | பிரிவு, காமம் |
| வில்லங்கம் | - | வியவகாரம் |
| விலாசம் | - | நாடகநூல் |
| விற்பன்னர் | - | ஆற்றலுடையவர் |

# துணை நூற்பட்டியல்


1. அச்சும் பதிப்பும் - மா.சு. சம்பந்தன். மணிவாகர் பதிப்பகம் சென்னை டிசம்பர், 1997
2. சகுந்தலை (அ) காணாமற்போன கணையாழி - ராவ்சாகிப் பாவ நந்தம்பிள்ளை வைஜெயந்தி பிரஸ், 1912
3. சாகுந்தல நாடகம் - மறைமலையடிகள், கழக்வெளியீடு, சென்னை மே, 1957
4. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் - மயிலை சீனி. வேங்கடசாமி மெய்யப்பன் தமிழாய்வகம் சிதம்பரம் ஜனவரி 2001
5. வியாசபாரதம் - ஜோதி, வ. எம்.ஏ. வர்த்மானன் பதிப்பகம், சென்னை, 1995
6. வில்லிபாரதம் - கே. ராஜகோபார்லாச்சாரியா் ஸ்டார் பிரசாரம், சென்னை டிசம்பர், 1985